REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

பக்கங்கள் 28

விலை: 25.00


# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

07, 2012

ril 01 - April 07, 2012



## நிறம் மாறாத இந்தியாவும் தடம் மாறாத கருணாநிதியும்



## தொலைந்த நாள்களும் தொலையா நினைவுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறம் மாறாத இந்தியாவும் தடம் மாறாத கருணாநிதியும்

இந்தியா இலங்கைத் தமிழ் மக்களுக்கு விரோதமாகச் செயற்படுவதிலும், இலங்கை அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்குத் துணை பேராவதிலும் இன்னும் உறுதியாகவே உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சந்திரசேகர ஆசாத்

ஜெனீவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இலங்கைப் பிரதிநிதிகள் இத்தீர்மானத்தைத் தோற்கடிக்க எடுத்த பகீரத முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போய்விட்டன. இத்தீர்மானம் தொடர்பாக இந்தியா இலங்கைக்கு ஆதரவளிக்கும் அல்லது நடுநிலை வகிக்கும் எனவே எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் அது தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துவிட்டது. இது ஒட்டு மொத்தத்தில் இலங்கைக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்த போதிலும் இந்தியா இலங்கை தொடர்பான தன் விசுவாசத்தைக் காட்டத் தவறவில்லை.

இத்தீர்மானம் தொடர்பாக மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி ஒரு நாட்டின் போர்க் குற்றங்கள், மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளும் உரிமை அந்தந்த நாடுகளுக்கே உண்டு எனத் தெரிவித்திருந்தார். அது மட்டுமின்றி இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அமுல்படுத்துவது தொடர்பாக அமைக்கப்படும் குழு உறுப்பு நாடுகளின் ஆலோசனையின் பேரிலேயே அமைக்கப்பட வேண்டும் என ஒரு திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்ற கோரிக்கையை இந்தியா முன் வைத்தது. ஆனால் அமெரிக்கா அதை நிராகரித்து விட்டது. இலங்கைக்கு ஆதரவான நாடுகளைக் கொண்டு அமைப்பதன் மூலம் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைப் பலவீனப்படுத்தும் ஒரு நோக்கத்துடனேயே இக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அக் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்த போதிலும் இந்தியாவின் மறைமுக அழுத்தம் காரணமாக மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்புப் பணிகள் இலங்கை அரசின் அனுமதியுடனேயே உள்நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அம்சம் இத்தீர்மானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இது கூட நடைமுறைப்படுத்தப்படும்போது அமெரிக்கத் தீர்மானம் பலவீனப்படுத்தப்படக் கூடிய வாய்ப்புகள் நிறையவே உண்டு. வழமை போன்று இலங்கை அரசு இந்த அம்சத்தின் மூலம் தனது ஏமாற்று வித்தைகளை அரங்கேற்ற முடியும்.

குறிப்பாக இக்குழுவினர் இங்கு விஜயம் செய்யம் போது சில குறிப்பிட்ட நபர்களுடனான சந்திப்புகளை ஏற்பாடு செய்யப்படும். அதாவது அமைச்சர்கள், அரச அதிகாரிகள் ஆகியோருடனான சந்திப்புகள் கலந்துரையாடல்களே ஏற்பாடு செய்யப்படும். அவர்கள் அழகான அறிக்கைகளையும் புள்ளி விபரங்களையும் சமர்ப்பித்து எல்லாப் பரிந்துரைகளும் நேர்மையாக நிறைவேற்றப்படுவதாக ஒரு போலித் தோற்றப்பாட்டைக் காண்பிப்பார்கள். இது எவ்வளவு தூரம் மனித உரிமைகள் பேரவையின் நோக்கத்தை நீர்த்துப் போக வைக்கும் என்பதை நாம் பரிந்து கொள்ளமுடியும்.

உதாரணமாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இராணுவத்தினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனரா என்பதைக் கண்டறிய இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய அவர்களால் இராணுவ அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இவ்விசாரணை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இராணுவத்தளபதி இராணுவத்தினர் எவரும் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லையெனவும், அப்படி போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகச் சாட்சியளிக்க எவரும் முன்வரவில்லை எனவும், படையினர் மனிதாபிமான நடவடிக்கைகளையே மேற்கொண்டனர் எனவும் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழுவில் காணாமல் போனோர் தொடர்பாகச் சாட்சியமளித்த பலரிற்குப் பலவிதமான நெருக்கடிகள் கொடுக்கப்பட்டதை நாமறிவோம். புலனாய்வுப் பிரிவினர் அவர்களை விசாரணைக்கு வரும்படி மிரட்டியதையும் மறந்துவிட முடியாது. இப்படியான நிலையில் அரசால் அமைக்கப்படும் விசாரணைக்குழுக்களில் எப்படி மக்கள் அச்சமின்றிச் சாட்சியளிக்க முடியும். வெள்ளைவான் கடத்தல்கள், காணாமற் போதல்கள், இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் கொலைகள் எனச் சட்டம் ஒழுங்கு போன்றவை சீரழிந்து போயுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது கருத்துகளைப் பயமின்றி எப்படி வெளியிட முடியும்? காணாமற் போனோரைக் கண்டு பிடித்துத் தருமாறு போராட்டம் நடத்துபவர்களே காணாமற் போகுமளவுக்கு இங்கு அரக்கத்தனம் அரங்கேற்றப்படுகிறது.

மேலும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் குரல் எழுப்பும் எவரும் தேசத்துரோகிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர். அவர்கள் இந்த நாட்டுக்கு விரோதமாகச் செயற்படுபவர்கள் எனவும் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் எனவும் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு கருத்து ஆழமாகப் பதிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் அரசின் அமைச்சர்களான மேர்வின் சில்வா, விமல் வீரவன்ச, சம்பிக்கரணவக்க போன்றவர்கள் சந்திச் சண்டியர்கள் போன்று பகிரங்கமாக வன்முறை மிரட்டல்களை விடுத்து வருகின்றனர். ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற அமைப்புகள் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தினால் நாடு பரந்த அளவில் போராட்டங்களை நடத்தப் போவதாக மிரட்டி வருகின்றன.

இப்படியான ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும், காடைத்தனங்களையும் கட்டுப்படுத்த எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது மட்டுமின்றி வார்த்தையளவில் கூட இவை அரசால் கண்டிக்கப்படவுமில்லை.

இப்படியான ஒரு அரசு முறையான சுதந்திரமான ஒரு சர்வதேசக் கண்காணிப்பு இல்லா நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றாது என்பது திண்ணம். ஆனால் பொய்யான அறிக்கைகளையும் சமர்ப்பித்து மனித உரிமைகள் பேரவையின் குழுவினரை ஏமாற்றும் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இவ்வகையில் இலங்கை அரசின் அனுமதியுடனேயே மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அச்சம் எவ்வளவு தூரம் அமெரிக்காவின் தீர்மானத்தைப் பலவீனப்படுத்தும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இத்தீர்மானத்தின் மூலம் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்த அதே சமயத்தில் இலங்கை அரசை மீண்டும் ஒரு முறை காப்பாற்றி விட்டது. அந்நிலைமை இலங்கை அரசு மனித உரிமைகள் பேரவையின் சார்பில் அதன் ஆணையாளர் நதநீதப்பிள்ளையை விட வேறு எவரும் நாட்டுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அறிவிக்குமளவுக்கு துணிவைக் கொடுத்துள்ளது.

எனவே இந்தியா இலங்கைத் தமிழ் மக்களுக்கு விரோதமாகச் செயற்படுவதிலும், இலங்கை அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்குத் துணை பேராவதிலும் இன்னும் உறுதியாகவே உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு விரோதமான இத்தகைய நிலைப்பாடு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் அண்மையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா இலங்கை அரசுக்கு சாதகமான முறையில் நடந்து கொண்டதாகவும், இலங்கையில் இறைமையைக் காப்பாற்றும் வகையில் நடந்து இலங்கைக்கு ஒரு வாய்ப்பான சூழலை உருவாக்கியதாகவும் அக்கடிதத்தில் தெரிவித்திருந்தார். மேலும் அதில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக 13வது திருத்தச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டும் எனவும் கோரப்படுகின்றது.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது மஹிந்த ராஜபக்-வாலும், இலங்கை வந்து திரும்பும் ராஜதந்திரிகளாலும் அடிக்கடி கூறப்படும் ஒரு வாய்ப்பாடு மட்டும்தான்.

ஏற்கனவே 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள வடக்குக் கிழக்கு இணைப்பு ஒரு நீதிமன்ற தீர்ப்பின் மூலம் ரத்துச் செய்யப்பட்டு விட்டது. பொலிஸ். பொது நிர்வாக அதிகாரங்கள் 18ஆவது திருத்தச் சட்டம் மூலம் பறிக்கப்பட்டு விட்டது. காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கப் போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக் உறுதிபடக் கூறி வருகிறார். எனவே 13ஆவது திருத்தச் சட்டம் மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவது என்பது கூட ஒரு அப்பட்டமான ஏமாற்றாகும்.

தமிழ் மக்களுக்கு உதவி புரிவது என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்திய அரசின் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதே யதார்த்த நிலைமை. அதே பாதையில் தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி முன்னர் ஆடிய நாடயகங்களை நாமறிவோம். போரின் இறுதி நாட்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்யப் போவதாகவும், சாகும் வரை உண்ணாவிரதம் எனவும் அவர் நாடகமாடியதும், போர் நிறுத்தம் வந்து விட்டது எனக் கூறி அனைத்தையும் கைவிட்டும் சில அதிரடிக் காட்சிகளை அரங்கேற்றினார். அக்காலப்பகுதியில் நாற்பதினாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்களைக் காப்பாற்றி விட்டதாக ஜெபம் பண்ண ஆரம்பித்துவிட்டார்.

இப்போதும் இந்தியா அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்காவிட்டால் தி.மு.க. அமைச்சர்கள் தங்கள் பதவிகளை ராஜநாமா செய்யப்போவதாகச் சவால் விட்டார். இந்தியப் பிரதமர் அமெரிக்கத் தீர்மானத்தை அதரிக்கப் போவதாக அறிவித்ததும் தனது போராட்டம் வெற்றி பெற்றதாகக் கூறி சவால்களைக் கட்டி மூலையில் போட்டு விட்டார்.

பின்பு இந்தியா அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கிய அதே வேளையின் அதன் வீச்சை குறைக்கவும் நலிய வைக்கவும் முயற்சிகள் எடுத்த போதும் ஒரு சிறு ஆட்சேபனையைக் கூட வெளியிடவில்லை. இன்று அத் தீர்மானத்தை இலங்கை நலிய வைக்கும் வகையில் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கையைக் கண்டிக்கவுமில்லை. மாற்று நடவடிக்கைகள் எடுக்கும் வகையில் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவுமில்லை.

அதாவது இந்திய மத்திய அரசும், தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக இதுவரை எந்த நடைமுறைகளைக் கையாண்டு வந்தனரோ அதே பாணியில் சற்றும் தடம் புரளாமல் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர்.


அயலில் உள்ள ஒரு பெரிய நாடு என்ற வகையிலும், ஒரு பிராந்திய வல்லரசாக இருந்த போதிலும் எமக்காக விசுவாசமாகக் குரல் கொடுக்கும் கோடி உறவுகளைக் கொண்ட நாடு என்ற வகையிலும் நாம் அந்நாட்டின் உறவுகளை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால், இந்திய மத்திய அரசும், கருணாநிதியும் தமிழகத் தமிழ் மக்களின் வாக்குகளை வெல்ல எமது பிரச்சினையை பகடைக்காயாகப் பாவித்து வருகின்றனர். அதே வேளையில் எம்மைப் பலிக்கடாய்களாக்கி இலங்கை அரசின் நல்லெண்ணத்தைப் பெற்று வருகின்றனர். ஆனால் தமிழகத் தமிழ் மக்களும் இந்தியாவெங்கும் பரந்திருக்கும் நல்லெண்ணம் கொண்ட நியாயபூர்வமான சக்திகளும் இந்திய மத்திய அரசுக்கும், தி.மு.க.வினருக்கும் நிச்சயமாகத் தகுந்த பாடத்தைக் கற்றுக் கொடுப்பார்கள்.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்த வரை அமெரிக்க தீர்மானம் ஒரு ஆரம்பம் மட்டுமே ஆனால் இலங்கை அரசின் அநாகரீகமான நடைமுறைகளும், இதைக் கையாளும் விதமும் அதை சர்வதேசத் தளத்தில் தனிமைப்படுத்தும் நிலையை உருவாக்கும். இது காலப்போக்கில் இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை எட்டும் நிலைக்கு சில சாதகமான சூழ்நிலையை உருவாக்கலாம்....?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தொலையா நினைவுகள்

# வாழ்வு வலிய

■ நெடுந்தீவு மகேஷ்

அந்தச் சண்டியனுக்கு எதிர்நிற்க அனைவருமே தயங்கினர். எதற்கெடுத்தாலும் அடி, உதை, குத்து, கொலை என ஊரையே பயங்கொள்ளச் செய்தவர் அவர். அவரின் வாழ்வு, திடீரெனப் பாரிசவாத நோயின் தாக்கத்தால் படுக்கையில் வீழ்ந்து வருந்தும் வகையில் ஆகிப் போனது. உற்சாகமாக இருந்தவரின் உடல் ஒடுங்கிச் சுருங்கிப் பாயும் படுக்கையும் ஆனார்.

அவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இருந்தது. எனது பெரியப்பாவான அவரது கடந்த கால மனித நேயமற்ற சண்டித்தன செயற்பாடுகள் எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. அதனால் அவர் நோயுற்ற நிலையில் அவரைப் போய்ப் பார்த்துச் சுகம் விசாரிக்கும் விருப்பமும் இருக்கவில்லை.

எனது தாயாரின் வற்புறுத்தலின் பேரில், அவரை அன்று நான் பார்க்கச் சென்றிருந்தேன். கட்டிலில் படுக்கையில் கை கால்கள் அசைவற்றுக் கண்கள் சோர வீட்டின் கூரையைப் பார்த்தவாறு படுத்திருந்தார். அவரின் அருகிலே சென்ற நான் மிகவும் பரிதாபத்தோடு அவரைப் பார்த்து நின்றேன்.

பெரியம்மா என்னைக் கண்டதும், பெரியப்பாவின் நிலையை மிகவும் வருத்தத்தோடு எடுத்துச் சொன்னார். அவர்களின் இரண்டு பிள்ளைகளும் வெளிநாட்டிலிருந்து வரவிருப்பதாகவும் தெரிவித்தார். நான் பெரியப்பாவின் கட்டிலின் அருகிலிருந்த கதிரையில் இருந்தவாறே அவரது முகத்தை உற்று நோக்கினேன.

“பெரியப்பா” என்று குரல் கொடுத்தேன். அவர் என்னைக் கண்டு கொண்டார். சிறிது நேர அமைதியின் பின்னர், ஏதோ சொல்லுவதற்காக வாயசைத்தார். ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

ஏதோ சொல்லுவதற்கும் கேட்பதற்கும் அந்தரப்படுவதாக எனக்குத் தெரிந்தது. வாய் பேச உன்னுவது தெரிகிறது. பேச்சு விளங்கவில்லை. பலமுறை முயன்றார். எனக்கு அவரது எண்ணம், தேவை, என்பவை எதனையுமே அறியும் வகையில் அவரது சைகைகளைப் புரிந்து கொள்ளும் திறன் இருக்கவில்லை.

பெரியம்மாவுக்கு அவரது சைகைகளும் அவர் வாயசைக்கும் வகைகளும் தெரிந்திருக்கலாம் என எண்ணினேன். ஏனெனில் பெரியப்பாவுடன் நெருக்கமாகவும், ஈடுபாட்டுடனும் அவருக்கு உதவி செய்பவர் என்பதால் அவர் சொல்லத் தவிக்கும் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளும் திறன் அவரிடம் உண்டென நினைத்தேன். பெரியம்மாவை அழைத்தேன்.

“பெரியம்மா, பெரியப்பா ஏதோ சொல்ல அந்தரப்படுகின்றார் அது என்னென்பது எனக்கு விளங்கவில்லை ஏதோ கேட்கிறார்.” என்றேன் நிதானமாக அவரருகில் வந்த பெரியம்மா, அவரது வாயசைப்பையும் உடல் அசைவையும் உணர்ந்தவராக பெரியப்பாவின் தோள்மீது அமர்ந்து கொண்டு அவரது குருதியை உறிஞ்சிக் கொண்டிருந்த அந்தச் சிறிய நுளம்பைத் தட்டிக் கலைத்தார். பெரியப்பாவின் பரிதாப நிலையைப் பார்த்தேன்.

பெரியப்பா தனது தோள் மீதிருந்து இரத்தம் குடித்த ஒரு சிறிய நுளம்பைக் கூடக் கலைக்கும் வகையற்றுப் பலமின்றிச் சோர்ந்து போனார். ஊரைக் கலக்கிய சண்டியன் எவரது நீதி நியாயங்களையும் ஏற்றுக் கொள்ளாது சண்டித்தனம் செய்தவர். பலசாலி! இன்று அவரது சண்டித்தனம் அடங்கிப்போன நிலையில் மனம் அழுதது தெரிந்தது.

ஆடிய ஆட்டம் விரைவிலேயே அடங்கிப் போனது. பலமிருந்த போது நீதி நியாயத்திற்குப் பயப்படாதவர் பலமிழந்தபோது ஒரு நுளம்பைக் கூட அடித்து விரட்டும் திராணியற்றுப் பலரது கேலிக்கும் உரியவரானார். வாழ்வும், வளமும், ஆட்சியும், அதிகாரமும் நிலைத்திருப்பதில்லை. அவை தன்னிலை குலைந்து சரியும் போது கேலிக்குரியதாகவே பார்க்கப்படும். ஆனால் உயர்ந்த நிலையில் பலம் பொருந்திய வாழ்வில் அயலவரை நேசித்து அன்பு செய்து நீதி காப்பவன் கேலிகளுக்கு உள்ளாவதில்லை. அவன் அனுதாபத்திற்கு உரியவனாகிறான். பலருடைய அன்புக்கும் உரியவனாக வாழ்ந்தமையால் ஊரார் அவரைப் போற்றுவர். வாழ்வு என்பதன் பொருளாகி ஒருவன் மறைந்த பின்னும் வாழ்த்துக்களோடு வாழ்பவனே மனிதன்.

எனவே, பலமும் சக்தியும் இருக்கும் போதே மற்றவரை வருத்தாது பிறர்மீது அன்பு செய்யும் வாழ்வுடன் வாழ்ந்து எங்களை நாங்களே உயர்த்தும் வாழ்க்கைக்கு வழிகண்டு கொள்ளுவோம். நாங்கள் வாழும் வாழ்க்கையே நாம் இறந்த பின்னும் எங்களை வாழ்த்தும் வாழ்க்கையாக வளமுற வாழ்ந்து காட்டுவோம்.



# இயேசுவின் வார்த்தைகளுடன்

வைதேகி தேவராசா



கவிஞர்
கே.எஸ்.திசைராசா

தர்மம் செய்தல் தமிழர் மரபு. தர்மத்துடன் கூடிய செயல்களால் மக்கள் தேடுகின்ற ஆறுதல் இறைவழி பாட்டுக்கும் மேலானது. பசித்தவனுக்கு உணவு கொடுக்கும் வள்ளல்களும் பஞ்சம் பசி போக்கத் தமது செல்வத்தை வாரி வழங்கும் கொடையாளர்களும் இன்று நமது நாட்டை நிறைத்துப் பவனிவரும் காட்சி நாம் அறியாததல்ல. இவர்களிடையே ஒருவனின் தேவைகளுக்கு தாம் உதவுவதைத் தம்பட்டம் அடிக்காமல் மனநிறைவோடு அமைதியாகக் கொடுத்து மௌனமாய் இருப்பவர்களும் இருக்கின்றனர். அயலவருக்கு உதவி செய்து ஆரவாரமின்றி மௌனமாக இருப்பவர்களையே ஆண்டவர் காணுகிறார். அவர்களையே இறைவன் அன்பு செய்கிறார் என்கிறார் இயேசு. இதனைக் கவிதையிலே தந்துவக்கும் கவிஞர் இவர்.

- இரக்க மின்றியே தம்புகழ் கூறிட
  எண்ணிக் கொடை தனை ஈபவர்க்கும்
  தரணி எங்கும் தம்பட்ட மடித்து
  தானம் செய்தோம் எனும் மாந்தருக்கும்
  இருக்கும் நன்மை இறைவனிடமிருந்து
  எடுக்கப் பட்டாயிற்று என்றுரைத்தார்.

இரக்கத்துடனும் உள்ளார்ந்த அன்புடனும் கொடைகளை வழங்காமல் ஊரறியத் தம்பட்டம் அடித்து நிழற்படம் எடுத்து பத்திரிகைகளில் வாழ்த்துச் செய்திகள் பிரசுரித்துச்செய்யப்படும் கொடைகள் இறைவன் முன்னிலையில் பொய்யானவை அவற்றால் பயனேதுவும் இல்லை என்கிறார் இயேசு பெருமான்.

- வலக்கை செய்யும் கொடை எதையும்
  இடக்கை தானறி யாதிருக்க
  கொடுக்கும் போது பிறர் அறியாமல்
  கொடுத்தார்க்கு இல்லை குறைவு என்றார்.

ஒரு கை செய்யும் உதவியை மறுகை அறியாதிருக்கச் செய்வதே மேலான கொடை. அவ்வாறான கொடைகளும் அவற்றை வழங்கிய வள்ளல்களும் இறைவன சந்நிதியில் ஏற்றுக்கொள்ளப்படுவர். அவர்களின் கொடைகளின் மூலமே அவர்களுக்கு மகிழ்வு குறையாத வாழ்வு கிடைக்கும் என்கிறார் இயேசு.


- உள்ளமுற்றும் உண்மையாய்
  உந்தாலி செம்மையாய்
  கள்ளமற்று வேண்டுதல்
  கர்த்தருக் குகந்ததே.
  வீதிமற்றும் சந்தியில்
  வெளிப்புறங்கில் நின்று நாம்
  வேடதாரி போன்றுமே
  வேண்டுதல்கள் செய்திடின்
  ஏதுமில்லை நன்மைகள்
  எம்மவர்க்கு என்பதை
  ஆதியான இறைவனார்
  அழுத்தமாக அருளினார்.

உள்ளத்தில் உண்மையாய் இறைவனின் பரிசுத்த ஆவியின் உந்துதலால் வேண்டும் பிரார்த்தனையே இறைவனுக்கு உகந்த ஆராதனையாகும். அமைதியான ஆராதனைகளை விலக்கி வீதிகளிலும் சந்திகளிலும் மேடைகளிலும் பக்திமான் எனப் பலரும் புகழ வேட மிட்டுக் கொண்டே ஊரறிய உலகறிய வழிபாடு செய்வதால் இறைவனின் அருள் கிடைக்கப் போவதில்லை என்று இயேசு கூறினார்.

- உண்மையான செபமெனில்
  உள்ளறையைப் பூட்டுவீர்
  உள்ளேசென் றிறைவனை
  உள்ளத்துள் அமர்த்துவீர்
  உள்ளரங்க மாக நீவீர்
  ஒப்புவித்த யாவையும்
  வள்ளலார் வழங்குவார்
  வல்ல தேவன் சொல்லிதே.

உண்மையாய் இறைவனோடு உறவாடி அவர் விரும்பும் நல்வழியில் நடந்து உள்ளன்பு பூண்டு மனந் திறந்து தனித்திருந்து மறைவாக உரையாடுவதே - இறைவனுடன் பேசும் உயர்ந்த உன்னத வழி. அதனால் எங்கும் நிறைந்துள்ள இறைவன் உன்னைச் சந்தித்து உன்னோடு பேசுகிறார். நீ கேட்டவற்றை உனக்கு ஈந்து உனது தேவையை நிறைவு செய்கிறார் என்கிறார் இயேசு அவரது வார்த்தைகளை இனிய கவிதை வரிகளாக்கித் தந்துள்ளார் கவிஞர் கே. எஸ். திசைராசா. இவர் ஈழநாடு, உதய தாரகை, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் திரைகடலூர்த் திசையரசன் என்ற புனைபெயரில் கவிதைகளை எழுதியுள்ளார். “இறைமகன் இயேசுவின் வாழ்வும் வழியும்” எனும் அவரது கவிதா மாலையிலிருந்து பெறப்பட்ட கவிதையே இது. பக்திப் பாடல்களையும் விடுதலைக் கவிதைகளையும் எழுதியிருக்கும் இவர், கவிதை இலக்கியத்துடன் நாடகம், இசை ஆகிய கலைகளிலும் ஈடுபாடு கொண்டவர். இவரது இலக்கியப் பணி தொடர வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முற்றிலும் மாறுபட்ட புதிய மினி கணினி

கமோடோர் நிறுவனம் சமீபத்தில் ஒரு சிறிய கணினியை அறிமுகம் செய்திருக்கிறது. இந்த சிறிய கணினிக்கு கமோடோர் அமிகா மினி என்ற பெயரையும் சூட்டியிருக்கிறது. இந்தக் கணினி மிகவும் சிறிய கணினி ஆகும். ஆனால் இந்தக் கணினி நிறைய தொழில் நுட்பங்களுடன் வருகிறது.

தற்போது சிறிய கணினிகளே மக்களால் அதிகம் விரும்பப்படுகிறது. ஏனெனில் இந்தச் சிறிய கணினிகளை மிக எளிதாக எடுத்துச் செல்லமுடியும். அதே நேரத்தில் மிக எளிதாக இடம்மாற்றம் செய்ய முடியும்.

இந்த அமிகா மினிக் கணினி 3.5 ஜிஹெர்ட்ஸ் கடிகார வேகம் கொண்ட இன்டல் கோர் ஐ7-2700கே ப்ராசஸரைக் கொண்டிருக்கிறது. அதோடு 16ஜிபி டிடிஆர்3 ரேமையும் கொண்டிருக்கிறது.

இந்த மினி கணினியில் க்ராபிக்ஸ் வசதியும் பிரமாதமாக உள்ளது. க்ராபிக்ஸ் வசதிக்காக இந்த கணினி 1ஜிபி வீடியோ மெமரியுடன் கூடிய என்விடியா ஜிஇபோர்ட் ஜிடி 430 க்ராபிக்ஸ் கார்டை வழங்குகிறது. மேலும் இந்த கணினி 1ஜிபி ஹார்ட் டிஸ்கைக் கொண்டுள்ளது. மேலும் இந்த கணினி வைபை ரேடியோ மற்றும் ப்ளுரே டிரைவையும் கொண்டுள்ளது. இந்த மினிக் கணினி மிக எளிய டிசைனில் வருகிறது. அதாவது ஒரு சிறிய செவ்வகப் பெட்டி வடிவில் வருகிறது.

## தொழில்வாய்ப்புக்கு பேஸ்புக் தேவையா?

தொழில்வாய்ப்புக்கு வருபவர்களிடம் பேஸ்புக் முகவரியைக் கேட்கும் புதிய வழக்கம் அதிகரித்து வருகிறது.

வளர்ந்து வரும் சமூக ஊடகமான பேஸ்புக் நாளுக்கு நாள் முக்கியத்துவம் பெற்றுவருகிறது. தொழில்தேடி வருபவர்களிடம், பேஸ்புக்கின் முகவரியை கேட்கும் அளவிற்கு, பேஸ்புக் விஸ்வரூபம் எடுத்துவிட்டது என்பது எல்லோருக் கும் ஒரு வித திகைப்பை ஏற்படுத்தும் செய்தியாக தான் இருக்கிறது.

இது போன்ற ஒரு சம்பவம் நடந்தும் கூட இருக்கிறது. நியூயோர்க்கை சேர்ந்த ஜேஸ் பட என்பவர் தொழில் நேர்காணலுக் குச் சென்ற இடத்தில் அவரின் பேஸ்புக் கணக்கு முகவரி கேட்கப்பட்டது என்று ஒரு தகவல் வெளியாகியிருந்தது.


ஆனால், பேஸ்பட தனது பேஸ்புக் முகவரியை கொடுக்க மறுத்துவிட்டதாகவும் தெரிய வந்துள்ளது. பேஸ்புக் என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விடயம். இதை சொல்லுமாறு கேட்பது ஒருவரின் டயரியை படிக்க கேட்பது போன்றுதான் கருதப்படுகிறது.




## வன்மையாகக் கண்டிக்கிறது பேஸ்புக்

தொழிலுக்கு வருபவர்களிடம் இப்போதெல்லாம் பேஸ்புக்கின் பாஸ்வேர்ட் கேட்கப்படுகிறது என்று ஒரு பெரிய முறைப்பாடு வெளியானது. இது நிச்சயம் படித்த பட்டதாரிகளுக்கும், வேலை தேடும் அனைவருக்கும் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கும். இவ்வாறு வேலை தேடி வருவோரிடம் பேஸ்புக்கின் பாஸ்வேர்ட் மற்றும் அதன் முழு விவரத்தினையும் கேட்பது தவறானது என்று கூறியுள்ளது பேஸ்புக். அது மட்டும் அல்லாமல் பேஸ்புக் என்பது ஒருவருடைய தனிப்பட்ட விடயம், பேஸ்புக்கின் பாஸ்வேர்டு மற்றும் அதன் முழு முகவரியின் விவரத்தினையும் கேட்பது என்பது ஒருவருடைய சுதந்திரத்தை பறிப்பது போல் ஆகும். இதனால் பேஸ்புக்கின் பாஸ்வேர்ட் மற்றும் அதன் விவரங்களை பற்றி கேட்கக்கூடாது என்று கடுமையாக கண்டித்து கூறி யுள்ளது பேஸ்புக்.


இப்படி ஒரு வாதியை ஏற்படுத்தியது எளிதாக வேலை தேடிகொள்வதற்காக மட்டுமே தவிர, ஒருவரின் தனிப்பட்ட விடயங்களை ஆராய்வதற்காக அல்ல என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது பேஸ்புக்.



விளையாட்டு மைதானங்களில் தொடங்கிய ரோபோக்கள் படிப்படியாக ஆதிக்கத்தை வளர்த்து கார் தொழிற்சாலைகள், கனரக சாதனங்கள் உற்பத்தி வேலையில் புகுந்தன. பின்னர் மருத்துவமனைகளில் சில குறிப்பிட்ட ஒப்பரேஷன்களையும் வெற்றிகரமாக செய்து சாதனை நிகழ்த்தின.

தற்போது ஜேர்மனி நாட்டில் கார்ல்ஸ்ருஹே நகரைச் சேர்ந்த ஒரு நிறுவனத்தினர் ஓவியம் தீட்டும் ரோபோவை கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ரோபோ முன்பு அமர்ந்தால் போதும் 10 நிமிடங்களில் நமது உருவத்தை மிகவும் தத்ரூபமாக வரைந்து விடுமாம். அதன் செயல்பாடு குறித்து இதனை வடிவமைத்த நிறுவனத்தின் விஞ்ஞானி மாவ்டினா ரிசெர் கூறுகையில், இதில் உள்ள கமரா மனித உருவத்தை படம் எடுத்து, நுட்பமான மென்பொருள் உதவியுடன் ரோபோ கரங்களுக்கு அது கட்டளையிடப்பட்டு உருவம் வரையப்படுகிறது என்றார். விரைவில் இந்த ரோபோ சந்தைகளில் அறிமுகமாகவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



உலகிலேயே மிக வேகமாக ஓடக்கூடிய ரோபோ சீட்டா என்னும் செயற்கை ரோபோவை தயாரித்து விஞ்ஞானிகள் புதிய சாதனை படைத்துள்ளனர். சீட்டா எனும் புலியின் உருவம் கொண்ட ... குறித்த ரோபோ அமெரிக்காவின் பாதுகாப்பு உயர் ஆராய்ச்சி திட்ட நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருப்பது மிக பெரிய சாதனையாக கருதப்படுகிறது. மனிதனை விட மிக வேகமாக ஓடக்கூடிய தொழில்நுட்பம் இந்த ரோபோவில் இணைக்கப்பட்டுள்ளதால், யுத்த களத்தில் மிக வேகமாக எதிரியை துரத்தி பிடிப்பதற்கும், தாக்குவதற்கும் என களத்தில் விட்டு பரிசோதிக்கப்போவதாக இதனை உருவாக்கியுள்ள விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் ஆயுதப் படைப்புக்கள் தொடர்கிறது

குற்றவாளிகளைக் கண்டறிந்து சுடுவது, கலவரத்தில் அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துபவர்களை தாக்குவது போன்ற செயல்களுக்காக அமெரிக்கா புதுவித அதி நவீன ஆயுதத்தை கண்டறிந்துள்ளது.



இந்த ஆயுதம் ஒரு கி.மீ தூரம் பாய்ந்து சென்று தாக்கும். இதனால் உடலில் காயங்கள் ஏதும் ஏற்படாது. ஆனால் உடல் தீப்பிடித்தது போல எரியும்.

ஆனால் இந்த ஆயுதத்தின் மூலம் சில சமயம் மக்களும் காயம் அடைகின்றனர். இதனால் இதற்கான மாற்று தீர்வைக் கண்டறியும் முயற்சியில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டுள்ளது.

ஆக்டிவ் டினையல் சிஸ்டம் (ஏடிஎஸ்) என்று பெயரிடப்பட்டுள்ள மைக்ரோவேவ் கதிர்வீச்சு ஆயுதத்தை அமெரிக்க இராணுவம் உருவாக்கியுள்ளது.

வர்ஜீனியா மாநிலம் குவான்டிகோ நகரில் உள்ள இராணுவ தளத்தில் 2 வாரம் முன்பு நடந்த நிகழ்ச்சியில் மூத்த இராணுவ அதிகாரிகளுக்கு இந்த ஆயுதம் குறித்த செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன் செயல்பாடு குறித்து இராணுவ அதி காரிகள் கூறியதாவது; மரணம் ஏற்படுத் தாத வகையில் தாக்குதல் நடத்தும் ஆயுத ஆராய்ச்சியில் அமெரிக்கா நீண்ட காலமாக ஈடுபட்டு வருகிறது.

15 ஆண்டு முயற்சிக்குப் பிறகு ஏடிஎஸ் ஆயுதம் உருவாக்கப்பட்டுள்ளது. துப்பாக்கியில் இருந்து தோட்டா வெளிப்படுவது போல, ஏடிஎஸ் கருவியில் இருந்து மைக்ரோவேவ் ரேடியோ கதிர்வீச்சு வெளிப்படும்.

வீட்டு உபயோக பொருள்களில் (மைக்ரோவேவ் ஓவன்) இருக்கும் கதிர்வீச்சைவிட இது 100 மடங்கு வலுவாக இருக்கும்.

சக்தி வாய்ந்த லென்ஸ் கருவி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு கி.மீ. தூரத்தில் இருக்கும் எதிரியைக் கூட துல்லியமாக குறிபார்த்து சுட முடியும்.

கருவியில் இருந்து 95 ஜிகா ஹெர்ட்ஸ் என்ற அளவுக்கு கதிர்வீச்சு பாயும். சாதாரண நிலையில் மனிதனின் உடல் வெப்பநிலை 98.6 டிகிரி பாரன்ஹீட். 2 விநாடிக்கு இந்த கதிர்வீச்சு உடலில் பாய்ந்தாலே 130 டிகிரி பாரன்ஹீட் அளவுக்கு வெப்பம் பாயும். உடல் எரியும்.

அதிவேகத்தில் பாய்ந்து செல்லும் கதிர்வீச்சு எதிரியைத் தாக்குவதால் உடல் முழுவதும் பற்றியெரிவது போல எரிச்சல் ஏற்படும். எதிரி நிலைகுலைந்து விடுவார்.

ஆனால் தோலில் மிக மிக சொற்பமான ஆழத்துக்கு (ஒரு இஞ்சில் 64-ல் ஒரு பங்கு) மட்டுமே கதிர்வீச்சு இறங்கும் என்பதால் காயம் ஏற்படாது. மனிதர்கள் மீது 11 ஆயிரத்துக்கும் அதிகமான முறை இந்தக் கதிர்வீச்சு பாய்ச்சி சோதனை செய்யப்பட்டது. அதில் 2 முறை மட்டுமே லேசான காயம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

எனவே இது மிகவும் பாதுகாப்பானது. ஆப்கான் போரின் போது ஏடிஎஸ் ஆயுதம் கொண்டு செல்லப்பட்டது. ஆனால் ஒருமுறைகூட பயன்படுத்தப்படவில்லை என்று அதிகாரிகள் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்
01 ஏப்ரல் - 07 ஏப்ரல் 2012
35, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன் 0115738665
பக்ஸ் 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## தொடர்ந்து தட்டிக்கழிக்க முடியாது!

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்த இலங்கை மீதான தீர்மானம் குறித்த சூடு இன்னமும் அடங்காத படியே உள்ளது. இத்தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளும், அதனை வெற்றிபெறச்செய்வதற்கு அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளும் பரபரப்பான செய்திகளாக ஊடகங்களில் வெளியாகியிருந்தன. அத்தீர்மானம் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பின்னும் அதன் பரபரப்பு தணிந்ததாக இல்லை.

அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட அத்தீர்மானம் ஒரு வகையில் சாதாரணமானதொன்றெனவே கூறலாம். இலங்கையின் ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு என்பது உயர்ந்த அதிகாரங்களைக் கொண்ட ஒரு குழுவாகும். அதனால் அமர்வுகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணைகள் பதிவுசெய்யப்பட்டு, அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னரே அது வெளியிடப்பட்டது. இதில் பல குறைபாடுகள் காணப்பட்ட போதும், சில பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பது குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு பரிகாரம் காணவேண்டும் என்பதே அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயமாகும். இதனை விட, வேறு புதிய ஆலோசனைகளையோ, தடைகளையோ அந்தத் தீர்மானம் வலியுறுத்தவில்லை.

ஆனால், இதனை மிகவும் பாரதூரமான விடயமாக அரசாங்கம் தனது நாட்டு மக்கள் மத்தியில் இன்று பரப்புரை செய்து வருகின்றது. கடும்போக்கு அரசியல்வாதிகள் அமெரிக்காவை கடும் தொனியில் விமர்சித்து வருகின்றனர். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் பிழையானதென அவர்களில் சிலர் இப்போது கூறுகின்றனர்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதும் நிறைவேற்ற முடியாது எனவும் அரச தரப்பு குரல்கள் தெரிவிக்கின்றன. பிரதம மந்திரி கூறுகின்றார் அமெரிக்க கூறுவதற்கெல்லாம் நாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது என முன்னரே தீர்மானித்து விட்டோம் என்று. இவ்வாறு பல முரணான கருத்து வெளிப்பாடுகள் அரசதரப்பினரிடமிருந்து வெளிவந்த வண்ணமுள்ளன.

அமெரிக்கா இலங்கையின் போர்க்குற்றச்சாட்டு குறித்த அறிக்கையை அதன் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல மேற்குலக நாடுகளும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இலங்கையிடம் வலியுறுத்தி வருகின்றன. இவ்வாறு சர்வதேசத்தின் அழுத்தமும் இலங்கையின் மீதானதும் தொடர்வதாகவே தெரிகின்றது.

இந்நிலையில், இந்தியாவின் அணுகுமுறை சற்று வித்தியாசமாக நகர்வதையும் அவதானிக்க முடிகின்றது. அமெரிக்காவின் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக இந்தியாவின் ஆதரவைப்பெற்றுக்கொள்ள இலங்கை அரச பிரதிநிதிகள் பகீரதப்பிரயத்தனங்களில் ஈடுபட்டமை தெரிந்ததே. தமிழ்நாட்டின் அழுத்தம் மற்றும், அமெரிக்காவின் ஆலோசனை என்பவற்றை மீற முடியாத சூழ்நிலையிலேயே பிரேரணைக்கு ஆதரவளிக்கும் கட்டாய நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டது. இருந்தாலும், அப்பிரேரணையில் சில தளர்வுகளை மேற்கொள்ள இந்தியா வழிசெய்ததாகவும் கூறப்படுகின்றது.

இப்போது இந்த சவால்நிறைந்த சிக்கல்களிலிருந்து இலங்கையைப் பாதுகாப்பதற்கான சில வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் இலங்கைக்கு இந்தியா வழங்கி வருகின்றது. இதன்மூலம் மேற்குலகின் அழுத்தங்களிலிருந்து இலங்கையை விடுவித்து எப்போதும் போல் இலங்கையுடனான பழைய உறவைப் பேணுவதற்கு இந்தியா முயன்று வருகின்றமையும் புலப்படுகின்றது. இதனடிப்படையில்தான் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா வலியுறுத்தவுள்ளதாகவும் தெரிகின்றது.

எது எப்படியிருந்தாலும் இலங்கை அரசாங்கம் மேற்குலக நாடுகளைப் பகைத்துக் கொண்டு அதன் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர முடியாது. எனவே, பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேட வேண்டிய நிர்ப்பந்தத்தை இலங்கை நீண்ட காலத்திற்கு தட்டிக்கழிக்கவும் முடியாது.

# தொடரும் அடாவடி அரசியல்

இலங்கையின் ஆளும் தரப்பினரின் பேச்சிலும் போக்கிலும் இனவாதமும் வன்முறையும் எப்போதுமே தொனிப்பதைக் காணமுடிகிறது. இனவாதம், துவேஷம் என்பவற்றை பொதுமக்களின் மனதில் தூண்டும் மேடைப் பேச்சுகளை நடாத்துவதில் இவர்களை விட சமர்த்தர்கள் யாருமே இருக்கமுடியாது. தமது உரைகளின் பிரதானமாக இவற்றை உள்ளடக்கி அரசியல் நடாத்துவதையும் ஆட்சிபுரிவதையும் தமது அடிப்படை கொள்கைகளாக அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாகப் பேணிவருகின்றனர். அந்தவகையில் அமைச்சர் விமல்வீரவன்ஸ, மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்றோர் முன்னணியில் திகழ்கின்றனர். அடாவடித்தனத்தில் இவர்களை விடவும் முன்னணியில் நிற்பதாகத் தனது பேச்சுகளிலும் செயல்களிலும் அச்சொட்டாக நிரூபித்து வருகின்றார் இலங்கையின் பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா. இவரின் சொற்களும் செயல்களும் விநோதங்கள் பொதிந்ததாகவும் பொதுமக்கள் மத்தியில் நகைப்புக்கிடமாகவும் சில வேளைகளில் அவையே பதற்றத்தினையும் அச்சத்தினையும் உருவாக்குவதாகவும் விளங்குகின்றது.

களனியில் தனிக்காட்டு ராஜாவாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் இவர் அங்கிருந்து கொண்டு செய்யும் செயல்கள் அரசியல் மட்டங்களில் சூடு பிடிக்கும் விவகாரங்களாகவும் அமைந்து விடுவதுண்டு. நாட்டில் தனக்குத் தெரியாத சண்டியர்கள் எவருமே இருக்கமுடியாது என அடிக்கடிக் கூறி வரும் இவர் களனியிலும் கொழும்பிலும் தான் ஒரு அமைச்சர் என்பதை மறந்து அடிதடி மன்னனாகவே தன்னை வெளிப்படுத்தி வருகின்றார். கிரிபத்கொடையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் தான் சம்பந்தப்பட்ட விவரத்தை ஒளிபரப்பாத குற்றத்துக்காக அரச ஊடக நிறுவனமொன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து அதன் செய்திப் பணிப்பாளரைத் தாக்கி இழுத்து வந்து தனது அடிதடித் திறமையை கொழும்பில் ஒரு ஊடக நிறுவனத்திலேயே அரங்கேற்றினார் இவர். பின்னர் அங்குள்ள ஊழியர்களிடம் முறையாக வாங்கிக்கட்டியதுடன் தலையில் ரத்தம் கொட்டும் அளவுக்கு ஊழியர்களின் சாத்துப்படியில் சிக்கினார். தொடர்ந்து விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு அரசின் வார்த்தையில் சொல்லப்போனால் மனிதாபிமான படை நடவடிக்கையின் மூலம் குறித்த அலுவலகத்துக்குள் இருந்து மீட்டெடுக்கப்பட்ட பெருமை மிகுந்த அமைச்சராக அடிதடி ஹீரோவாக மேர்வினே அன்று வலம் வந்தார்.

அதன் பின்னர் சில ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றபோது அதில் பெரும்பான்மையான குற்றச்சாட்டுகள் இவர் மீதே சுமத்தப்பட்டன. இவரின் இத்தகைய செயற்பாடுகளைக் கண்டு வியந்த அரசு உடனடியாக அவரை அழைத்து பிரதி ஊடக அமைச்சராக நியமித்து அழகுபார்த்தது. ஆனால் ஊடகங்களின் எதிர்ப்புக்குரல்கள், எதிர்க்கட்சிகளின் முழக்கங்கள் பொதுமக்களின் எதிர்ப்புகள் காரணமாக அவர் நியமனம் செய்யப்பட்டு சிறிது கால இடைவெளிக்குள் அதிலிருந்து தூக்கப்பட்டார். சிறிது காலம் களனியில் தங்கியிருந்த இவருக்கு அரசு மீண்டும் பிறிதொரு அமைச்சை பரிசாக வழங்கியது.

மீண்டும் அமைச்சர் பதவி தொடர்பான நியமனக் கடிதம் இவரின் கைகளிற்குக் கிடைத்தவுடன் இவரின் ருத்ர தாண்டவம் மீண்டும் அரங்கேறத் தொடங்கியது. களனியில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு வருகை தராத அரச சமுர்த்தி ஊழியர் ஒருவரை மரத்தில் கட்டி வைத்தது மாத்திரமல்ல வேலையை ஒழுங்காகச் செய்யாதவர்களை இவ்வாறு மரத்தில் கட்டி வைப்பேன் என முழங்கினார் அவர். இவரின் இந்த அராஜகச் செயல் பல ஊடகங்கள், பொதுமக்கள் மத்தியில் மோசமாக எதிரொலித்ததால் இவர் பின்னர் தனது நடவடிக்கைகளை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டார். இதன் பின்னர் மிருகப்பலியைத் தடுப்பதாகக் கூறி தனது பாட பரிவாரங்களுடன் சிலாபத்திற்குச் சென்ற இவர் அங்கு பலியிடுவதற்குத் தயாராக இருந்த கால்நடைகளை தனது வாகனத்திலேயே ஏற்றி பொலிஸ் நிலையம் சேர்ப்பித்து தான் மனித நேயம் உள்ளவன் என்பதை நிரூபிக்க முயன்றார்.

இதன்பின் அவர் சந்தித்த தொடர்ச்சியான தோல்விகள், சரிவுகள் பல. இதற்கு காளியின் கோபமே காரணம் என சமய மட்டங்களில் பெரிதாகப் பேசப்பட்டது. இதன்பின் மஹிந்தருக்கு அருளாசி வேண்டி இந்தியா பறந்து தான் அரசின் அடிவருடி என்பதை நிரூபித்தார். இவ்வாறு செயற்பட்டு வந்த இவரை பொதுமக்கள் தொடர்பு அமைச்சராக நியமித்து அவரை சிம்மாசனம் ஏற்றியது மஹிந்த அரசு.

இவரின் கருத்துகள் பெரும்பாலும் சர்ச்சைக்குரியதாக விளங்கின. சர்ச்சைகளுக்கூடாகவே அரசியலில் தனது இருப்பை நிலைநிறுத்த எண்ணிய இவர் அடிக்கடி தான் நடாத்தும் அரசியல் கூட்டங்களில் சர்ச்சைக்குரிய கருத்துக்களையே பிரதான பேசுபொருளாகக் கொண்டு வருகின்றார். அந்த வகையில் அண்மையில் கிரிபத்கொடையில் ஜெனிவா பிரேரணைக்கு எதிரான கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை இலங்கை மட்டத்தில் மட்டுமல்ல சர்வதேச ஊடகங்களிலும் தலைப்புச் செய்திகளாகின. நாட்டுக்கு எதிராக எழுதும் ஊடகவியலாளர்களின் கைகால்களை முறிப்பேன் எனவும், அத்தோடு மாத்திரம் அல்லாது மனித உரிமை செயற்பாட்டாளர்களின் கைகால்களினையும் முறிப்பேன் எனவும் கூறி, அவரின் பட்டியலில் இடம்பெறும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் பெயர்களினை வரிசைப்படுத்தி முழங்கித் தள்ளினார். அதனோடு மாத்திரம் நின்று விடாது ஊடகவியலாளரும் சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளர் பதவியில் இருந்தவருமான போத்தல ஜெயந்தவை நாட்டை விட்டுத் துரத்தியது தானே என உரிமையும் கொண்டாடியுள்ளார். இவரின் இந்த வாதம் அரச அமைச்சர்களுக்கு இலங்கையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கும் தொடர்புகள் இருக்கின்றன என்ற சந்தேகத்தை மேலும் மேலும் வலுவாக்கியுள்ளது. கடந்த 2010 ம் ஆண்டு ஊடகவியலாளர் போத்தல ஜெயந்த தனது பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்த போது கொழும்பு கிரிபத் கொடப்பகுதியில் வைத்து கடத்தப்பட்டு தாடி மீசை என்பன வெட்டப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் வீதியொன்றில் அநாதவராக விடப்பட்டார். இதன்பின் தொடர்ச்சியாக அவரின் குடும்பத்தினரிற்கும் அவருக்கும் விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தலை அடுத்து நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார். இச் சம்பவத்துடன் தான் தொடர்புபட்டிருப்பதாகவே கிரிபத்கொட கூட்டத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிடப்பில் போடப்பட்ட சமயம் இவரின் ஒப்புதல் வாக்குமூலம் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது. ஆனால், இவரின் கருத்து அரசின் கொள்கையல்ல. இது தனிப்பட்ட மேர்வினின் கருத்து. அதில் ஆராய்வதற்கு ஒன்றுமே இல்லை என விளக்கமளித்துள்ளார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ். இதேவேளை இவரின் கருத்துத் தொடர்பாக ஊடகங்களிடம் பேசிய பொலிஸ் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித்ரோகண இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் இவர் சரியான மனநிலையில் இந்தக் கருத்தைத் தெரிவித்தாரா? அல்லது இவர் மேற்கூறிய சம்பவங்களுடன் இவருக்குத் தொடர்பு இருக்கின்றதா என்பது தொடர்பில் தமது பொலிஸ்தரப்பு விசாரணைகளை நடாத்தும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒரு அமைச்சரே ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது தாக்குதல் நடாத்தப்படும் என பகிரங்கமான கூட்டமொன்றில் தெரிவித்திருப்பது அரசு போர்த்திருக்கும் முகத்திரையை கிழித்தெறிந்துள்ளது. மொத்தத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த மேர்வினின் மீதான விசாரணைகள் அரச தரப்பினால் முடக்கிவிடப்படுமா? அல்லது அவர் செய்ததாகக் கூறும் செயலுக்கும் கூறிய வார்த்தைகளுக்கும் அவரை ஆட்சியாளர்கள் அரியணை ஏற்றி பொன்னாடை போர்த்தி அழகு பார்ப்பார்களா? காலம் தான் பதில் சொல்லும்.



ஜனநாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயக்கொள்கைகளும் சமுதாய நடைமுறைகளும்

மனிதவாழ்வியலோடு சமயவழிபாடுகளும் சமயக்கொள்கைகளும் நுழைந்துபோயுள்ளன.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முன்னோர்களின் வாக்குக்கு அமைவாக ஒவ்வொரு ஊர்களிலும் மக்கள் தங்கள் தங்களின் நம்பிக்கைகளுக்கேற்றவாறு கோவில்களை அமைத்து இறைவழிபாடுகளை இயற்றுகின்றனர். மனிதகுலம் ஒன்று தான். ஆயினும் அவர்களின் சமயவழிபாடுகளும் சமயக்கொள்கைகளும் வேறுபட்டு நிற்கின்றன. இவ்வாறான கொள்கைகள் வேறுபட்ட காரணங்களினால் சமயங்களுக்கிடையிலான உட்பூசல்கள் இருப்பதை நீண்ட காலமாகவே அவதானிக்க முடிகிறது. மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது. அந்த சக்திதான் உலகத்தை இயக்குகின்ற பலம்பொருந்தியதாக உள்ளது. அந்த சக்தியின் வடிவங்கள் தான் மக்களின் மனங்களில் அவர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு கடவுள்களாக குடி கொண்டுள்ளது.

மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவே சமயங்களும் சமயக்கொள்கைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் சமஉரிமையுள்ள சமுதாயம் ஒன்றைக்கட்டியெழுப்புவதே ஒவ்வொரு சமயங்களினதும் பிரதான குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்த விடயங்களில் மதகுருமார்களும் முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டியது அவசியமானது. கடவுள் ஏழைகளிடமும் சிறுவர்களிடமும் நிறையவே அன்பு செலுத்துபவர் என்று ஆன்மீகம் கூறுகின்றது. ஏழைமக்கள் ஏழைகளாகவே உள்ளனர். சிறுவர் இல்லங்கள் பலவும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே தற்போதும் இயங்கிவருகின்றன. இந்த நிலையில் இறைவன் குடிகொண்டிருப்பதாகக் கருதப்படுகின்ற கோவில்களுக்கு வர்ணம் பூசுவதிலும் இராஜகோபுரம் கட்டுவதிலுமே மதத்தலைவர்கள் தற்போதும் கவனம் செலுத்தி வருகின்றார்கள். ஏழைகளும் சிறுவர்களும் பசியிலும்பட்டினியால் வாடும்போது கோவில்களை அலங்காரம் செய்வதில் எந்தவிதமான நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. கடவுள் எளிமையான வாழ்க்கையையே விரும்புபவர் என ஆன்மீகம் கூறுகிறது. குறிப்பிட்ட சில கோவில்கள் சிறுவர், முதியோர், இல்லங்களுக்கு உதவி வருகின்றமையை மறுப்பதற்கில்லை.

ஒவ்வொரு சமூகத்தவர்களும் தாங்கள் பின்பற்றுகின்ற சமயக்கொள்கைகளில் பற்று வைத்திருப்பதில் தவறில்லை. ஆனால் சமயரீதியான துவேசக்குணவியல்பு இருக்கக்கூடாது. ஆண்டு தோறும் ஆலயங்களில் மிகப்பிரமாண்டமான முறையில் திருவிழாக்களைக் கொண்டாடுகிறார்கள். அதே ஆலயத் திருவிழாக்களின் போது ஒட்டிய வயிற்றுடன் பிச்சைக்காகக் கையேந்துபவர்களையும் நாம் காணத்தவறுவதில்லை. வறுமைப்பட்ட மக்களை நேசியுங்கள். அவர்கள் மீது அன்பு செலுத்துங்கள் என்று சமயப்பிரசங்கங்களில் வார்த்தைகளை வீசுகின்ற மதகுருமார்களின் கண்களுக்குக் கூட இந்த ஏழைமக்கள் தெரிவதில்லைப் போலும்.


சமயக்கொள்கைகள் சில சந்தர்ப்பங்களில் மக்களிடையேயான உறவுநிலையினைச் சீர்குலைப்பதாகவும் அமைந்துவிடுகின்றன. இவ்விடத்தில் சம்பவம் ஒன்றைக் குறிப்பிடலாம். குறிப்பிட்ட சில சமயங்களின் சமயக்கொள்கைகள் தனிமனித சுதந்திரத்தைக் கூட சில சந்தர்ப்பங்களில் கட்டிப்போட்டு விடுகின்றன. குறிப்பிட்ட ஒரு சமயத்தைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் வேற்று மதத்தைச்சேர்ந்த யுவதி ஒருவரைக் காதலித்துத் திருமணம் முடித்துக்கொண்டார். திருமணம் முடித்த தம்பதியர் சில மாதங்கள் குடும்பமாக வாழ்ந்தும் விட்டார்கள். இதன் பின்னர் அந்த யுவதியின் மதத்தைச் சேர்ந்த மதகுருமார்கள் இதில் தலையிட்டு அந்த இளைஞனை தங்களின் மதத்திற்கு மதம்மாறும் படி அழுத்தங்களைப் பிரயோகித்தனர். அந்த இளைஞன் மதகுருமார்களின் அழுத்தங்களுக்கு பணிந்து கொடுக்கவில்லை. மதம் மாறுவதற்குச் சம்மதிக்கவுமில்லை. இதைத்தொடர்ந்து அந்த யுவதியின் பெற்றோர்களும் அந்த இளைஞனை தங்களின் மதத்திற்கு மாறும்படி கேட்டும் அதற்கு அந்த இளைஞன் சம்மதிக்காத பட்சத்தில் அவர்கள் அந்தக் குடும்பத்தினைப் பிரித்து தங்கள் மகளான அந்த யுவதியை தங்கள் வீட்டிற்குக் கூட்டிச் சென்று விட்டார்கள்.

இந்த விடயம் விவாகரத்துவரை சென்று விட்டது. அதாவது ஒவ்வொருவரும் தாங்கள் பின்பற்றுகின்ற மதங்களில் பற்று வைத்திருக்கலாம். ஆனால் மதத்துவேசம் இருக்கக்கூடாது. குறிப்பாக சமயங்களும் சமயக்கொள்கைகளும் மக்கள் சமுதாயத்தினிடையேயான ஒற்றுமையையும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் தோற்றுவிப்பதாகவே அமையவேண்டியது அவசியமானது. மாறாக குடும்பங்களின் பிரிவுகளுக்கும் சமுதாயத்தினிடையேயான முரண்பாடுகளுக்கும் வழிகோலுவதாக அமைந்து விடுதலாகாது.

ஏழைமக்களும் ஊனமுற்றவர்களும் அன்றாடம் சாப்பாட்டிற்கு ஏங்கிக்கொண்டிருக்கின்ற போது ஆலய உண்டியல்களில் சில்லறைகளும் தாள்களுமாக நிரம்பியுள்ளன. ஆனால் அந்த ஏழைகளின் வயிற்றுப்பசி போக்க வரும் எண்ணமில்லை. தமிழ்நாட்டில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சியான அரட்டை அரங்கம் நிகழ்ச்சியில் ஒரு முறை ஒருவர் கருத்துக்கூறினார். அதாவது, தமிழ்நாட்டில் நாளாந்தம் எத்தனையோ குழந்தைகள் பாலுக்கு அழுகிறார்கள். ஆனால் அதே தமிழ்நாட்டில் சிவலிங்கத்திற்கு நாளாந்தம் லீற்றர் கணக்கான பால் கொண்டுவந்து ஊற்றப்படுகிறது. இது எந்த வகையில் நியாயமாகும் என்றார்.

எனவே, சமயங்களும் சமயக்கொள்கைகளும் சமுதாயத்தை நல்வழிப்படுத்தி நெறிப்படுத்தும் முகமாகவே தோற்றம் பெற்றுள்ளன. உடல் ஊனமுற்று உலர்ந்த கோலங்களுடன் ஏக்கத்துடன் கோவில் வீதிகளில் கை நீட்டித்திரிபவர்களையும் போரின் தாக்கத்தினால் பெற்றோர், உறவுகளைப் பலிகொடுத்து விட்டு அநாதரவாக்கப்பட்ட சிறுவர்களையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆலயங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதாக செயற்பட வேண்டும்.

**றிசிக்கேசன்**



# கார்ல் மார்க்ஸ்

பூதனாகப் பிறந்து கிறிஸ்தவனாக வாழ்ந்து மனிதனாக இறந்தார்.....!

இங்கிலாந்து நாட்டில் உடல் நிலை சரியில்லாமல் 1883 ஆம் வருடம் கார்ல் மார்க்ஸ் மரணம் அடைந்தபோது அவரது இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் மொத்தமே எட்டு பேர்தான், ஆனால் இன்று உலகில் இருக்கும் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அவரது பொதுவுடைமைக் கொள்கையின் பின்னே நிற்கின்றார்கள்.

தொழிலாளர்களுக்கு உரிமைகள் கேட்டு இவரது காலத்துக்கு முன்பே எத்தனையோ போராட்டங்கள், புரட்சிகள் நடந்திருந்தாலும், உழைக்கும் வர்க்கம் ஆட்சிக்கு வருவதுதான் உண்மையான புரட்சி என்ற இவரது புதிய கொள்கை. அதுவரை உலகம் கேட்டறியாதது. உரிமைகள் கேட்கவே அஞ்சி நடுங்கிக்கொண்டு இருந்த உழைக்கும் வர்க்கத்தினருக்கு ஆட்சியைப் பிடிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை கொடுத்தது கார்ல் மார்க்ஸின் " இழப்பதற்கு எதுவுமில்லை " என்ற மந்திரச் சொல்தான்!

ஜேர்மனியில் 1818 ஆம் ஆண்டு, ஒரு வழக்கறிஞரின் மகனாகப் பிறந்த மார்க்ஸ் தந்தையின் விருப்பத்திற்காகவே சட்டம் படித்தார். ஆனால், அது பிடிக்காமல் போகவே தத்துவ இயலுக்கு மாறி பட்டம் பெற்றார். இளம் வயதிலேயே மார்க்ஸின் சிந்தனையைக் கிளறியது ஹெகல் என்னும் ஜேர்மனிய அறிஞரின் கொள்கைகள் தான். " எதிரெதிர் கொள்கைகள் கொண்ட சக்திகளின் போராட்டம் தான் ஒரு சமுதாயத்திற்கு முன்னேற்றம் தரும். " என்ற ஹெகலின் சிந்தனையை அப்படியே முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் பொருத்திப் பார்த்தார் மார்க்ஸ். இந்த இருவருக்கும் மோதல் ஏற்படும் போது தொழிலாளர் வர்க்கத்தினர் தான் வெற்றி பெறுவார்கள். காரணம் இவர்களிடம் இழப்பதற்கு எதுவுமில்லை. எதுகிடைத்தாலும் அது வெற்றிதான் என்பதை பொதுவுடைமையின் அடிப்படையில் தத்துவமாக எடுத்துக்கொண்டார்.

" ஜேர்மன் " என்ற நாளிதழை நண்பர்களுடன் தொடங்கினார். ஆளும் வர்க்கத்தினரையும் முதலாளித்துவ சிந்தனைகளையும் காரசாரமாகக் கண்டித்து கட்டுரைகள் எழுதினார். பத்திரிகை தடை செய்யப்பட்டது. உடனே, பிரான்சுக்குச் சென்று தொழிலாளர் வர்க்கத்தினருக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவே, நாடு கடத்தப்பட்டு மீண்டும் ஜேர்மன் திரும்பினார். ஆனால், அங்கேயும் அவருக்குத் தடை விதிக்கப்படவே இங்கிலாந்தில் அடைக்கலமானார். நாடு நாடாக விரட்டப்பட்ட போதும் கொள்கையில் எந்த சமரசமும் செய்துகொள்ளாமல் மார்க்ஸ் உறுதியாக இருந்தார்.

இன்றும் சோஷலிசக் கோட்பாடுகளின் இலக்கணமாகவும், இலக்கியமாகவும் கொண்டாடப்படும் உலகப் புகழ் பெற்ற பொதுவுடைமை தத்துவ அறிக்கையை 1874 ல் ஐரோப்பிய கம்யூனிஸ்ட்கள் மாநாட்டில் வெளியிட்டார் மார்க்ஸ். உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் எனவும் உற்பத்தி, போக்குவரத்து, வங்கி போன்ற திட்டங்களை அறிக்கையாக சமர்ப்பித்தபோதும் தொழிலாளர் வர்க்கம் விண்ணதிர வரவேற்றது. மார்க்ஸின் அறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு உலகெங்கும் விநியோகிக்கப்பட்டன. பிரான்ஸ், ஜேர்மனியின் தொழிலாளர்கள் புரட்சியில் ஈடுபட்டவர்கள் " இழப்பதற்கு எதுவுமில்லை " என்பது உழைக்கும் வர்க்கத்தின் பைபிள் எனப்போற்றப்படும், 'மூலதனம்' நூலின் முதல் பகுதியினை 1867 - ல் வெளியிட்டார் மார்க்ஸ். அதன் பின்னரும் ஓய்வு ஒழிச்சல் இன்றி 'மூலதனம்' அடுத்த பாகங்களை எழுதத் தொடங்கினார். பெயரும் புகழும் சம்பாதிக்க முடியாமல் கடைசி வரை வறுமையின் பிடியிலேயே வாழ்ந்த மார்க்ஸ் 'மூலதனம்' நூலை முடிக்காமலே 1883 ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு இறந்து போனார்.

கார்ல் மார்க்ஸ் எழுப்பிய " இழப்பதற்கு எதுவுமில்லை " என்ற மந்திரச் சொல்லை வைத்துதான் லெனின் ருஷ்யப்புரட்சியை உண்டாக்கினார். உலகின் பல்வேறு நாடுகளும் கம்யூனிஸத்துக்கு மாறின. இன்றும் எங்கெல்லாம் புரட்சி நடக்கிறதோ, அங்கெல்லாம் ஆணிவேராக இருக்கும் மந்திரச் சொல் அது!

**தொகுப்பு : அறிவேந்திரன், [illegible]**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முடிசூட்டு விழா!

எகிப்திலிருந்து நெப்போலியன் திரும்பி வந்தபோது, அவருடைய வீட்டில் ஜோசஃபினின் பொருள்கள் எல்லாவற்றையும் மூட்டைக் கட்டி, வீட்டுக்கு வெளியே வைத்துவிட்டார்.

அதே நேரம், நெப்போலியன் நாடு திரும்பி விட்டார் என்று கேள்விப்பட்டு, பதறிப்போய் ஓடி வந்தார் ஜோசஃபின். அங்கே, மூடிய கதவுதான் அவரை வரவேற்றது. அவர் அவ்வளவு கெஞ்சிய போதும், நெப்போலியன் மனம் இரங்குவதாக இல்லை. அதன்பிறகு, ஜோசஃபினின் பிள்ளைகள் தான் நெப்போலியனிடம் பேசி, அவருடைய மனத்தை மாற்றினார்கள். மீண்டும் ஜோசஃபினைத் தன் மனைவியாக ஏற்றுக் கொண்டார்.

வேண்டாம் என்று தூக்கி வீசிய மன்னராட்சியையே மறுபடியும் கொண்டுவரப்போகிறோம். அதற்காக இன்னொரு முறை கல்யாணம் செய்து கொள்வதா சிரமம்? 'நடக்கட்டும்' என்று இப்போது உத்தரவு கொடுத்தார் நெப்போலியன்.

இதையடுத்து, நெப்போலியன் - ஜோசஃபின் திருமண ஏற்பாடுகள் அவசரமாகத் தொடங்கப் பட்டன. ராத்திரியோடு ராத்திரியாக, ஏதோ கள்ளத் திருமணம்போல் அவர்கள் இருவருக்கும் மறுபடி கல்யாணம் செய்து வைத்தபிறகுதான், முடி சூட்டு விழாவுக்குப் பச்சை சிக்னல் காட்டினார் போப் பெரியவர்.

1804-ம் ஆண்டு டிசம்பர் 2-ம் தேதி, நெப்போலியன் முடி சூடும் நிகழ்வுக்காக, பாரிஸ் நோட்ரு டாம் (Notre Dame de Paris) தேவாலயம் புதுப்பிக்கப்பட்டு, பிரமாதமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. நகர் முழுவதும் விழாக் கொண்டாட்டங்கள் தொடங்கியிருந்தன.

இராணுவத்தினர், அரசியல் தலைவர்கள், சட்டத்துறை, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள், கல்வியாளர்கள், முக்கியமான தொழில் துறைப் பிரமுகர்கள் என்று தனித்தனியே ஊர்வலங்கள். அனைத்தும், விழா நடைபெறும் தேவாலயத்தை நோக்கிச் சென்றன.

போப் ஆண்டவரும், நெப்போலியனின் உறவினர்களும் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட வண்டிகளில் வந்தார்கள். இந்த வரிசையின் இறுதியில், புதிய பேரரசர் நெப்போலியனின் வாகனம் கம்பீரமாக வந்துகொண்டிருந்தது.

நெப்போலியன் பிரெஞ்சுச் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்ட வண்ணமயமான நிகழ்வை அற்புதமான, நுணுக்கமான ஓவியங்களின்மூலம் பிரான்ஸ் கலைஞர்கள் எக்கச்சக்கமாகப் பதிவு செய்திருக்கிறார்கள்.

இந்த ஓவியங்களில் உள்ளவையெல்லாம் உண்மை, எவையெல்லாம் நெப்போலியனின் புகழ் பாடுவதற்காக 'மேம்படுத்தப்பட்டவை' என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

தங்கமும் விலை மதிப்பற்ற கற்களும் பதித்த உடையில் நெப்போலியன், அவருக்குப் பக்கத்தில் ஜோசஃபின், ஆசீர்வதிக்கும் போப்பாண்டவர், சுற்றிலும் வாழ்த்துகிற பிரெஞ்சுப் பொதுஜனம் என்று வண்ணமயமான காட்சிகள் பரவசமூட்டுகின்றன.

நெப்போலியனையும் ஜோசஃபினையும் போப் ஆண்டவர் ஆசீர்வதித்தபிறகு, முடிசூட்டும் விழா முறைப்படி தொடங்கியது. போப் ஆண்டவருக்கு முன்னால் தலைகுனிந்து வணங்குவதை விரும்பாத நெப்போலியன், அவரிடமிருந்து கிரீடத்தைக் கிட்டத்தட்ட பறித்துக்கொண்டதாகவும், தானே தனக்கு முடிசூட்டிக்கொண்டதாகவும் குறிப்புகள் இருக்கின்றன.

'முதலாம் நெப்போலியன்' (Napoleon I) என்ற புதுப் பெயருடன் சக்கரவர்த்தியாக முடிசூடிக்கொண்ட நெப்போலியன், "பிரெஞ்சு மக்களின் சந்தோஷத்துக்காகப் பொறுப்பேற்பேன், அதற்காகப் பாடுபடுவேன்" என்று உறுதியளித்தார். மக்கள் பெரும் ஆரவாரத்தோடு அவரை வாழ்த்தினார்கள்.

ஆனால், அத்தனை கூட்டத்துக்கு நடுவே, முக்கியமான ஒருவர் மட்டும் விடுபட்டிருந்தார் - நெப்போலியனின் தாய் லெடீஷியா!

தன் மகனைச் சக்கரவர்த்தி எனக் கேட்டு, என்றபொழுதிற் பெரிதுவக்கவேண்டிய அவர், வேண்டுமென்றே இந்த முடிசூட்டு விழாவிற்கு வரவில்லை. கலந்துகொள்ள விருப்பமில்லை என்று தெரிவித்துவிட்டார்.

ஏன்? நெப்போலியன்மீது அவருக்கு என்ன திடீர்க் கோபம்?

நெப்போலியனைப்போல, அவருடைய குடும்பத்தாரால் ஜோசஃபினை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆரம்பத்திலிருந்தே, தங்களுடைய சகோதரனின் தகுதி, திறமை, கௌரவத்துக்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாத ஒரு பெண் அவருக்கு மனைவியாக வந்து சேர்ந்திருக்கிறாள் என்றுதான் அவர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள்.

நெப்போலியன் ஊரில் இல்லாத நேரத்தில் ஜோசஃபினின் நடத்தை, அவர்களுடைய வெறும் வாய்க்கு அவல் கொடுத்தாற் போலாகிவிட்டது. இவளை நெப்போலியன் மீண்டும் ஏற்றுக்கொண்டு இருக்கக்கூடாது என்று அவர்களுக்கு ஆதங்கம்.

என்னதான் தேசத்துக்கே தலைவராக இருந்தாலும், வீட்டில் மாமியார், மருமகள் சண்டையைத் தவிர்க்க யாரால் முடியும்? கடைசி வரை, நெப்போலியனால் தன்னுடைய தாய், சகோதர, சகோதரிகளையும் ஜோசஃபினையும் ஒத்து வாழச் செய்யமுடியவில்லை. இந்தக் கோபத்தின் உச்சமாகத் தான், நெப்போலியனின் முடி சூட்டு விழாவுக்கே வர மறுத்து விட்டார் லெடீஷியா.

'முதலாம் நெப்போலியன்' (Napoleon I) என்ற புதுப் பெயருடன் சக்கரவர்த்தியாக முடிசூடிக்கொண்ட நெப்போலியன், "பிரெஞ்சு மக்களின் சந்தோஷத்துக்காகப் பொறுப்பேற்பேன், அதற்காகப் பாடுபடுவேன்" என்று உறுதியளித்தார். மக்கள் பெரும் ஆரவாரத்தோடு அவரை வாழ்த்தினார்கள்.

ஜோசஃபின் விஷயத்தில் நெப்போலியனின் ஒரே வருத்தம், அவரால் தனக்கு ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுத்தர முடியவில்லை என்பது தான். மெனக்கெட்டு சக்கரவர்த்தியாகப்பட்டம் சூட்டிக்கொண்டபிறகு, அதற்கு ஒரு வாரிசு இல்லாவிட்டால் எப்படி?

தன்னுடைய பரம்பரை தொடர்ந்து பிரான்ஸை ஆளமுடியாமல் போய்விடுமோ என்கிற கவலையும் ஏக்கமும் நெப்போலியனைத் தொடர்ந்து உறுத்திக்கொண்டிருந்தது. சக்கரவர்த்தியான அடுத்த சில வருடங்களில் அவர் பெற்ற குறிப்பிடத்தக்க இராணுவ வெற்றிகளுக்கு நடுவே, இந்த ஒரு விஷயம்தான் அவருக்கு மிகப் பெரிய குறையாகத் தெரிந்தது.

நெப்போலியன் நினைத்திருந்தால், ஜோசஃபினின் முந்தைய திருமணத்தின்மூலம் பிறந்த மகனைத் தன்னுடைய வாரிசாக அறிவித்திருக்கலாம். அல்லது, தன்னுடைய சகோதரர்களில் ஒருவரது மகனைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்.

அதெல்லாம் முடியாது, தன்னுடைய ரத்தம்தான் தன்னுடைய வாரிசின் உடம்பிலும் ஓடவேண்டும் என்று நெப்போலியன் விரும்பினால், அதற்கும் ஒரு வழி இருந்தது. ஜோசஃபின் தவிர, நெப்போலியனின் வாழ்க்கையில் சிநேகிதிகள், ரகசியக் காதலிகள் என்று நிறையப் பேர் இருந்தார்கள்; அவருடைய அதிகாரபூர்வமற்ற அந்தப்புரம் பெரியது. அவர்களில் யார் மூலமாகவேனும் ஒரு குழந்தையைப் பெற்றுக்கொண்டிருக்கலாம்.

ஆனால், தனக்கும் தன்னுடைய மனைவியாகிய சக்கரவர்த்தினிக்கும் பிறந்த குழந்தைதான் தன்னுடைய வாரிசாகவேண்டும் என்று பிடிவாதமாக இருந்தார் அவர்.

இப்போதைய சக்கரவர்த்தினி ஜோசஃபினால் அது முடியவில்லை. அப்படியானால், வேறு என்னதான் வழி?

முதன்முறையாக வேறொரு திருமணம் செய்து கொள்வதைப் பற்றித் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார் நெப்போலியன்.

1809-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் தேதி, ஜோசஃபினிடமிருந்து முறைப்படி விவாகரத்துப் பெற்றார். இந்த நடவடிக்கையில் அவருக்கு முழு மனதுப்புதல் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. எனினும், தனக்கு ஓர் அதிகாரபூர்வமான வாரிசு வேண்டும் என்பதில், நெப்போலியன் மிகத் தீவிரமாக இருந்தார்.

விவாகரத்துக்குப்பிறகும், நெப்போலியன் ஜோசஃபினுக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார். இந்தக் கடிதங்களின் மூலம், பிரான்ஸின் நலன் கருதித்தான் இந்த முடிவை எடுக்கவேண்டியிருந்ததாகவும், அதைப் புரிந்துகொண்டு அவர் நடந்துகொள்ளவேண்டும் எனவும் தன்னை வெறுக்கக்கூடாது என்றும் தொடர்ந்து வலியுறுத்த முயன்றார்.

இந்தக் காரணங்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், நெப்போலியனின் வாழ்க்கையில் ஜோசஃபினின் அத்தியாயம் கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்டது.



தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# இடிந்து வீழ்ந்த உல்லாச விடுதி

உல்லாசபுரியான சிங்கப்பூரில் 'நெப்டியூன்' எனும் ஓர் உல்லாச விடுதி இருந்தது. அது ஆறுமாடிக் கட்டடங்களைக் கொண்டதான கட்டிடத் தொகுதியின் ஐந்தாவது மாடியில் அமைந்திருந்தது.

இரண்டாவது மாடியில் விடுதிக்கான இசைக்கூடம், நடனக் கூடம், மதுபானச்சாலை, மருந்துக் கூடம் எனப் பலவும் உள்ளடங்கியிருந்தன. கட்டிடத்தின் அடித் தளத்தில் வாகனங்களின் தரிப்பிடம் இருந்தது.

மூன்றாவது மாடியில் தனியார் வர்த்தக வங்கியொன்றும் ஏனைய மாடிக்கட்டிடங்களில் சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் அழகுசாதனங்கள், உடுபுடவை வாணிப நிலையங்கள் என்பனவும் இயங்கி வந்தன.

பகல் இரவென்று பாராது எந்நேரமும் சனநடமாட்டத்துடன் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் பிரதேசம் அது.

வெள்ளிக் கிழமை நள்ளிரவில் ஓட்டலில் இசைக் குழுவினர் இசையிருந்தளிப்பதற்காகத் தம்மைத் தயார் செய்து கொண்டிருந்த வேளையில் அவர்களின் காதில் அந்த விசித்திரமான ஒலி எழுந்தது. பற்களை நறநற வெனக் கடிக்கும் பொழுதினில் வரும் ஓசை போன்றது அது. அச் சத்தம் அங்கிருந்த தூண்களில் ஒன்றிலிருந்துதான் வந்திருக்க வேண்டும். ஆனால், இசைக் குழுவினரின் இசை மழைக்குள் அவ்வொலி அடங்கிவிட்டது. தெளிவாகக் கேட்கவில்லை. அதுமட்டுமல்லாது இசைக்குழுவினரில் எவரும் அதனைப் பொருட்படுத்தவுமில்லை.

ஆனால், அடுத்தநாள் சனிக்கிழமை காலையில் விடுதிச் சிப்பந்திகள் சிலரும் வெளியே வீதியால் சென்றவர்களும் வழக்கத்தை மீறிய அந்த விசித்திர அறிகுறிகளைக் கவனித்தனர். கட்டிடத்தின் வெளிப்புறத்தில் வெடிப்புகளும் அத்துடன் மூன்றாவது மாடியின் உட்சுவரில் ஓரிடத்திலும் வெடிப்புகள் தோன்றியிருப்பதை அவதானித்தனர்.

ஐந்தாவது மாடியில் 510 ஆம் இலக்க அறையொன்றில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டிருந்த பணிப் பெண் ஒருவர் துப்பரவு வேலைகள் முடிவடைந்த பின்பு அறையை விட்டு வெளியேறும் போது அறையின் கதவை இழுத்து மூடிய வேளையில் கதவு அதன் நிலையுடன் பொருந்தி மூட மறுத்தது. அவளுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஆயினும், அவளும் அதனைப் பொருட்படுத்தவில்லை.

காலை 10.30 மணி. வங்கிக்கு அலுவலாக வந்த வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் வங்கி ஊழியர்களான கிறிஸ்ரினா மற்றும் பொஸ் நீ சொய் இருவரிடமும் அடித்தளத்தில் உள்ள வாகனத் தரிப்பிடத்திலும் சுவர்களில் ஒரு சில வெடிப்புகள் தோன்றியிருப்பதையும் தெரிவித்தான். வங்கி ஊழியர்களும் அவன் கூறியவற்றைச் சிறிதளவும் நம்பவேயில்லை. அத்துடன் அதுகுறித்து மேலும் ஆராயும் எண்ணத்தையும் கைவிட்டுவிட்டனர்.

ஒரு சில வினாடிகளுக்குள்ளாகவே கட்டுப்படுத்த முடியாத வகையில் கட்டிடம் நடுங்கத் தொடங்கிறது. 'பொப்' ஒரு சில தூண்கள் இரண்டாக முறிந்து பிரிவதைக் கண்டான். கிறிஸ்ரினாவும் இதனைக் கண்ணுற்றதும் தனது நண்பிகளுக்கு குரல் கொடுத்துக் கத்தினாள். ஆனால், அவர்களின் எச்சரிக்கையினால் பயனேதும் விளையவில்லை.

நேரம் முற்பகல் 11.20. மனத்தால் நினைத்துப் பார்க்கவே முடியாத அந்த அவலம் நடந்துவிட்டது. பூகம்பமோ, புயலோ ஏற்படவில்லை. ஆனால் 60 வினாடிகளுக்குள் அந்த ஆறுமாடிக் கட்டிடம் இடிந்து நொருங்கிவிட்டது. கொங்கிறீட் தூண்கள் பெரும் சத்தத்துடன் உடைந்து வீழ்ந்தன. சுவர்கள் உடைந்ததனால் கற்பாளங்கள் சுவர்களிலிருந்து வீசியெறியப்பட்டன.

காதைச் செவிடாக்கும் விதத்தில் பொற்பநேரத்தில் நேர்ந்துவிட்டது இந்த விபரீதம். எங்கும் ஒரே தூசி மண்டலம். வீதியால் சென்றவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தலைதெறிக்க ஓடினார்கள். அப்படி ஓடியவர்களில் சிலர் எதிரே வந்த வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளானார்கள். ஓட்டல் இருந்த இடம் ஒரே இடிபாடுகளின் குவியல்களாகக் காணப்பட்டது. அதற்குள் இருந்து முனகல் குரல்கள், அலறல்கள் வெளிவந்தாலும் அவை பெரிதாக எடுபடவில்லை.

மூன்றாவது மாடியில் வங்கி அலுவலரான லியூ பெங் செக் தனது அறையில் கடமையில் ஈடுபட்டிருந்தவர். தளம் உடைந்து பிளந்து கீழ் நோக்கி விழுகையில் அவரும் தலைகீழாகக் கீழே விழுந்தார். விழுந்தவரின் வலதுகால் ஏதோ கம்பி ஒன்றில் கொழுவியது. அவர் காலை அதனின்றும் விடுவிக்க முடியாமல் வேதனையுடன் தலைகீழாகத் தொங்கிய நிலையில் இருந்தார்.

வங்கியின் காசாளரான பூஜி மூன் வாஜி சம்பவநேரத்தில் தனது காசாளர் பகுதியில் கடமையில் இருந்தவர். அப்படியே இடிபாடுகளுடன் கீழ் நோக்கி விழுந்து இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டார். அவரினருகே வங்கிப் பாதுகாப்பு அதிகாரியான சகாநதின் முனகிய நிலையில் கிடந்தார்.

வங்கிக்கு அப்போதுதான் பணமெடுப்பதற்காக வந்திருந்த சுவா கிம் சூ எனும் இளம் பெண்ணும் இவர்களருகில் இடிபாடுகளின் மத்தியில் தன்னைச் சுற்றிவர நடப்பவற்றை அறிய இயலாத நிலையில் கிடந்தாள்.

சிங்கப்பூரில் கட்டிடங்கள் இவ்வாறாக இடிந்து விழக் கூடியவையல்ல. அதைவிட அப்பகுதியிலுள்ள கட்டிடங்கள் யாவும் கடந்த 15 வருடங்களுக்குள்ளாகவே கட்டப்பட்டவையாகும். பல தொழிற்திறன் வாய்ந்த அனுபவமுள்ள பொறியியலாளர்களினால் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டவையே அங்குள்ளன. இவ்விதம் நடப்பதற்கு வாய்ப்பேயில்லை.

மீட்புப் பணி உடனடியாகத் தாமதமெதுவுமின்றி முடுக்கிவிடப்பட்டது. உடைந்த நிலையில் மேற்பகுதியில் உள்ள இடிபாடுகளை அகற்றுவது என்பது மிகவும் கவனத்துடன் கையாளப்படுதல் அவசியமாகும். ஏதாவது தவறுகள் ஏற்படின் கீழ்ப்பகுதிகளில் இடிபாடுகளில் சிக்கியோரின் நிலைமை மோசமாகிவிடும். அவர்கள் அநியாயமாகப் பலியாக வேண்டி நேரிட வாய்ப்புகளுண்டு. எனவே, உயரமான பாரந்தூக்கிகள் கொண்டு ஊர்ந்து மேலேயுள்ள இடிபாட்டுக் கூளங்கள் அவதானத்துடன் கீழடிவாரத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இவ்வேலைகள் சற்று மெதுவாகவே கையாளப்பட்டன.

மீட்புப் பணியில் ஈடுபட்டோரின் காதுகளில் முனகல்களும் உதவிகோரிக் கத்துபவர்களின் சத்தங்களும் விழுந்த வண்ணமேயிருந்தன. ஆனால் அவர்களால் என்ன செய்யமுடியும்? இடிபாடுகளைக் கீழிறக்கும் பணியும் சிக்குண்டு தவிப்பவர்களை மீட்கும் பணியும் ஏககாலத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இரவாகிவிட்டது. அவர்களால் ஏழு பேர்களை மட்டுமே உயிருடன் இடிபாடுகளில் இருந்து மீட்க முடிந்தது.

தலைமைப்பீடங்கள் கூடி ஆராய்ந்தன. இன்னும் மீட்புப் பணிகளில் காலதாமதமேற்படுமாயின் சிக்கித் தவிப்பவர்கள், காயமுற்றோர் அனைவரும் அநியாயமாக உயிரிழக்க வேண்டி வரலாம். எனவே, பொலிசாரும் அவசர தமது மீட்புப் பணியினைக் குறித்து ஞாயிறு காலை 10.30 மணியளவில் கூடி ஆராய்ந்தனர்.

அச்சந்தர்ப்பத்தில், இவ்வாறானதொரு சம்பவம் மெக்சிக்கோவில் நிகழ்ந்த வேளையில் நிலத்தினூடாகச் சுரங்க வழி அமைத்து அகழ்ந்தபடி சென்று விபத்தில் சிக்கியோரை மீட்டது குறித்து ஒரு பொறியியலாளர் எடுத்துரைத்தார். அதுமட்டுமன்றி அவ்விதமுயற்சியின் அனுகூலங்கள் குறித்தும் விளக்கமளித்தார். அம்முறையே சிறந்ததென ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

உடனடியாக இவ்வித மீட்புப் பணியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவரான லண்டன் லிவர்பூலைச் சேர்ந்த பிறையன் பவர் மற்றும் அவரது சகாக்களான மைக்கல், ரொம்மி ஆகியோர் தாமதமெதுவுமின்றி வரவழைக்கப்பட்டனர். அவர்கள் பாரிய துளையிடும் இயந்திரத்தின் மூலம் நிலத்தின் கீழால் துளையிட்டு அகழ்ந்தபடியே கீழ்ப்பகுதியால் இடிபாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்தனர். அங்கு வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு வாகனத்தைத் தவிர ஏனையவை யாவும் முழுமையாக நசுங்கிச் சேதமுற்ற நிலையில் காணப்பட்டன. சடலங்கள் சிலவும் தென்பட்டன. அதைவிட மோசமான நிலை அங்கு நிலவியது. சிதைவுற்ற வாகனங்களின் எரிபொருள் தாங்கிகளில் இருந்து வெளியேறிய எரிபொருளினால் அங்கு தீங்கு விளைவிக்கக் கூடிய ஒருவித வாயுவின் நெடி எங்கும் பரவியிருந்தது.

மீட்புப்பணியாளர்கள் முகமூடியணிந்தமையால் அவர்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை. இவற்றையெல்லாம் விட கட்டிடம் பூராகவும் அமைக்கப்பட்டிருந்த நீர் விநியோகக் குழாய்கள் உடைந்தும், சிதைவுற்றும் போனமையின் காரணமாக வெளியேறிய நீரினால் அப்பகுதி பூராகவும் 1 1/2 அடி உயரத்திற்கு நீரினால் சூழப்பட்டிருந்தது. இடிபாடுகளில் சிக்கி எழுந்திருக்க முடியாதோர் நீரில் மூழ்கியும் மூச்சுத் திணறியும் இறந்திருக்கக் கூடும். அப்பகுதியில் உயிருடன் எவருமே மீட்கப்படவில்லை. அதற்கான சாத்தியமும் அங்கு தென்படவில்லை. எனினும் மீட்புக் குழுவினர் "எவராவது உள்ளே இருக்கிறீர்களா? இருக்கிறீர்களா?" எனக் குரல் இடையிடையே கொடுத்தவாறே தம் கடமையில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்களிருந்த இடத்திற்கு மேற்பகுதியில் சிறிது தூரத்தில் இருந்து "இங்கே இருக்கிறோம்" எனும் ஒரு குரல் மிகவும் பலவீனமான நிலையில் இவர்களுக்குக் கேட்டது. பதிலுக்கு இவர்களும் "பயப்படாதீர்கள், நாங்கள் உங்களுக்காகத் தான் வந்து கொண்டிருக்கின்றோம்" எனப் பதில்க் குரல் கொடுத்தனர்.

குரல் வந்த பகுதியை நோக்கித் துளையிட்டு வழியமைத்துக் கொண்டிருந்தார் குழுத்தலைவர் பிறையன் பவர். ஒருவாறு அப்பகுதிக்குள் பிரவேசித்தவர்கள் கண்டகாட்சி அவர்களை மெய் சிலிர்க்க வைத்தது. வங்கிப் பணியாளர்களான இரு பெண்களும் ஒருவர் மேல் ஒருவராக அசைய முடியாத வண்ணம் அவர்களிருவரின் மேலாக அரை அடிக்கும் குறைவான இடைவெளியில் பாரிய சுவரின் இடிபாட்டுக் கற்பாளம் மற்றுமொரு கற்பாளத்துடன் முண்டு கொடுத்த நிலையில் இருப்பதைக் கண்டனர். இருவரும் மூர்ச்சையடைந்த நிலையில் காணப்பட்டனர். காயங்களால் இரத்தம் வடிந்து காய்ந்திருந்தன.

கடும் சிரமத்தின் மத்தியில் கற்பாளங்கள், கூளங்கள் அகற்றப்பட்டு அவ்விருவரும் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு விரைந்து அனுப்பப்பட்டனர்.

திங்கள் கிழமையாகியது. ஞாயிறு வரையில் இரண்டு பக்கங்களிலுமிருந்து அகழப்பட்ட சுரங்க வழிகளினால் உட்புகுந்து முடிந்தவரையில் உயிருடனோ அல்லது சடலமாகவோ மீட்கப்பட்டனர்.

ஆயினும், இன்னமும் இடிபாடுகளின் ஒரு பகுதியை அடைய வேண்டுமாயின் நிச்சயமாக வேறொரு திசையில் இருந்து நிலத்தினடியினூடாக ஓர் சுரங்க வழிப்பாதை அமைத்தேயாக வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததொன்றாகக் காணப்பட்டது.

மறுகணமே, தாமதமெதுவுமின்றி மீட்புக் குழுவினர் தமது களைப்பு, அசதி, சோர்வு எதனையும் கருத்திலெடுக்காது மூன்றாவது அகழ்ப்பாதையையும் ஒருவாறு அமைத்தனர்.

அவ்வழியினூடாக உட்பிரவேசித்தவர்களின் பார்வையில் முதன்முதலில் தென்பட்டது உயிரிழந்த நிலையில் கால் கம்பியில் சிக்கிய நிலையில் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருந்த சடலம் தான். அது வேறு யாருமல்ல வங்கி ஊழியரான லியூ பெங் செக் தான்.

[illegible] சுவா கிம் சூ காயங்களுடன் மயங்கிய நிலையில் கிடந்தாள். மேலும் பல சடலங்கள் சிதைவுற்ற நிலையில் காணப்பட்டன. அப்போது பகல் 11.20 மணியாகியது. அத்தருணத்தில் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் சம்பவம் ஒன்று நடந்தது. வங்கியின் முகாமையாளரான செங் சொங் குவான் எவரின் உதவியுமின்றி தானாகவே இடிபாடுகளினூடாகத் தவழ்ந்த நிலையில் அவர்களிடம் வந்து சேர்ந்தார். உடலில் ஒரிரு சிராய்ப்புக் காயங்களைத் தவிர அவரது உடலில் வேறெந்தப் பாதிப்பும் இருக்கவில்லை. பசி, தாகத்தினால் மட்டும் சோர்வடைந்த நிலையில் காணப்பட்டார். 55 வயது நிரம்பிய அவரைப் பரிசோதித்த முதலுதவி வைத்தியர் பெரிதும் இவரது உடல்நிலை குறித்து ஆச்சரியம் தெரிவித்தார்.

திங்கள் கிழமை மாலை 4 மணியளவில் மீட்புப் பணி முடிவடைந்தது. மொத்தத்தில் 17 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். 43 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. மீட்கப்பட்டவர்களில் ஒரு ஆணின் வலதுகால் தொடை மட்டத்தின் கீழ் சத்திரசிகிச்சை மூலம் வெட்டியகற்றப்பட்டது.

இவ்விபரீதத்திற்கான காரணத்தைக் கண்டறிவதற்காக ஓர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனிருக்கும் அனைத்தும் குறித்த எச்சரிக்கை அறிகுறிகளைக் கண்டும் கவனியாது புறக்கணித்ததே இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணம் என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.



தமிழில் - ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரத்தில் வெளிச்சம்

சிறுகதை

கடந்த ஒரு வாரமாகவே ஓயாத பலத்த மழை பெய்து களைத்த பின் இன்று நன்கு மேகம் வெளுத்து முகம் உலரக்கக்காய்ந்தது. பறவை இனங்கள் உற்சாகத்துடன் கலகலத்தபடி மேலெழுந்து பறந்தன.

சிவந்தி ஏக்கத்துடன் வாசல் திண்ணையில் அமர்ந்திருந்தாள். கன்னங்கள் வீங்கி சிவந்து கன்னங்களில் விரல் அடையாளங்கள் பதிந்து ஒரு அப்பாவியாக உட்காந்திருந்தாள். பயப்பிராந்தியுடன் விறாந்தையைப் பார்த்தாள். அவள் கணவன் வரதன் அலங்கோலமாக ஆடை கலைந்து வாய் பிளந்து தூக்கத்தில் இருந்தான். இரவு அவன் ஆடிய பயங்கரம். அளவுக்கு மிஞ்சிய குடியினால் அவளை நன்கு அடித்து இம்சித்து விட்டான்...... இது நித்தம் நடக்கும் சித்திர வதைதான். ஆனால், இரவு மிகவும் ஆவேசமாக இருந்தான். காரணம் இரவு சாப்பாடு இல்லை. பானையில் இருந்தாலல்லவா அடுப்படியில் வரும். இரண்டு நாட்கள் அந்த வீட்டில் பட்டினி. அவளுடன் நன்றும் குஞ்சுமாக ஐந்து குழந்தைகள் நேற்று முழுவதும் வெறும் தேனீருடன் பசியுடன் சுருண்டு கிடந்தனர். அவளின் கடைசி மகன் மூன்று வயது தான் இருக்கும். பசியினால் இரவு முழுக்க அனுங்கியபடி தாயின் மார்பில் முகம் புதைத்து படுத்திருந்த கோலத்தை எண்ணினாலே அவள் உயிரே உருகிக் கலங்கியது. பாழும் இந்த மழையால் வெளியே எங்கும் போய் உதவி கேட்கவும் முடியாது போய் விட்டது. இப்போ இன்னொரு திக்கில் அவளைப் பதைக்க வைத்தது. வரதன் எழும்பியதும் தேத்தண்ணீர் ஒரு பெரிய கிண்



ணம் நிறையக் கொடுக்க வேண்டுமே. சீனி கொஞ்சம் கூட இல்லையே என்ன செய்யப்போகின்றேன்..... பயத்தினால் முகம் வியர்த்தது. தேத்தண்ணீர் கொடுக்காவிட்டால் உதைப்பானே. பரபரப்புடன் எழுந்து அடுக்களையினுள் புகுந்து தட்டிக் கொட்டித் தேடினாள். "ம் உம்" பிரயோசனமும் இல்லை.

கடவுளே நானும் பிள்ளைகளும் இங்கே. இரண்டு நாட்களாகப் பட்டினி. இவருக்கு குடிக்கமட்டும் எங்கிருந்து காசு வருகிறது. கவலை கொடுமையான மனம் இது. வயிறு புகைந்தது. அச்சமயத்தில் மயக்கம் வரும் போல் இருந்தது. கரகரவென கண்ணீர் வடிந்தது. பட்டென முதுகில் ஓர் உதைவிழுந்தது. துடிதுடித்து எழுந்தாள் சிவந்தி. "ஏனடி ஏன் இன்னும் தேத்தண்ணீர் வைக்கவில்லை அவ்வளவு அசட்டையா உனக்கு". "ஐயோ இல்லையப்பா சீனி முடிந்துவிட்டது. நேற்று முழுவதும் பிள்ளைகளை தேத்தண்ணீர் கொடுத்து தான் தாக்காட்டினேனப்பா பட்டினியப்பா" என்றபடி குரல் எடுத்து அழுதாள் சிவந்தி. முதுகுவலி தாங்காது அப்படியே மடிந்து உட்காந்தாள்.

வரதன் அப்படியே ஆடிப்போய் விட்டான். அவன் நெஞ்சம் துடித்து விட்டது. சிவந்தி கெஞ்சிய விதமும் குழந்தைகள் ஒடுங்கி படுத்திருப்பதையும் பார்த்தவுடன் மனம் கலங்கி விட்டது. அவன் இதயத்தில் பூகம்பம் ஏற்படத் தொடங்கியது. உண்மையில் இந்த பூகம்பம் இந்தக் குற்ற உணர்வு கடந்த சில வாரங்களாக அவனைச் சுட்டெரித்துக் கொண்டுதான் இருந்தது. அது இன்று அவனை ஒரு நல்ல கணவனாக்க உதவி விடும்போல் தோன்றியது.

பிள்ளை சிவந்தி என்று கூப்பிட்டபடி அவள் அருகே அமர்ந்து அவள் முதுகை வருடி விட்டான். அவள் எதிர்பார்க்கவில்லை இப்படி ஒரு பரிவை. "சிவந்தி நான் ஒரு பாவி என்னால் இந்தக் குடியை விட முடியவில்லையே, நான் முழுவதும் உழைக்கும் போது உன் மீதும் பிள்ளைகளின் மீதும் மட்டுமே நினைவுகள் இருக்கும். கையில் காசு மாலை நேரமும் வந்து விட்டால் பின் நான நானாகவே இல்லை. கட்டுப்படுத்தவே முடியவில்லையே, நான் உன்னை எத்தனை கொடுமைகள் செய்து விட்டேன், எனக்கு மன்னிப்பே இல்லை. இரவு முழுவதும் அட்டகாசம் செய்து விட்டுக் காலையில் மன்னிப்புக் கேட்கும் வரதனாக இல்லை. இப்போ இவன் என்பதை சிவந்தி புரிந்து கொண்டாள். உண்மையில் வருந்துகிறான் என்பது புரிந்ததும் கொஞ்சம் துணிவு கொண்டாள் சிவந்தி.

ஏதோ பேச வாய்திறந்து தயங்கினாள். "ம் சிவந்தி நான் இப்போ நல்ல மனிதனாகத் தான் இருக்கிறேன். சொல்ல வந்ததைச் சொல்லு பிள்ளை கண்மணி." இந்தக் குடியை நிறுத்த முடியாமல் கஷ்டப்படுவது மனக் கோளாறினால் ஏற்படுகுதாம். இந்த மனநிலையை ஒரு நிலைப்படுத்தி படிப்படியாக குடியை நிற்பாட்ட முடியுமாம். இதற்கு வைத்தியம் இருக்குதாம். மந்திகை வைத்தியசாலையில் வேலை செய்யும் கமலாக்கா சொன்னவா. நீங்களும் அந்த டாக்டர் ஐயா விடம் வைத்தியம் செய்தால் நன்றாக இருக்கும். ஆனால், சில நாட்கள் வாட்டில் இருந்துதான் வைத்தியம் செய்ய வேண்டுமாம. இன்று திங்கட் கிழமை மாலையில் அவர் விசேடமாக வருவாராம். இன்று நீங்கள் வாட்டில் அனுமதிக்கப்பட்டால் மாலையில் அவருடைய ஆலோசனையைப் பெறலாம் அல்லவா. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் சொல்லுங்கப்பா?" என்று கெஞ்சலாய்க் கேட்டாள்.

வரதன் யோசனையில் ஆழ்ந்ததால் முகத்தில் ஆயிரம் சிந்தனைக்கோடுகள் நெளிந்தன. மனதில் ஆயிரம் பயிர்கொட்டிப்புழுக்கள் மொய்த்தன. நானா? நானா? குடியை மறப்பது என்னால் முடியுமா? நீண்ட காலமாக அவனுடன் ஒட்டி உறவாடி உயிர் கலந்து அவனை மிருகமாக ஆட்டிப்படைக்கும் மதுவரக்கியை அவனால் பிரிவதென்பது உயிர் பிரிவது போல்தான் இருந்தது. ஆனாலும், சிவந்தியையும் பிள்ளைகளையும் இந்த நிலையில் காணும்போது மனம் இரக்கத்தால் நிரம்பி வழிந்தது. அவள் முகத்தையே, அந்த முகத்தில் நெளியும் சிந்தனைக் கோடுகளையே பார்த்தபடி மனதில் அகல் விளக்கை ஏற்றி அதில் ஒளி வருமா என ஏக்கத்துடன் காத்திருந்தாள் சிவந்தி.

"ம்..... சிவந்தி நான் சம்மதிக்கிறேன் உனக்காக நமது பிள்ளைகளுக்காக, நான் முழுமனதுடன் சம்மதிக்கிறேன். நாம் இப்பமட்டும் வேலைக்கு......"

"இல்லை ஒரு இடமும் போக வேண்டாம் எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்."

இரவு முழுவதும் அடி, உதை, மனவேதனை, வேதனை எல்லாம் மறந்து முகம் பளிரென ஒளிவிட்டது. ஏற்கனவே அழகான சிவந்தி இப்போ பேரழகுடன் தெரிந்தாள் வரதனின் கண்களுக்கு. "பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கோ இதோ பாக்கியம் அக்கா வீடு வரை போய்விட்டு வந்து விடுகின்றேன்." அட இப்படி ஒரு குதூகலமும் ஆனந்தமும் உண்டா? சிவந்தி துள்ளிக்குதித்து ஓடுவதை காதலுடனும் மகிழ்ச்சியுடனும் பார்த்தான். இப்படியொரு ஆனந்தமான வாழ்வை இக்குடியினால் இழந்து மிருகமாக மாறி சிவந்தியை இம்சித்து அடித்து உதைத்து சே...சே...இந்த ஐந்து குழந்தைகளும் எப்படி உருவாகின, எப்படி பிறந்தன, எப்படி வளருகின்றன என்ற சுயநினைவே இன்றி டன்றி சேற்றில் புரண்டு எழுவதைப் போல சிவந்தியை கசக்கிப் பிழிந்து ஐயையோ எத்தனை கொடுமை! என்னையே அருவருப்புடன் உணர்ந்தான் வரதன். தன்னையே ஒரு புழுவைப் பார்ப்பதைப் போல் பார்த்துக் கொண்டான்.

எழுந்து உள்ளே சென்று குழந்தைகளைப் பார்த்தான். குச்சி குச்சியான கைகால்களுடன் வயிறு உட்குழிந்து...... அம்மாடி அடிவயிற்றிலிருந்து புறப்பட்ட விம்மலை அவனால் அடக்கவே முடியவில்லை. விம்மி விம்மி அழுதான். குற்றவுணர்வினால் அழுகைக்கு தொண்டையில் விக்கியது. இரவு முழுவதும் பசியினால் அழுதழுது களைத்துத் தூங்கிப்போன கடைசிக் குழந்தையின் விம்மல் இன்னும் நிற்கவில்லை. நித்திரையிலேயே விம்மியது. பதறி எழுந்து வாரி அணைத்துத் தூக்கினான். அதன் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டான். "இனிமேல் இப்படியொருநிலை வர விடமாட்டேனடா கொஞ்ச நாட்கள் மிகக்கொஞ்ச நாட்கள் நான் வந்து விடுவேன் பிறகு பாருங்க இந்த அப்பாவை" சிவந்தி கொண்டு வந்த பாணை தேனீருடன் பிள்ளைகளும் அவனும் சாப்பிட்ட பின்பு மிகுதியை சிவந்தி சாப்பிட்டாள். பின்னர் வைத்திய சாலைக்குப் புறப்பட்டான் வரதன்.

மதியம் உணவு தயார் செய்தாள் சிவந்தி. அவளின் ஒரே ஒரு காப் பவுணோடு காசாக மாறி இருந்தது. குழந்தைகள் ஆவலோடு பரபரவென உணவை அள்ளி விழுங்கினர். அவளுடைய இரண்டாவது மகன் எட்டு வயது. வாய் நிறைய சோற்றை அள்ளி வைத்துக் கொண்டு சோறும் பருக்கைகள் சிதறச் சிரித்தான். பின் "அம்மா நாளைக்கும் சோறு சமைப்பீர்களா?" என்று ஆவலுடன் கேட்டான். சிவந்தி கண்கள் கலங்க "ஓமடா கண்ணா இனிமேல் ஒவ்வொரு நாளும் புதுப் புதுக்கறியுடன் சோறு சமைத்துத் தருவேன். பின்பு அப்பா சுகமாகி வந்த பின்பு உங்களை அவர் எப்படி வளர்க்கப்போகிறார் தெரியுமா" நம்பிக்கை வெளிச்சம் தூரத்தில் மிளிர்க்கிட வரதனுக்கு உணவு எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் சிவந்தி மந்திகை வைத்திய சாலை நோக்கி.....

## தொடரும் மனது



[illegible]
நீ பழகுவதைக் கவனித்தபடி நடந்து கொண்டிருந்தாய்.
[illegible]
[illegible]
அந்த நீண்ட நாளின் கண்களை நனைத்தபடி
[illegible]
[illegible]
மறைவு உன்னைத் தேடியபடி வாழுது
உன்னை நனைக்கிறது...
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
உன்னோடு [illegible]
[illegible]

நீ பார்வையால் மட்டும் உன்னைக் காட்டுகிறாய்.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
உனக்காக!
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
உன்னிடம்.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
திறந்து பார்த்தேன்.
[illegible]
[illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவல்

# மௌன மனவெளிகள்

15

நா.யோகேந்திரநாதன்

கிழக்கு வெளிக்கும் போதே விதானையார் குளித்து முடித்து விட்டார். முதல் நாள் பனைத் தென்னந்தோட்டத்தில் குடித்த தனிப்பனைக் கள்ளும் ஓடியல் கூழும் உடம்பை லேசாக்கி ஒரு புதிய உற்சாகத்தைக் கொடுத்து விட்டது போலவே தோன்றியது. அவர் கோவிலுக்குப் போவதற்குத் தயாராக ஆடை மாற்றிக் கொண்டிருந்த போதுதான் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அது என்னவாக இருக்கும் என அவர் யோசிப்பதற்கிடையில் சில வினாடிகளுக்குள் அடுத்த வேட்டொலியும் கேட்டது. அவை துப்பாக்கி வேட்டுகள் என்பதையும் மணியாறன் மூலைப் பக்கமிருந்தே வந்தன என்பதையும் அவரின் கூர்மையான காதுகள் கண்டு பிடித்துக் கொண்டன. ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டதைப் புரிந்து கொண்ட அவர் கோவிலுக்குப் போக உடுத்திய ஆடைகளைக் கழற்றி விட்டு அவரின் விதானையார் ஆடைகளான அரவிந் சேட்டையும் முழுக்கை நாஷனலையும் போட்டுக் கொண்டார். மடிப்புக் கலையாத பட்டுச் சால்வையை எடுத்துக் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டு அவசரமவசரமாக வெளியே வந்தபோது, ஒரு இளைஞன் சங்கடப் படலையைத் திறந்து கொண்டு முற்றத்துக்கு இளைக்கக் களைக்க ஓடி வந்தான்.

விதானையார் தன் பரபரப்பை வெளிக்காட்டாமலே "என்னடா? என்ன சங்கதி?" எனக் கேட்டார்.

அவன் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியவாறே "சிங்களை ஆரோ சுட்டுப் போட்டாங்கள்" என்றான்.

"என்ன! சுட்டுப் போட்டாங்களா?" என அதிர்ச்சியுடன் கேட்ட விதானையார் "என்ன பெரிய காயமோ?" என வினாவினார்.



அவன் "தெரியாது! நான் அங்கை போகயில்லை. மணியகாரன்தான் இப்படிச் சொல்லச் சொல்லி அனுப்பி விட்டவர்" என்றான்.

விதானையார் தாமதிக்கவில்லை. அவனிடம் "டேய் உப்பிடியே ஓடிப்போய் மணியத்தைக் காரைக் கொண்டு வரட்டாம்... பிந்தாமல் உடனே வரட்டாம் என்டு சொல்லு" என்றார்.

அவன் மீண்டும் மணியம் வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தான். சிங்கன் உயிருக்கு மட்டும் ஏதாவது நடந்தால் அடுத்து நடக்கப் போகும் சம்பவங்களைத் தன்னால் கட்டுப்படுத்த முடியுமோ என்ற சந்தேகம் விதானையாருக்கு எழ ஆரம்பித்து விட்டது.

அந்த இளைஞன் சொன்னது எல்லோருக்கும் கேட்டிருக்க வேண்டும். அனைவரும் விதானையாரைச் சுற்றிக் கூடி விட்டனர்.

சீதேவிப் பாட்டி மெல்ல முணுமுணுத்தாள். "உது ஆண்டி வெட்டையாரின்ரை வேலையாகத்தான் இருக்கும்."

விதானையார் சீறி விழுந்தார். "நீ போய்ப் பாத்தனியே"....?

கிழவி விடவில்லை. "ஏன் பாப்பான் மணியாறன் மூலையார் தாங்கள் என்ன சாதியெண்டில்லாமல் அவங்களட்டை மாப்பிள்ளை எடுக்க வெளிக்கிட்டால் அவங்கள் விடுவமெண்டவங்களோ?"

சீதேவிப் பாட்டியின் ஊகம் சரியாகத்தான் இருக்கும் என விதானையாரும் நினைத்தார். ஆனால் கமலியைச் சுடாமல் ஏன் சிங்கனைச் சுட வேண்டும் என்ற கேள்வி அவருள் எழாமல் இல்லை.

அவையெல்லாவற்றையும் கேட்ட போது வெளி விறாந்தையில் நின்றிருந்த சொர்ணத்துக்கு ஒரே குழப்பமாக இருந்தது. கலியாண சந்தோசத்தில பூரித்திருந்த கமலியின் முகமும், சுதாரியமும் அவளின் முகமும் சொர்ணத்தின் நினைவில் மாறி மாறி வந்து மறைந்தன.

கனகாம்பிகை தேனீரைக் கொண்டு வந்து விதானையாரிடம் நீட்டினாள். விதானையார் முற்றத்தில் நின்றவாறே தேனீரை வாங்கி அவசரமாகக் குடித்து முடித்தார்.

விதானையாரும் சின்னனை இப்படிப் பகிரங்கமாகக் கலியாணம் செய்திருந்தால் அவருக்கும் சூடு விழுந்திருக்கும் என்பதை நினைத்த போது கனகாம்பிகையின் நெஞ்சு ஒரு முறை நடுங்கியது. ஆனால், அவள் அதை வெளிக்காட்டாமலே மூக்குப் பேணியை வாங்கிக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

மணியம் முகம் கூடக் கழுவாமல் காரைக் கொண்டு வந்து விட்டான். அதனால் தானோ என்னவோ வழக்கமாக அவனின் காருக்குள் மணக்கும் ஊதுபத்தியின் வாசனையும் இல்லாமற் போயிருந்தது. விதானையார் ஏறி முன் சீற்றில் அமர்ந்து கொண்டு "மணியாறன் மூலைக்கு விடு" என்றார்.

கார் பொன்னுக்குட்டி வீட்டுக்குத் திரும்பும் சந்தியை நெருங்கிய போது தம்பியன் அவசரமாக எங்கோ போய்க் கொண்டிருந்தான். விதானையோ காரை நிறுத்தச் சொல்லி விட்டு தம்பியனிடம் "டேய் இஞ்சை வா சிங்கனுக்கு என்ன நடந்தது" எனக் கேட்டார்.

அவன் "சிங்களை ஆரோ சுட்டுப் போட்டாங்கள். செத்த இடத்திலேயே பிரேதம் கிடக்குது" என்றான் அவன். முகத்தைப் பயம் கௌவியிருந்தது.

"எங்கை நடந்தது?"

"காலையில வேம்படி வடலி வெளிக்குப் போனவனாம் வெடிச்சத்தம் கேட்டு அயலட்டைச் சனம் ஓடிப் போய் பாத்தால் பிரேதம் தான் கிடந்ததாம்"

"மணியம் காரை வேம்படி வடலியடிக்கு விடு" என்றார் விதானையார். அந்த ஊரில விதானையார் வீடு உட்பட ஒரு சில வசதி படைத்தவர்களின் வீடுகளிலே மலசலகூடம் உண்டு. ஏனையோருக்கு வடலிக் காணிகளே பொது மலசலகூடங்களாக விளங்கின.

விதானையார் அங்கு போய் இறங்கிய போது மணியாறன் மூலைச் சனம் அங்கு ஏராளமாகக் கூடி நின்றது.

வடலிக் காணிக்குள்ளிருந்து வெளியே வரும் ஒற்றையடிப் பாதையில் சிங்கனின் பிரேதம் வானத்தைப் பார்த்தபடி கிடந்தது. கமலி அவனின் கால் மாட்டில் கிடந்து கதறிக் கொண்டிருந்தாள். வீரபாகு முதலாளியின் நம்பிக்கையான வையாளாக திருகோணமலையைக் கலக்கின பொன்னுக்குட்டி விதானையாரைக் கண்டதும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

"ஐயா இரண்டு நாளில்லை என்ர பிள்ளையைக் கைம்பெண்ணாக்கிப் போட்டாங்கள்" என்று விட்டு பலமாக அழத் தொடங்கினான் பொன்னுக்குட்டி.

"ம்... ஏதோ நடந்துட்டுது... பாப்பம்" என்று விட்டு விதானையார் பிரேதத்தை நோக்கிப் போனார். ஒரு சூடு இருதயத்துக்குள் நேராகவும் மற்றது நடு நெஞ்சிலும் விழுந்திருந்தன. அவர் உடுப்பு மாற்றிக் கொண்டிருந்த போது கேட்ட வெடிச் சத்தங்களும் சிங்கனின் உடலில் கிடந்த காயங்களும் இரட்டைக் குழல் துப்பாக்கிதான் கொலைக்குப் பாவிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தியது. அதுமட்டுமன்றி, உடனடியாக உயிரைப் பறிக்கக் கூடிய வகையில் குறிப்பான இடங்களில் விழுந்த சூடுகள் ஒரு நல்ல அனுபவம் கொண்ட வேட்டைக்காரனே சுட்டிருக்க முடியும் என அவரை ஊகிக்க வைத்தன.

முதல்நாள் பனைக்குப் போனபோது சுட்டிபுரத்தில் பொன்னம்பலத்தையும் இராமலிங்கத்தையும் சந்தித்ததும் அவர்களுடன் இரு புதிய நபர்கள் வந்திருந்ததும் அவரின் நினைவில் வந்து போயின. சிங்கன் கொலை தொடர்பாக சில விடயங்கள் வெளிப்பதாக அவருக்குத் தோன்றியது.

விதானையார் அங்கு நின்ற சின்னப்பனைக் கூப்பிட்டு "இஞ்சை வா இதிலை நாலு தடி நட்டு பிரேதத்தில வெயில் படாமல் ஒரு கோட்டி கட்டி விடுங்கோ. ஒரு வெள்ளைத் துணியால பிரேதத்தை மூடி விடுங்கோ" என்றார்.

பின்பு அவர் பொன்னுக்குட்டி பக்கம் திரும்பி "நான் போய் பொலிஸ், நீதவான் எல்லாரையும் கொண்டு வாறன். விசாரணை முடிஞ்ச பிறகு வீட்டை கொண்டு போகலாம்" என்றார். பொன்னுக்குட்டி விம்மியவாறே தலையாட்டி விட்டு "ஐயா பிரேதம் எரியிறதுக்கிடையில்லை நாலு ஆண்டி வெட்டையாரையெண்டாலும் வெட்டாமல் விடமாட்டன்" என்றான். விதானையாரின் முகம் மாறியது.

விதானையார் உறுமினார். "விசர்க்கதை கதையாதை! எனக்கு என்ன செய்ய வேணுமெண்டு தெரியும். நான் எதுக்கும் போட்டு வாறன் என்ன?"

பொன்னுக்குட்டி சரியெனத் தலையாட்டினான். அவன் எவ்வளவு சண்டியனாக இருந்த போதும் விதானையாருக்கு மரியாதை கொடுக்கத் தவறுவதில்லை.

விதானையார் காரில் ஏறப் போன போது சிங்கனின் தாய் கதறியவாறே தலைவிரி கோலமாக ஓடி வந்தாள். விதானையாரைக் கண்டதும் அவள் "ஐயோ... ஐயா... எல்லோரும் சேர்ந்து என்ரை பிள்ளையைத் தின்றிட்டாங்களே" எனப் பொரியத் தொடங்கினாள்.

"சரி, நான் அதைப் பார்க்கிறன். அடுத்த கலகம் துவக்காமல் வாயைக் கவனமாப் பாவி" என்ற விதானையார் பொன்னுக்குட்டி பக்கம் திரும்பி "பெத்த வயிறு எரியத்தான் செய்யும். அவள் ஏதும் இசக்குப் பிசகாய் கதைத்தாலும் நீங்கள் காதிலை விழுத்தாதையுங்கோ" என்றார்.

கார் பருத்தித்துறை நோக்கிப் பறந்தது.

சிங்கனின் தந்தை சிதம்பரப்பிள்ளை மிதித்த இடத்துப் புல்லுக் கூடச் சாகாது என்பார்கள். அவ்வளவு தூரம் எல்லோராலும் நல்ல மனிதர் எனப் போற்றப்படுபவர். அவர் ஒரு நல்ல தோட்டக்காரன் மட்டுமன்றி புகையிலைக்குப் பதமாகப் புகை போடுவது, பாலி காச்சுவது போன்ற தொழில்களிலும் சிறந்து விளங்கினார். எவர் கேட்டாலும் மறுக்காமல் அவ்விடயங்களில் உதவி செய்வார் அவர். சிங்கனும் கூட தகப்பனைப் போலவே ஊருக்குள் நன்மதிப்புப் பெற்றிருந்தான். தகப்பனின் தொழில்களை நன்றாகவே கற்றுக் கொண்ட அவனும் மற்றவர்களுக்கு உதவி செய்யத் தயங்குவதில்லை. அதுமட்டுமன்றி சிங்கன், சிவஞானம், கனகசபை ஆகியோர் சேர்ந்து ஒரு வாசிகசாலை ஆரம்பித்து இரவில் சிறுவர் சிறுமியருக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்கவும் ஆரம்பித்தனர்.

எனினும், ஒரு சிலருக்கு இவர்களைப் பிடிப்பதில்லை. மது அருந்திவிட்டு சண்டித்தனம் செய்வதும் சாதிப் பெயர் சொல்லிச் சிலரை மரியாதை குறைவாகக் கதைப்பதும் என உதிரிகளாகத் திரிந்த சிலர் இவர்களை வெறுத்தனர். ஆனால் சிங்கனோ சிவஞானமோ அவர்களைப் பொருட்படுத்துவதில்லை. அவர்களுடன் எவ்வித தொடர்புகளையும் வைப்பதில்லை.

ஆனால், சிங்கன் மணியாறன் மூலையில் கலியாணம் செய்த விடயம் ஆண்டி வெட்டையார் சிங்கன் மேல் வைத்த நல்ல அபிப்பிராயத்தையே பாழடித்து விட்டது. சாதியின் மானத்தையே விற்று விட்டதாக ஆத்திரப்பட்டனர். எனினும், சிங்கனை வெறுக்க விரும்பாத சிலர் சிங்கனில் பிழையில்லையெனவும் காலி மருந்து போட்டு அவனை மடக்கி விட்டதாகவும் தம்மைச் சமாதானப்படுத்திக் கொண்டனர்.

சிங்கன் மணியாறன் மூலையில் திருமணம் செய்த விடயத்தை சிதம்பரப்பிள்ளை கேள்விப்பட்ட போது அவரின் முகம் மாறியதேயொழிய அவர் எதுவுமே பேசவில்லை. சால்வையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு ஆவரைச் சந்திக்கு வந்து விட்டார்.

அவர் வீட்டில் கூட ஒருவருக்குமே எதுவும் சொல்லாமல் கீரிமலைக்கு பஸ் ஏறி விட்டார். அங்கு போய் சிங்கனுக்கு மரணச் சடங்கு செய்து அந்தியேட்டிக் கிரியைகளும் நடத்தி முடித்து விட்டு திரும்பி விட்டார். அவர் அதன் பிறகு எவரிடமும் எதுவும் பேசுவதில்லை.

சிங்கனுக்கும் சூடு விழுந்த அன்று காலை அவரிடம் ஓடிப்போய் சிங்கன் இறந்த செய்தியைச் சொன்ன போது அவரின் வைரம் பாய்ந்த அந்த உடல் ஒருமுறை ஆடியது. கண்களிலிருந்து நீர் பொலுபொலுவென வழிய ஆரம்பித்தது.

பின்பு அவர் உறுதியான குரலில் சொன்னார் "என்ரை பிள்ளை நாலாம் நாளே செத்துப் போட்டான். இப்ப செத்தது பொன்னுக்குட்டியின்ரை மருமோன்"

அதன் பிறகு அவர் அந்த இடத்தில் இருக்கவில்லை. அவர் எழுந்து போய் விட்டார்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## காதல் என்பது

[illegible]
உன்னதமான உறவு காதல்
[illegible]
[illegible]

[illegible]

நிறைவேறிய காதல் வாழ்க்கையாகிறது
நிறைவேறாத காதல் கவிதையாகிறது
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
இல்லை, இல்லை
[illegible]

திருமதி. [illegible]

## தீர்த்து வைக்கப் போவதில்லை

கௌரவமில்லாத சுதந்திரம்
காற்றுப்போன பலூன் மாதிரி
சமத்துவமற்ற சுதந்திரம்
சாக்கடை நாற்றம்!

உரிமைகளற்ற சலுகை
உரிக்க உரிக்க வரும் வெங்காயம்
புரிந்துணரப்படாத பேச்சு
புஸ்வாணம்!

அந்தரத்தில் சொர்க்கமாக
அவதிப்படும் தமிழர் தீர்வு
அந்தநாள் முதல் இன்றும்
சரித்திரம் படைக்கவில்லை!

எந்த ஆட்சி வந்தாலும்
இந்த நாட்டில் மட்டும்
செந்தமிழர் பிரச்சினையை
தீர்த்து வைக்கப் போவதில்லை.!

சேனையூரன்-மூதூர் கிழக்கு.



## மழை மீண்டும் வருமா?

மழைக்காகக் காத்திருந்த
மண்ணிற்கு மழை பெய்தது
மக்கள் அதில் பயிர் செய்தார்கள்
மண் வளம் அடைந்தது
மழை தொடர்ந்து பெய்து
வெள்ளத்தை ஏற்படுத்தியது
பயிரை அழித்து மக்களை அழவைத்தது
மழை நின்றது – ஆனால்
மக்கள் வெறுப்படையவில்லை
அடுத்த மழையினை எதிர்பார்த்துக்
காத்திருக்கின்றனர்
அழிவில்லாத மழையினை!
பயிர் செய்து நாட்டைக்
கட்டியெழுப்ப – மழை
மீண்டும் வருமா?

நா.கோபிநாத், தரம் 12
கிளி/ மத்திய கல்லூரி,கிளிநொச்சி



## பயணங்கள் முடிவதில்லை

தோழியே!
நம்மிருவரது பாதைகள்
மாறிப்போனாலும்
நம் பயணங்கள்
முடிவதில்லை. –உன்
பாதங்கள் மட்டும்
என் நிழலை விட்டு
விலகிச் செல்கிறது
கவலும் வெப்பம் தாழாமல்
அலறிப் போகிறது–உன்
பாதங்கள்.........!
உன்மொழிகள் மரணித்து
ஊமையாகி விட்டன
மௌனங்கள் மட்டும்
உயிரோடு இருக்கட்டும்
நான் உன்னை உணர!

சிறி[illegible] [illegible]யாளைக்கள், [illegible]
[illegible] பூநகரி.

## நீ மலரா?

உமிழ்க்கும்
வர்ணத்தைத் தவிர
ஏனைய
வர்ணத்தையெல்லாம்
உறிஞ்சிக் கொள்ளும்
மலர்கள் போல்– என்னில்
உன் நினைவுகளை
உமிழ்ந்துவிட்டு
ஏனையவற்றை
உறிஞ்சிக் கொண்டாயே

என். அகநிகா

## பட்டாம் பூச்சிக் காதல்

அள்ளி ஒளி வீசிய வெள்ளி நிலவு
என் வீட்டு முற்றத்தில் மட்டும்
ஏனோ உடைந்து கிடக்கிறது?
உடைந்த துகள்களில் கூட ஒளியில்லை
இருளே கசிகிறது
கசிகின்ற இருளினைக்
கண்ணீர் ஈரமாக்குகிறது.

எனது கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்கு
கலர் பூசிய உன் நினைவுகள்
தூக்கிலிடப்பட்டிருக்கின்றன
எனது ஞாபக மேடையிலே
மூச்சறுந்த சுவாசங்களாய்!

மகிழ்ந்திருந்த மலர்வனங்கள்
சுடுகாடுகளாய்!
சிரித்திருந்த சில கணங்கள்
பாலைவனப் பதிவேடுகளாய்!
விழிகளின் ஈரம் கசிகின்றதெனினும்
உள்ளே இறுகிக் கிடக்கிறது
சருகாய்.....

அணைகின்ற தீபமும்
அழிகின்ற காதலும்
அழகாய்த் தெரிவது இயற்கையே

என் காதல்மட்டும் என்ன
அதற்கு விதிவிலக்கா?
சிறகு ஒடிந்து
அழகு அழிந்து
இறுதியைத் தேடிக் கொண்டது
ஒருநாள் வாழும் பட்டாம்பூச்சியாய்
என் பட்டாம் பூச்சிக் காதல்!

இருந்தாலும்.......
என் மனவீதிகளிலும்
விரல் நுனிகளிலும்
ஆங்காங்கே சில வர்ணத் துகள்கள்
பட்டாம் பூச்சிக் காதலின்
பரிசுகளாய்.......!

சம்பநாதன் செல்வமலர்
விநாயகபுரம் -02
திருக்கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைந்துவிட்ட நாள்களும் தொலையா நினைவுகளும்

புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை கிராமங்கள். முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவில் நெய்தல் நிலத்தில் அமையப்பெற்றுள்ளன. வன்னியுத்தத்தின் இறுதிக்காலப் பகுதிகளில் மன்னார் மாவட்டத்திலிருந்தும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் கட்டம் கட்டமாக இடப்பெயர்வுகளைச் சந்தித்த மக்கள் அனேகமானோர் போரின் இறுதி நாள்களில் இந்த நெய்தல் நிலத்தில் தான் அடைக்கலம் புகுந்திருந்தார்கள். போரின் கொடூரத்தால் பல நூற்றுக்கணக்கான மக்களின் குருதிக்கறை படிந்துவிட்டதால் தற்போது அனைவரது மனங்களிலும் இந்தக் கிராமங்கள் பதிவாகிவிட்டன. அதாவது உள்நாட்டின் இறுதிப் போருக்கு முன்னரான காலங்களில் வடபகுதியில் பெரும்பாலான மக்கள் புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை ஆகிய கிராமங்களை அறிந்திருக்க வாய்ப்பிருந்ததில்லை. ஆனாலும், யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு மக்களுக்கும் நெய்தல் நிலமான புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணைக் கிராமங்களுக்கும் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரான காலங்களிலேயே கடற்தொழில் ரீதியாக நெருக்கமான உறவுப்பாலம் இருந்ததை அறியமுடிகிறது.

குறிப்பாக 1990ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலங்களில் வடமராட்சி கடற்றொழிலாளர்கள் மீன்பிடி வள்ளங்களிலும் மீன்பிடிப்படகுகளிலும் கடல் வழியாக மாத்தளன், பொக்கணைக் கிராமங்களுக்கு வந்து கடற்கரையோரங்கள் வாவிகள் அமைத்து பலமாதங்களாக அங்கு தங்கி நின்று தமது கடற்றொழில்களை மேற்கொண்டு வந்தனர். அவர்கள் தாங்கள் வாவிகள் அமைத்திருந்த பகுதிகளில் தென்னங்கன்றுகளை நட்டிருந்தனர். அவையே வளர்ந்து பின்னரான காலங்களில் தென்னந்தோட்டங்களாகி இருந்தன. அன்றைய நாள்களில் புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை ஆகிய கிராமங்களைப் பொறுத்தவரை ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுடன் ஒப்பிடும் போது ஒப்பிட்டளவில் சனத்தொகை குறைவானதாகவே இருந்தது. தொடர்ந்து வந்த நாள்களில் 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதிகளில் முல்லைத்தீவு இடப்பெயர்வின் போது குறிப்பிட்ட ஒரு தொகுதி முல்லைத்தீவு மக்கள் இடம்பெயர்ந்து வந்து மாத்தளன், பொக்கணைக் கிராமங்களில் குடியிருந்தனர். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் புதுமாத்தளனின் தனியார் வீட்டில் இயங்கி வந்தது. 1990 ஆம் ஆண்டில் நடுப்பகுதியில் உள்நாட்டு யுத்தம் முனைப்புப் பெற்றதினால் போக்குவரத்துப்பாதைகள் தடைப்பட்டதோடு கடற்தடைச் சட்டத்தின் விளைவாக ஆழ்கடல் மீன்பிடித் தொழிலும் முடங்கிப்போனது. இதன் விளைவாக யாழ். வடமராட்சி கடற்றொழிலாளர்களுக்கும் புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணைக் கிராமங்களுக்கும் இடையிலான உறவுநிலைகளும் துண்டிக்கப்பட்டிருந்தன.

அந்தக் காலப்பகுதிகளில் தான் 1993ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் புதுமாத்தளன் பிரதான சந்தியை அண்டிய பகுதியில் அப்பகுதி மக்களால் சாள்ஸ் நினைவு மண்டபம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த சாள்ஸ் நினைவு மண்டபத்தின் திறப்பு விழா நடைபெற்ற அன்றைய தினம் துயரமான சம்பவம் ஒன்றையையும் இந்தக் கிராமம் சந்தித்திருந்தது. அதாவது சாள்ஸ் மண்டபத் திறப்பு விழா இடம்பெற்று மண்டபத்தின் வெளிப்புற வளாகத்தில் அரங்கத்தில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. அந்த இராப்பொழுதிலும் அலங்கரிக்கப்பட்ட மின்குமிழ்களில் வர்ண ஒலிகளால் அந்த இடம் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அந்த பிரகாசமான வெளிச்சத்தில் அரங்கத்திற்கு முன்பாக அமைந்திருந்த மக்களின் மனங்கள் கலை நிகழ்வுகளுடன் ஒன்றிப்போயிருந்தன. மின்குமிழ்களின் பிரகாசமான வெளிச்சங்களினால் வானத்தில் வந்துகொண்டிருந்த இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான புக்காரா விமானத்திற்கு தனது இலக்கைத் தேர்வு செய்வதற்கு சிரமங்கள் எதுவும் இருக்கவில்லை. வானத்தில் இரைந்துகொண்டு வந்த புக்காரா விமானம் அந்தப் பகுதியை வட்டமிட்ட கையோடு மூன்று நான்கு குண்டுகளையும் வீசியது. மின்குமிழ்கள் அணைந்தன. எங்கும் கரும்புகை மண்டலம் மரண ஓலங்கள் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் குருதி வெள்ளத்தில் கிடந்தனர். ஏனைய மக்கள் கால் போன போக்கில் ஓடித் தமக்கான பாதுகாப்புக்களைத் தேடிக் கொண்டனர். இன்னும் சிலர் செய்வதறியாது குப்புறப்படுத்துக் கொண்டனர். வந்த புக்காரா விமானம் தனது கோர நாடகத்தைக் கச்சிதமாய் அரங்கேற்றிவிட்டு திரும்பிவிட்டது. காயமடைந்தவர்கள் உடனடியாகவே புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் உடலங்கள் உறவினர்களால் பொறுப்பேற்கப்பட்டது. ஊரெங்கும் சாக்குரல்கள் கேட்டன. மாத்தளன், பொக்கணை கிராமங்கள் துயரத்தில் மூழ்கிப்போனது. இந்த துயரந் தோய்ந்த சம்பவம் அன்றைய நாள்களின் போர்க்காலச் சூழ்நிலை மற்றும் செய்தித்தணிக்கை, தகவல் தொடர்பு வசதிகள் அற்ற சூழ்நிலை என்பவற்றினால் மூடி மறைக்கப்பட்டது. இதனால் நாட்டின் ஏனைய மக்கள் கூட இந்த துன்பியல் சம்பவத்தை அறிந்திருக்க வாய்ப்பிருந்திருக்க வில்லை.

இதன் பின்னரான நாள்களில் 1995 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணம் அரச படையினரின் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் நிமித்தமாக குடாநாட்டிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் தங்களின் வசதிக்கேற்பவாறு வன்னிப் பெருநிலப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலும் தஞ்சமடைந்தனர். இந்நிலையில் வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களின் அனேகமானோர் தொழில், கல்வி ஆகிய இரண்டு காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு மாத்தளன், பொக்கணை ஆகிய பகுதிகளில் தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களின் குடியேற்றங்களைத் தொடர்ந்து மாத்தளன், பொக்கணைக் கிராமங்கள் களைகட்டத் தொடங்கியிருந்தனர் சோபையிழந்த கிராமங்கள் புதுப்பொலிவு பெற்றன.

காலைவேளைகளில் வீதிகளில் வெள்ளைச் சீருடைகளில் சைக்கிள்களிலும், கால்நடையாகவும் பாட சாலைக்குச் செல்கின்ற காட்சியானது இந்தக் கிராமங்களுக்கு ஒருவிதமான புத்தெழுச்சியை ஏற்படுத்தியிருந்தது. மாத்தளன் சந்தி எந்த நேரமும் கலகலப்பாகவே இருந்தது. அனிற்றா சிகை அலங்கரிப்பு நிலையத்தில் முடி வெட்டவும் பத்திரிகைகள் வாசிக்கவும் என எந்த நேரமும் ஒரு கூட்டத்தினரை அங்கே காணலாம். அதனை அண்டியதான வர்த்தக நிலையம் இரண்டு எரிபொருள் நிலையங்கள், தையலகம், வெண்மைக்கடை, சைக்கிள் திருத்தகங்கள் என இவைகளைச் சூழ இளைஞர் கூட்டமொன்றை எந்த நேரங்களிலும் அவ்விடத்தில் காணலாம்.

சாள்ஸ் மண்டபத்தை அண்டியதாக நெய்தல் சுவையகம், அரைக்கும் ஆலை, உந்துருளி திருத்தகம், மரக்கறிச்சந்தை, இறைச்சிக் கடை, வர்த்தக நிலையம் என இவைகளைச் சூழவும் சனக்கூட்டம். அத்துடன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நுகர்வுக் கிளை என அன்றைய நாள்களில் புதுமாத்தளன் பகுதி குட்டி நகரத்தை ஒப்பானதாகவே இருந்தது. அந்தக் காலப்பகுதியில் முல்லைத்தீவுப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருந்தது. அதைத்தொடர்ந்து முல்லைத்தீவுக்கு மக்கள் சென்றுவரவும் கடற்றொழில்களை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அந்தக் காலப்பகுதி போர்க்காலங்களாக இருந்தாலும் மாத்தளன், பொக்கணைப் பகுதிகளில் போர் அச்சுறுத்தல்கள் எதுவும் இருந்ததாக இல்லை. ஏனெனில் அன்றைய நாள்கள் போர் A-9 வீதியை மையமாக வைத்து மாங்குளத்திற்கு அப்பாற்பட்ட பகுதிகளிலேயே போர் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. ஆதலால் போரோசைகள் எவையும் இந்தப் பகுதிகளுக்கு கேட்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை. விமானத் தாக்குதல்களும் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதிகளையே குறியாகக் கொண்டிருந்தன. சில இரவுப் பொழுதுகள் இலங்கை கடற் படையினருக்கும் கடற்புலிகளுக்கும் கடல் சண்டைகள் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் உண்டு. அந்தவேளைகளிலெல்லாம் கடற்கரையில் கட்டுமரங்களில் இருந்தவாறு நாங்கள் அவற்றை வேடிக்கை பார்ப்பதுண்டு. கடற்படையினரின் தாக்குதல்களில் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் சிலர் கொல்லப்பட்டதோடு அவர்களின் மீன்பிடி உபகரணங்களும் அழிக்கப்பட்டன.

பொருளாதாரத் தடை மற்றும் கடற்தடைச் சட்டம் என்பவற்றினால் குடும்ப வருமானத்தில் விழுக்காடு அத்துடன் வறுமை நிலை ஆகியன மக்களின் வாழ்வியலில் இழையோடி இருந்தாலும் அவற்றை வெளிக்காட்டாதவாறு சந்தோசமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். புதுமாத்தளன் றோ.க.ஆரம்பநிலைப் பாடசாலையில் மாலை வேளைகளில் கலைமகள் கல்வி நிலையமும், சாள்ஸ் மண்டபத்திற்கு அண்மையில் அன்பு கல்வி நிலையமும், அம்பலவன் பொக்கணை கனிஷ்ட வித்தியாலயத்தின் நெய்தல் கல்வி நிலையமும் என தனியார் கல்வி நிலையச் செயற்பாடுகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டதனாலேயே அனேகமான மாணவர்கள் கல்வி பொதுத் தராதர சாதாரணப் பரீட்சைகளில் சித்தி எய்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தன.

மாலைவேளைகளில் சைக்கிள்களில் வந்த இளைஞர் பட்டாளம் புதுமாத்தளன் சந்தியில் ஒன்று கூடுவார்கள். நாட்டின் நடப்புக்கள் ஊர்ப்புதினங்கள் எல்லாம் அவ்விடத்தில் அலசப்படும். காலையிலிருந்து கதிரவன் மறையும் வரையிலும் புதுமாத்தளன் சந்தி கலகலப்பாகவே இருக்கும். புதுமாத்தளன் சந்திக்கு மேற்புறமாக இருந்த மாதா திருச்சொரூபத்தை அண்டியதான புளியம் மரநிழலின் கீழ் மதிய வேளைகளில் வயதில் மூத்தவர்கள் பலர் ஓய்வாக அமர்ந்திருந்து தொழில் விடயங்கள் மற்றும நாட்டு நடப்புகளில் தங்களுக்குள் அலசுவார்கள். அந்த நாள்கள் மறக்க முடியாதவைகள் தாம்.

குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்து மாத்தளன் பொக்கணை கிராமங்களில் குடியேறியதை அடுத்து புதிய குடியிருப்புக்களும் முளைத்திருந்தன. அதாவது வாசன் குடியிருப்பு, சிட்டுக் குடியிருப்பு, விக்னம் குடியிருப்பு, அன்பு குடியிருப்பு என இன்னும் பல புதிய குடியிருப்புக்களும் முளைத்திருந்தன. இரவு வேளைகளில் ஏதாவது ஒரு குடியிருப்பிலாவது சினிமாத் திரைப்படம் காண்பிக்கப்படுவது வழமை. எந்தக் குடியிருப்பில் என்ன திரைப்படம் காண்பிக்கப்படும் என்ற தகவல்களையெல்லாம் அறிவதற்கு மாலை வேளைகளில் புதுமாத்தளன் சந்திக்குச் சென்றாலே போதும். நல்லது கெட்டது உட்பட எல்லாத் தகவல்களையும் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறாக அன்றைய மக்கள் போர்ச் சூழ்நிலை காரணமாக வெளியகச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டு குடும்பப் பொருளாதார நிலைமைகளும் மந்தகதியில் இருந்தபோதிலும் ஒருவிதமான மகிழ்ச்சியான வாழ்க்கை நிலை இருந்தது. இறுதிக்கட்டப் போரின் போது இந்தக்கிராமங்கள் இடம் பெயர்ந்த லட்சக்கணக்கான மக்களின் தரப்பாள் கூடாரங்களால் நிரம்பியிருந்தன. போரின் இறுதி நாட்களில் இரத்தக்கறை படிந்த அழிவுற்ற மண்ணாக மாறின. அக்கிராமங்களில் வாழ்ந்த மக்கள் மீள் குடியமர இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி..பிட்ஸ்

## மீண்டும் வருவாரா ஐஸ்வர்யா ராய்?

குழந்தை குடும்பம் என புதிய உலகில் இருக்கும் தன் மனைவி ஐஸ்வர்யா ராய் விருப்பப்பட்டால் மீண்டும் நடிக்கலாம் என்று அபஷேக் பச்சன் கூறினார்.

ஐஸ்வர்யா ராய் கடைசியாக நடித்த படம் குஜாரிஸ். நடிக்க ஒப்புக் கொண்டு, கர்ப்பம் காரணமாக விலகிய படம் ஹீரோயின்.

ஐஸ்வர்யா ராய்க்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் பெண் குழந்தை பிறந்தது. தற்போது குழந்தையுடன் விளையாடிக்கொண்டும், குழந்தைக்குத் தேவையானதை செய்துகொண்டும் முழு நேரமும் செலவிடுகிறார்.

## மோசமான நடிகருக்கான விருது

பாலிவுட் நடிகர் சல்மான்கானுக்கு மோசமான நடிகருக்கான விருது கிடைத்திருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காண்டா விருதுகள் என்ற பெயரில் பாலிவுட்டின் மோசமான நடிகர், நடிகை, டைரக்டர் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் விருது வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்தாண்டுக்கான விருது பட்டியலில் சல்மான்கானுக்கு மோசமான நடிகருக்கான விருது கிடைத்திருக்கிறது.

## முத்தம் வேண்டாம்

விண்மீன்கள் படத்தில் நடித்துள்ள ஷிகா, நிருபர்களிடம் கூறியதாவது: விண்மீன்கள் படத்தில் ஒரு குழந்தைக்கு அம்மாவாக நடித்துள்ளேன். இது அழுத்தமான கதை. படம் பார்த்தவர்கள் என் நடிப்பைப் பாராட்டினார்கள். இப்போது படம் பார்த்து கதை சொல் வன யுத்தம் படங்களில் நடித்து வருகிறேன். இந்தப் படத்துக்காக அடர்ந்த காட்டுப் பகுதியில் நடித்தது வித்தியாசமான அனுபவமாக இருந்தது. முத்தக்காட்சியில் நடிப்பீர்களா என்கிறார்கள். அது போல் நடிக்க விருப்பம் இல்லை. தொடர்ந்து தமிழில் நடிக்க முடிவு செய்துள்ளேன்.

## சிறப்புவிருந்தினராக நயன்தாரா

நடிகர் ஆர்யா புதிதாக கட்டியிருக்கும் வீட்டில் நடிகை நயன்தாரா குத்துவிளக்கேற்றினார். நடிகர் ஆர்யா சென்னை கிரீம்ஸ் ரோட்டில் உள்ள ஒரு அடுக்கு மாடி குடியிருப்பல், ஒரு வீடு வாங்கியிருக்கிறார். அந்த வீட்டின் புதுமனை புகுவிழா சமீபத்தில் நடைபெற்றது. எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் நடந்த இந்த விழாவிற்கு நெருங்கிய நண்பர்களையும் திரையுலகப் பிரபலங்களையும் மட்டுமே அழைத்திருந்தார் ஆர்யா.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற நடிகை நயன்தாரா, புதுமனை புகுவிழாவில் குத்து விளக்கேற்றினார். பிரபுதேவாவை பிரிந்தபின் நயன்தாரா சென்னை வருவது, இது இரண்டாவது முறை. இதற்கு முன்பு முதல்வர் ஜெயலலிதாவிடம் தானே புயல் நிவாரண நிதி வழங்குவதற்காக சென்னை வந்தார்.

## சூட்டிங்கில் அஜ்மல் காயம்!

வெற்றிச் செல்வன் படத்தின் சூட்டிங்கில் ஏற்பட்ட விபத்தில் நடிகர் அஜ்மல் காயமடைந்தார். நடி கர் அஜ்மல் கதாநாயகனாகவும், ராதிகா ஆப்தே கதாநாயகியாகவும் நடிக்கும் புதிய படம் வெற்றிச்செல்வன். ருத்ரன் இயக்கி வரும் இப்படத்தின் சூட்டிங் கடந்த சில நாள்களாக ஊட்டியில் நடைபெற்று வருகிறது. ஊட்டி சேரிங் கிராஸ் பகுதியில் கதாநாயகன் அஜ்மல், கதாநாயகி ராதிகா ஆப்தே ஆகியோர் ஒரு ஆட்டோவில் வருவது போன்ற காட்சி படமாக்கப்பட்டது.

அப்போது திடீரென ஆட்டோ வீதியில் உள்ள தடுப்பு சுவரில் மோதி கவிழ்ந்தது. தடுப்பு சுவர் தடுக்காவிட்டால் ஆட்டோ பள்ளத்தில் உருண்டு மிகப்பெரிய விபத்து ஏற்பட்டு இருக்கும். ஆட்டோ கவிழ்ந்ததில் கதாநாயகன் அஜ்மல், காதாநாயகி ராதிகா ஆப்தே, இயக்கநர் ருத்ரன் ஆகியோர் காயம் அடைந்தனர். அவர்களை படப்படிப்பு குழுவினர் மீட்டனர்.

## இசை ஆலோசனை நடுக்கடலில்

சினிமாவில் வரவர எல்லாமே வித்தியாசமாகி வருகிறது. பொதுவாக ஒரு படத்திற்கான இசை எப்படி இருக்க வேண்டும் என இயக்குனரும், இசையமைப்பாளரும் ஏதாவது ஒரு ஹோட்டலிலோ அல்லது இசையமைப்பாளரின் சொந்த ரெக்கார்டிங் ஸ்டூடியோவிலோ கலந்துரையாடுவார்கள். இப்போ இவை அற்றுப்போய்விட்டன. மணிரத்னம் இயக்கும் படம் கடல். இத்திரைப்படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். படப்படிப்பற்காக தென் தமிழகத்தின் கடற்கரை கிராமத்தில் முகாமிட்டிருக்கும் மணிரத்னம், பாடல்களை பற்றி கலந்துரையாடுவதற்கு ரஹ்மானுக்கு தொலைபேசிமூலம் அங்கு வரச் சொல்லியிருக்கிறார்.ரஹ்மானும் மறுப்பு தெரிவிக்காமல் அங்கு செல்ல, இருவரும் பல மணி நேரம் படத்தின் இசை தொடர்பாக கலந்துரையாடினர். பின்னர் படகு சவாரியும் சென்று, நடுக்கடலில் படகில் அமர்ந்தபடியும் ஆலோசித்திருக்கின்றனர்.

## பூலோகம் படத்திலிருந்து அமலா பால் விலகல்!

அமீர் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் படம் ஆதிபகவான். நீது சந்திரா ஜோடி. பாங்காங்கில் படத்தின் பெரும்பகுதி படமாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்குப் பிறகு அறிமுக இயக்குன்ரின் இயக்கத்தில் ஜெயம் ரவி பூலோகம் என்ற படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருந்தார். ஆக்ஷன் த்ரில்லான இதன் படப்பிடிப்பு திட்டமிட்டபடி எப்போதோ தொடங்கியிருக்கவேண்டும். ஆனால் ஆதிபகவானுக்காக ஜெயம் ரவி தாடி மீசை வளர்த்திருக்கிறார். ஜெயம் ரவிக்கு ஜோடியாக அமலா பால் ஒப்பந்தம் ஆகியிருந்தார். ஆனால் திடீரென இப்போது படத்திலிருந்து விலகிக்கொண்டார் அமலா.

## 10 நிமிடம் நடக்க 1 கோடி

பாலிவுட் நடிகை கத்ரீனா கைப் கொச்சியில் நடக்கவிருக்கும் பேஷன் ஷோவில் 10 நிமிடம் நடந்துவிட்டு போக ரூ. 1 கோடி கொடுக்கிறார்களாம்.

பாலிவுட்டின் அசத்தல் டான்சரும், நடிகையுமான கத்ரீனா கைப் நடிக்க வரும் முன்பு மாடலிங் செய்து கொண்டிருந்தார். அந்த அனுபவம் அவருக்கு தற்போது கை கொடுத்து வருகிறது. இந்தியாவில் நடக்கும் பல்வேறு பேஷன் ஷோக்களில் அவர் கலந்து கொண்டு வருகிறார்.


திவ்யா

## திரைக்கு வரவுள்ள...


திருப்பங்கள்
நடிகர் : நந்தா நடிகை : ஆண்ட்ரியா
இயக்குனர் : சாரதா ராமநாதன்


எதிரி எண்-3
நடிகர் : ஸ்ரீகாந்த்
நடிகை : பூனம் பஜ்வா
இயக்குனர் :ராம்


சோழநாடு
நடிகர் : தேவா நடிகை : அஸ்கிதா
இயக்குனர் : ரவிச்சந்திரன்


ஏதோ செய்தாய் என்னை
நடிகர் : ஷக்தி நடிகை : லியா
இயக்குனர் : எல்வின்


நெடுஞ்சாலை
நடிகர் : ஆரி
நடிகை : ஷிவதா நாயர்
இயக்குனர் : கிருஷ்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமலாவுக்கும் பட்டாம்பூச்சி பறக்குதாம்...

விக்ரம், அனுஷ்கா, சந்தானம், நீரவ் ஷா, ஜி.வி.பிரகாஷ் என்ற கூட்டணியுடன் தாண்டவமாடிக் கொண்டு இருக்கும் இயக்குநர் விஜய் தமிழகத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்



..இருக்கலாம். ஆனா.. எனக்கு இப்போ எதுவும் தெரியலை. அமலா எனக்கு நல்ல ஃப்ரெண்ட். நம்பிக்கையான தோழி. அவ்வளவுதான். இப் போதைக்கு தாண்டவம் பத்திதான் மனசுல ஓடிகிட்டே இருக்கு....



எப்பவுமே மனித உணர்வுகள்தான் என் சினிமாவில் பிரதானம்! ஏமாற்றப்பட்ட ஒருவனின் பாதிப்பு, அவனோட நியாயமான போராட்டம்தான் தாண்டவம். தெய்வத் திருமகள் படத்தை விட விக்ரமுக்குச் சவால் கொடுக்கிற படமா தாண்டவம் இருக்கும். நம் அனைவரின் நெருக்கடிச் சூழலையும் தாண்டவம் பேசும் என்று கூறியிருக்கிறார் இயக்குநர் விஜய்.

கே: எதிர்பார்த்த அளவுக்கு ராஜபாட்டை போகாத சூழலில், இப்போது விக்ரமுக்கு நிச்சய வெற்றியைத் தர வேண்டிய கட்டாயத்தில் தாண்டவம் இருக்குமா?

ப: ஒரு படம் வெற்றியோ தோல்வியோ... அது விக்ரம் சாரைக் கொஞ்சமும் பாதிக்காது. ஒரு நடிகர் என்பதையும் தாண்டி, அவருடைய சினிமா அக்கறை என்னை ஆச்சரியப்படுத்தும். தெய்வத் திருமகள் ஷூட்டிங் இறுதிக் கட்டத்தை நெருங்கிட்டு இருந்த சமயத்தில், ஒருநாள் ஸ்பாட்டுக்கு வந்த விக்ரம் ரொம்ப சோர்வா இருந்தார். முகத்தில் துளிச் சிரிப்பு இல்லை. சார்... ஏதாவது கோபமா என்று கேட்டேன். இன்றைக்கு நிலா என்னைப் பிரியுதுல்ல... என்று சொல்கிறார். ஒவ்வொரு படத்தையும் ஒரு ஜனனமாகத்தான் நினைக்கிறார் அவர்.

தெய்வத்திருமகள் படத்தில் ஒரு அவதாரம் எடுத்தார். இதில் வேறொரு அவதாரம். இதை நான் ரொம்ப நம்பிக்கையாச் சொல்றேன்!

கே: அஜீத், விக்ரம், ஆர்யானு ரொப் ஸ்டார்களோட நெருங்கிப் பழகி இருக்கிறீங்க... அவங்க இயல்புகளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?

ப: அஜீத் அருமையான நடிகர். ஆனால், அதைவிடவும் மிகச் சிறந்த மனிதர். அவரிடம் நிறையக் கற்றுக்கொள்ளலாம். அவர் மனசுக்குப் பிடிச்சிட்டா, நாம் எதிர்பார்க்காத இடத்தில் நம்மைவச்சுக் கொண்டாடுவார். எங்கே, எப்போ படத்தைப் பார்ப்பார்னு தெரியாது. நான் இயக்கிய படங்கள் வெளியானதும் அதைப் பார்த்துட்டுப் பேசிடுவார். மனசைத்தொட்டு ஆறுதல் சொல்லி, தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கிற மாதிரி இருக்கும் அவரோட ஒவ்வொரு வார்த்தைகளும்! ஆர்யா சூப்பர் பாய். தெய்வத்திருமகள் புரமோஷனுக்கு எல்லாம் என்கூட வந்து நின்று தோள் கொடுத்தான். காரணமே இல்லாம பின்னிட்டடானு சும்மா பாராட்டிக்கிட்டே இருப்பான்.

விக்ரம் ரொம்பப் பிடிக்கும். அதிகம் பழகிட்டேன். வீட்ல அன்பான காதல் மனைவி, குழந்தைகள் என்று கலகலப்பா இருப்பார். லவ்லி ஹ்யூமன்!

கே: உங்களுக்கும் காதல் திருமணம்தான் என்று ஒரு பேச்சு இருக்கே... அமலா பால் உங்களை பின்தொடர்ராங்களா? இல்லை நீங்க அவங்களைப் பின்தொடர்றீங்க... எது சரி?

ப: அமலா பால் நல்ல சிநேகிதி. சின்ன வயசுலயே நிறைய மெச்சூரிட்டியோடு இருக்கிற பொண்ணு. நானும் நிறைய விளக்கம் சொல்லிட்டேன். ஆனாலும், இந்தச் செய்தி என்னைத் தொடர்ந்து வருது!

கே: ஓ.கே. நீங்க ஃப்ரெண்ட்லியான நபர்தான். ஆனா, அமலா பால் விமான நிலையத்திலிருந்து நேரா உங்க அலுவலகம்தான் வாறாங்க. உங்க வீட்டு விசேஷத்துக்கு முதல் ஆளா வந்து நிக்கிறாங்க. உங்களைப் பத்தி பேசினாலே சந்தோஷமாக் கேட்கிறாங்க... விசேஷம் இல்லாமலா?

ப: ரெண்டு பேரும் நல்லாப் பேசிக்குவோம். ஏன்... நான் ஏமி ஜாக்சனோடும்தான் நல்ல பழக்கத்துல இருக்கேன். யார்கிட்டயும் நான் மரியாதையாப் பழகுவேன். தப்பான எண்ணம் எதுவும் இருக்காது!

கே: காதலை யாரும் தப்புனு சொல்வாங்களா என்ன? இப்படி மறுத்த எல்லாருமே இப்ப கல்யாணம், குழந்தை என்று சந்தோஷமா இருக்காங்களே...

ப: இருக்கலாம். ஆனா, எனக்கு இப்போ எதுவும் தெரியலை. அமலா எனக்கு நல்ல ஃப்ரெண்ட். நம்பிக்கையான தோழி. அவ்வளவு தான். இப்போதைக்கு தாண்டவம் பத்திதான் மனசுல ஓடிட்டே இருக்கு என்றார்.



## விமர்சனம்

# விளையாட வா

கட்டடத் தொழிலாளியான பொன்வண்ணன் கரம் விளையாட்டு வீரர். இதே விளையாட்டில் ஆர்வம் கொண்ட சிறுவனை வளர்த்து கரம் விளையாட்டு வீரனாக்குகிறார். அவர்தான் ஹீரோ பாலாஜி. மாவட்ட, மாநில அளவு போட்டிகளில் வென்று சம்பியனாகிறார். ஹீரோயின் திவ்யா, அவருக்கு தன் கம்பெனியில் வேலையும், கூடவே காதலையும் கொடுக்கிறார். இதனால் திவ்யாவை மணக்க காத்திருக்கும் இளைஞன், ஹீரோவுக்கு வில்லனாகிறான். சக வீரனான திவ்யாவின் அண்ணனும் எதிரியாகிறான். எதிரிகளை சமாளித்து, காதலிலும், விளையாட்டிலும் பாலாஜி எப்படி ஜெயிக்கிறார் என்பது கதை.

சென்னை நகரில் தெருவுக்கு தெரு நடக்கும் கேரம் விளையாட்டை களமாக்கியிருக்கிறார் இயக்குநர். நாடக பாணி காட்சி அமைப்பு, அனுபவம் இல்லாதவர்களின் நடிப்பு, வளவள வசனங்கள் இவற்றால் விளையாட்டு தடுமாறி, தடம் மாறுகிறது. ஹீரோ பாலாஜி, ஆரம்பத்திலிருந்து இறுதி வரை முகத்தை ஒரே மாதிரியாக வைத்துக் கொண்டிருக்கிறார். படத்தை தங்கள் நடிப்பால் கொஞ்சமாகக் காப்பாற்றுகிறவர்கள் பொன்வண்ணனும், லட்சுமி ராமகிருஷ்ணனும். நடுத்தர கூலித் தொழிலாளியின் இல்லறத்தை நல்லறமாக காட்டுகிறார்கள்.

கரம் விளையாட்டின் நுணுக்கங்கள் வியக்க வைக்கிறது. கொடைக்கானலில் நடக்கும் போட்டியில் திவ்யா, தன் அண்ணன் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக மனோபாலாவுடன் இணைந்து நடத்தும் சதி வேலைகள் சிரிக்க வைக்கிறது. திவ்யா கலகலப்பான நடிப்பால் கவர்கிறார். பொன்வண்ணன், லட்சுமி தம்பதிகளின் மகன், முதலில் காணாமல் போய் கிளைமாக்சில் திடீரென பொங்கி எழுகிறார். இப்படி சில கேரக்டர்கள் திடீரென வருகிறார்கள். போகிறார்கள். அந்த அளவுக்கு திரைக்கதையில் குழப்பம். ஒளிப்பதிவு பாடல் காட்சிகளில் பளபளக்கிறது. பின்னணி இசையும், பாடல்களும் சுமார். புதிய கதை, புதிய களம், புதிய கலைஞர்கள், இணைந்து விளையாட்டாக படம் தந்திருக்கிறார்கள்.



# மீண்டும் இணைவார்களா?

நடிகைநயன்தாராபிரபுதேவாவைத் திருமணம் செய்வதற்காக சினிமாவுக்கு முழுக்குப்போட்டத்துடன் கிறிஸ்தவ மதத்திலிருந்து இந்து மதத்திற்கு மாறியிருந்தார். பின்னர் இருவருக்குமிடையில்ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் பிரிவு ஏற்பட்டது.

இந்நிலையில் அண்மையில் குடும்பத்தினருடன் திருப்பதி ஏழுமலையானை தரிசித்துவிட்டு வெளியேறியபோது ஊடகவியலாளர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அப்போது, அவர் ஊடகவியலாளர்கள் மத்தியில், நீண்ட நாள்களுக்கு பிறகு ஏழுமலையானைத் தரிசித்தது மனதுக்குச் சந்தோஷமாக உள்ளது. மனதில் இருந்த பாரம் எல்லாம் நீங்கியது போல் உணர்கிறேன் என்றார். பிரபுதேவாவுக்கும், உங்களுக்கும் இடையே விரிசல் ஏற்பட காரணம் என்ன என நிருபர்கள் கேட்டபோது, கோயிலில் இந்த மாதிரி கேள்வியை கேட்காதீர்கள் என்று கூறி கண் கலங்கினார்.

அவருடன் வந்த உதவியாளர் கூறுகையில், சிவன் கோயிலில் பிரபுதேவாவும், பெருமாள் கோயிலில் நயன்தாராவும் தரிசனம் செய்யுமாறு ஜோசியர்கள் அறிவுறுத்தியிருந்தனர். அதனால் இருவருக்கும் நல்லது நடக்கும் என்று கூறியிருந்தனர். அதன்படி இருவரும் தரிசனம் செய்துள்ளனர் என்றார். இந்தத் தகவலால் பிரபுதேவா- நயன்தாரா பிரிந்து விட்டனர் என்ற பரபரப்புக்கு தற்போது முடிவு கிடைத்துள்ளதாகக் கூறுகின்றனர் அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆணவம்

தன் வலிமையை நினைத்து சிங்கம் தற்பெருமை கொண்டிருந்தது. வழக்கம் போல வேட்டையாடிவிட்டுக் குகைக்குத் திரும்பியது. அங்கேயே படுத்து ஓய்வு எடுத்தது. அப்போது கொசு ஒன்று அதன் அருகே பறந்தது. அந்தக் கொசுவையும், தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்தது சிங்கம்.

இறைவா! எதற்கும் அஞ்சி நடுங்கும் சின்னஞ்சிறு கொசுவாக என்னை நீ படைக்கவில்லை. எல்லாரையும் நடுங்க வைக்கும் சிங்கமாகப் படைத்து உள்ளாய். உனக்கு நன்றி! என்ற உரத்த குரலில் சொன்னது. அப்படி அது பேசியது கொசுவின் காதில் விழுந்தது. இதனால் கோபம் கொண்ட கொசு, சிங்கமே! கொசுக்களாகிய நாங்கள் உன்னைவிட வலிமையானவர்கள். இதை அறிந்து அடக்கமாகப் பேசு! என்றது. இதைக் கேட்ட சிங்கம், அற்பக் கொசுவே! யாரிடம் என்ன பேச்சுப் பேசுகிறாய்? நான் ஒரு அறைவிட்டால் உன் கூட்டமே அழிந்து போய்விடும். இங்கிருந்து ஓடினால் உயிர் பிழைப்பாய். இல்லையேல் உன்னை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது! என்று கண்கள் சிவக்கச் கர்ச்சித்தது. அதற்குக் கொசு, சிங்கமே! நம் இருவரில் யார் வலிமையானவர்? சண்டை போட்டு முடிவு செய்வோம்! என்று வீரம் பேசியது. நீ என்னுடன் சண்டைக்கு வருகிறாயா? வா. உன்னை ஒரு நொடிக்குள் நசுக்கிக் கொன்றுவிடுவேன்! என்று கர்ச்சித்தது அது. கொசு வேகமாகப் பறந்து வந்து சிங்கத்தின் முகத்தில் கடித்தது. உடனே அது தன் முன்னங்காலால் முகத்தில் வேகமாக அறைந்தது. கவனமாக இருந்த கொசு அதன் அறையில் இருந்து தப்பித்தது. பிறகு பறந்து பறந்து அதன் உடலெங்கும் கடித்தது. இப்படிக் கொசு கடித்த இடத்தெல்லாம் தன்னை அறைந்து கொண்டது சிங்கம். அந்தக் கொசு சிக்கவே இல்லை. திறமையாகத் தப்பித்துக் கொண்டே இருந்தது. இதனால் சிங்கத்தின் உடலெங்கும் காயம் ஏற்பட்டுச் சோர்வு அடைந்தது. கொசுவோ மீண்டும் மீண்டும் பறந்து அதைக் கடித்தபடி இருந்தது. வேறு வழியில்லாத சிங்கம், கொசுவே! என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்! என்றது. இனி யாரையும் எளியவர் என்று கேலி செய்யாதே! என்ற கொசு அங்கிருந்து பறந்து சென்றது.

## போட்ஸ்வானா ஆடு !


பெண் வெள்ளாடுக்கும், ஆண் செம்மறி ஆட்டுக்கும் இயற்கை கலப்பின முறையில் பிறந்த குட்டிதான் போட்ஸ்வானா. விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் போட்ஸ்வானா என்ற இடத்தில் இதை முதன் முதலில் கண்டுபிடித்ததால், இதற்கு இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதன் உட்பகுதி ரோமங்கள் செம்மறி ஆடு போன்றும், வெளிப்பகுதி ரோமங்கள் வெள்ளாடு போன்றும் இருக்கும். செம்மறி ஆடு போன்று உடல் வலிமையாகவும், வெள்ளாடு போன்று கால்கள் நீண்டும் காணப்படுகிறது. போட்ஸ்வானா ஆட்டுக் குட்டிகள் மற்ற செம்மறி ஆடு, வெள்ளாட்டுக் குட்டிகளை விட வேகமாக வளர்கிறது.




## பழமொழிகள்

01. எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய், உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன தருவாய்?
02. எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு.
03. எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன் பச்சை கொடுப்பானா?
04. எட்டி பழுத்தென்ன, ஈயார் வாழ்த்தென்ன?
05. எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லாக்கு.
06. எண் இல்லாதவர் கண் இல்லாதவர்.

இது ஒரு மர்மப்பாதை. எங்கே வழிகாட்டுங்கள் பார்ப்போம்.



## 6 வித்தியாசங்கள் கண்டுபிடியுங்கள்



## மெதுவாகச் சிரியுங்கள்






பலாப்பழத்தில் புரோட்டீன், கல்சியம், இரும்பு, விற்றமின் சி, ரிபோப்ளவின், தயமின் ஆகிய ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன. மூல நோயுள்ளவர்களுக்கு இதன் பழக்கூழ் மிகச் சிறந்த நிவாரணி, இதன் கொட்டைகள், காய்கறியாகவும், வறுத்தும் உட்கொள்ளப்படுகிறது. பலாப்பழம் அதிக அளவில் உட்கொள்வதினால், ஊட்டச் சத்து குறைபாடு அதிக அளவில் நிவர்த்தி செய்யப்படுகிறது. இது தொற்று நோய்க்கும், நச்சுப்பொருட்களுக்கும் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி-பலன்

01.04.2012 - 07.04.2012




**அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

மனவலிமை மிக்கவர்களே! எதிரும் புதிருமாக எல்லையுப் பிரச்சினைகள் வந்தாலும் எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறுவீர்கள். உறவினர்களில் ஒரு சிலர் உங்களை சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டாலும் நண்பர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள். திடீர் பயணங்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்திலும் நிம்மதி உண்டு. உத்தியோகத்தில் பணிகளை கொஞ்சம் போராடி முடிக்க வேண்டி வரும். கலைத்துறையினர்களே எதிர்பார்த்த நிறுவனத்திலிருந்து வாய்ப்பு வரும். பிற்பகுதியில் சாதிக்கும் வாரமிது.




**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்,**
**ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்**

செயல்திறன் அதிகம் உள்ளவர்களே! தொடங்கிய வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள். உற்சாகம் பிறக்கும். உறவினர், நண்பர்கள் மதிப்பார்கள். பிள்ளைகளால் செலவுகள் வரும். குடும்ப அந்தரங்க விஷயங்களை வெளி நபரிடம் பகிர்ந்துகொள்ளவேண்டாம். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்தியோகத்தில் எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகளெடுக்கும் வாரமிது.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள்,**
**திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3-ஆம் பாதங்கள்**

நல்லது செய்தே நலிந்தவர்களே! குரு வலுவாக இருப்பதால் உங்களின் சாதனைப் பட்டியல் நீளும். சவாலான விஷயங்களைக் கூட எளிதில் முடிப்பீர்கள். பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள். மனைவி வழியில் உதவிக ளுண்டு. ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை அதிகரிக்கும். அரசு காரியங்கள் விரைந்து முடியும். வேற்றுமதத்தவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். வெற்றிகளையச் சுவைக்கும் வாரமிது.




**புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

சிந்தனைச் சிற்பிகளே! இங்கிதமாகப் பேசி பல வேலைகளையும் முடிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டு. எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். எந்த ஆபத்து நேருமோ. பேசி கோ டுவிடுமோ என அவ்வப்போது அச்சப்படுவீர்கள். முதுகுவலி, தோளில் நமைச்சல் வந்து நீங்கும். உத்தியோகத்தில் பிறரின் குறைகளை நாசுக்காக சுட்டிக் காட்டுங்கள். அவசர முடிவுகளை தவிர்க்க வேண்டிய வாரமிது.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

மனசாட்சி உள்ளவர்களே! புதிய முயற்சிகள் வெற்றி அடையும். பழைய நண்பர்கள் விலகுவார்கள். நல்ல அந்தஸ்தில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். அடுத்தடுத்து அலைச்சலும் எதிர்பாராத செலவுகளும், கொஞ்சம் சோர்வும், களைப்பும் வந்து போகும். அவசர முடிவுகள் வேண்டாம். கால் வலி, கழுத்து வலி, மூச்சுத் திணறல் வந்துபோகும். பழைய நண்பர், உறவினர்களின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். புதிய பொறுப்புகள் தேடி வரும்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள்**
**அஸ்தம், சித்திரை 1, 2-ஆம் பாதங்கள்**

சுறுசுறுப்பும் குணமுடையவர்களே! ஆன்மீகவாதிகள் அறிமுகமாகி உதவுவார்கள். புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். தவிர்க்க முடியாத செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடு களை சமாளிக்க வேண்டியிருக்கும். விடாமுயற்சியால் வெற்றி பெறும் வாரமிது.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்**
**சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்**

எளிமையை விரும்புபவர்களே! சவாலான விஷயங்களை கூட எளிதாக முடிப்பீர்கள். மனைவிவழியில் உதவிகள் உண்டு. வேலைச்சுமை இருக்கும். அரசாங்க அதிகாரிகள் உதவுவார்கள். வீண் செலவு, ஒருவித பயம், சின்னச் சின்ன தடைகள் வந்துபோகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் மனம் விட்டுப் பேசுவார்கள்.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

வெள்ளையுள்ளம் கொண்டவர்களே! உங்களின் அனுபவ அறிவால் முன்னேறுவீர்கள். வளைந்து போகக் கற்றுக் கொள்வீர்கள். இடம், பொருள், ஏவலறிந்து பேசுவது, பழகுவது நல்லது. உத்தியோகத்தில் அதிகாரிகளை கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுக்க வேண்டாம். கலைத்துறையினர்களே! விமர்சனத் தொந்தரவுகள், வதந்திகளெல்லாம் வந்தாலும் அஞ்சமாட்டீர்கள். வளைந்து கொடுக்க வேண்டிய வாரமிது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

நீதி, நெறி தவறாதவர்களே! வாழ்வின் சூட்சுமத்தை உணர்வீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். பணவரவு உண்டு. அரசியல்வாதிகளே! பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இடமாற்றம், மூத்த அதிகாரியுடன் மோதல்கள் வந்து போகும்.





**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம்,**
**அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்**

எதிலும் உடனடி தீர்வை எதிர்பார்ப்பவர்களே! முன்கோபத்தைத் தவிர்க்கப் பாருங்கள். யாரேனும் உங்களை தூண்டிப் பேசினாலும் உணர்ச்சி வசப்படவேண்டாம். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்தப்பாருங்கள். தன்னம்பிக்கை பிறக்கும். வயிற்று வலி, தூக்கமின்மை வந்து நீங்கும். உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்**
**சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

கொடுத்துதவும் குணமுடையவர்களே! மனநிம்மதி, மகிழ்ச்சி கிட்டும். பூர்வீக சொத்து கைக்கு வரும். மனைவிவழியில் நல்ல செய்தி வரும். அரசியல்வாதிகளே! வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். வியாபாரத்தில் தவறிப்போன வாய்ப்புகள் தேடிவரும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் வந்துபோகும்.




**பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சமாதானத்தை விரும்புபவர்களே! எதிர்பார்த்த பணம் வரும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் அதிகாரிகள் தொடர்ந்து உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். கலைத்துறையினர்களே! உங்களின் திறமைகளை வெளிப்படும். எதிர்பார்ப்புகள் [illegible] வாரமிது.

## பாபாவின் அருளுரையிலிருந்து...



### தியானத்தில் ஆழ்ந்துவிடுங்கள்

உங்கள் கடமைகளையும் தர்மங்களையும் ஆண்டவனுக்கு ஆராதனையாக அர்ப்பணித்து தொண்டாற்ற வேண்டும். நீங்கள் வெளியிடும் ஒவ்வொரு மூச்சும் இறைவன் திருவடிகளுக்குச் சமர்ப்பிக்கும் சுகந்த மலராக எண்ணி அர்ப்பணிக்க வேண்டும். இறைவன் அளித்த ஆயுட்காலத்தைப் பயனுள்ளதாக்க வேண்டும். எத்துயரிலும் தெய்வத்தின் மீது நம்பிக்கை இழக்கலாகாது.

தியானத்தினால் நீங்கள் மனித குல ஒற்றுமையையும் தெய்வத்தின் எல்லையற்ற சக்தி எங்கும் பரவியிருப்பதையும் உணர்வதுடன் அதிலேயே ஆழ்ந்து விடலாம். உங்களது அன்றாட வாழ்க்கை அனுபவத்தில் ஒரு பெரிய கவலை தோன்றியதும் அதுவரை உங்களைப் பற்றியிருந்த சிறிய கவலைகளை அது ஒடுக்கிவிடுவதை உணர்ந்திருப்பீர்கள். உங்கள் மனதில் தெய்வத்தைப் பற்றிய சிந்தனையே நிறைந்திருந்தால் தெய்வத்திற்காகவே நீங்கள் முழுமனதுடன் எப்போதும் இடைவிடாது ஏங்கிக் கொண்டிருந்தால் மற்ற அற்ப ஆசைகளும் சாதனைகளும் தோல்விகளும் கூட உங்களை பாதிக்க மாட்டா. அவையாவும் உங்கள் கவனத்திலிருந்து நீங்கிவிடும். தெய்வசிந்தனை என்ற வெள்ளத்தில் மூழ்கி விரைவிலேயே தெய்வத்தை உணர்தல் எனும் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கும் நிலையை அடைவீர்கள்.

என் மர்மத்தை எவரும் புரிந்து கொள்ளமுடியாது. நீங்கள் செய்யக் கூடிய தலைசிறந்த காரியம் இதில் மூழ்கிப் போவதுதான். வாதம் செய்து பயனில்லை. மூழ்கி ஆழத்தை அறி. உண்டு சுவையை அறி. அப்போதே நீ என்னைப் பற்றி உன் இதயம் திருப்தி கொள்ளும் வரை அலசிப் பேசலாம்.

# நல்லவர் இலட்சியம் வெல்வது நிச்சயம்

- மகாத்மா காந்தி -

உள்ளத்திற்கு மகிழ்ச்சி அளிப்பதில் பிரார்த்தனைக்கு இணையாக வேறு எதுவும் இல்லை. மனிதனை உயர்த்தும் தன்மை அதற்கு உண்டு. கூட்டுப் பிரார்த்தனையால் விரைவில் பலன் கிடைக்கும்.

நாம் அனைவரும் சகோதரர்கள். கடவுளே நம் தந்தை. இதை ஒப்புக்கொள்வோர், எங்கு சென்றாலும் அவரை மக்கள் பின்பற்றிச் செல்வர்.

பிரார்த்தனை செய்பவர்களுக்கு ஸ்லோகம் தெரியாமல் இருக்கலாம். வடமொழியோ, பாடல்களோ தெரியாமல் இருக்கலாம். ஆனால், ராம நாமம் அனைவருக்கும் சொந்தமானது. இதை எல்லாரும் எளிமையாக சொல்லலாம். பல்லாண்டுகளாக வாழையடி வாழையாக வந்த சொத்தாகும்.

தினமும் மாலையில் ஒன்று கூடி பக்திப்பாடல்கள், கீதையிலிருந்து சில ஸ்லோகங்கள் ஜெபித்து வந்தால், மனத்தூய்மையும், தியாகமும் உண்டாகும்.

பிரார்த்தனையில் யாருடைய வற்புறுத்தலுக்காகவும் ஈடுபடுவது கூடாது. மனப்பூர்வமாக ஈடுபட்டால் மட்டுமே பலன் ஏற்படும்.

பிறரைத் தீயவராக எண்ணக் கூடாது. பிறர் நம்மைத் தீயவராக எண்ணுவதாகச் சந்தேகப்படுவதும் கூடாது. இங்கு எல்லோரும் நல்லவரே. நல்லவர்களின் இலட்சியம் தோற்றதாக சரித்திரம் இல்லை.

ஆரோக்கியம் உள்ள ஒவ்வொருவரும் உணவைச் சம்பாதிப்பதற்கு வேண்டிய அளவுக்கு ஏதாவது வேலை செய்வது அவசியம்.

ஒவ்வொருவரும் தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துப் பிழைத்தால் இம்மண்ணுலகம் விண்ணுலகமாக மாறிவிடும்.

நல்லவர்களோடு ஒத்துழைப்பது எப்படி நம் கடமையோ, அப்படியே தீயவர்களோடு ஒத்துழைப்பு தராமல் இருப்பதும் நம் கடமையாகும்.

பணத்தைவிட அறிவு உயர்ந்தது. அறிவைவிட ஒழுக்கமே உயர்ந்தது என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆசிரியர்கள் ஒழுக்கத்தைப் பாடப்புத்தகத்திலிருந்து கற்றுக் கொடுக்க முடியாது. தங்களுடைய நடவடிக்கைகளிலிருந்து தான் கற்றுக் கொள்ள முடியும்.

பக்தனுக்கு எந்தவிதமான துன்பம் ஏற்பட்டாலும் உடனே வந்து உதவி செய்ய கடவுள் ஒருநாளும் தவறுவதே இல்லை. இதற்குத் தேவை கடவுள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை.

கடவுள் நாம் செய்யும் நன்மை தீமைகளுக்குச் சரியான கணக்கு வைத்திருக்கிறார். அவருக்கு இணையான கணக்குப் பிள்ளை உலகில் கிடையாது.



பிறருக்குத் தவறாகத் தோன்றினாலும் தனக்குச் சரியாகத் தோன்றுவதைச் செய்வதே கடமையை நிறைவேற்றுவதற்கான சரியான வழி.

கடவுள் என்னும் சக்தி வர்ணனைக்குள் அடங்காத ஒன்றாகும். மனிதன் வர்ணிக்க வேண்டிய அவசியமும் அதற்குக் கிடையாது.

குழந்தைகள் கையை உபயோகிக்கும் முன்பு, கண்ணையும் காதையும் நாவையும் உபயோகிக்க கற்றுக்கொடுக்க வேண்டும்.

நாம் கடவுளுடைய நாமத்தை முழு மனதுடன் பூஜித்தால் நம்மிடம் உள்ள ஆசை, பொய் முதலிய சகல துர்க்குணங்களும் தாமாகவே அகன்று விடும்.

## குன்றுக்குள் கோயில்



பெரும்பாலான சிவன் கோயில்கள் சமதளப் பகுதியில் இருப்பது வழக்கம். கோவை, பாலக்காடு [illegible] பாதை [illegible] கோயில் [illegible] இந்த [illegible] அமைப்பில் [illegible] என்று அழைக்கின்றனர் [illegible] நிலையிலிருந்து 18 படிகள் [illegible] அமைப்பில் இக் [illegible] அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியுலக விருந்தினர்கள்

6




"அம்முக்குட்டி, கண்ணா, ஆமினாக்குட்டி..." டங்காயியும் இங்காயியும் பின்னால் நின்று அழைத்தார்கள். யாரும் அவர்களின் அழைப்பைக் கேட்கவில்லை. திரும்பிக்கூடப் பார்க்காமல் அவர்கள் எல்லாம் அறைக்குள் ஓடிச் சென்றார்கள். மரத்தடியில் டங்காயியும் இங்காயியும் தனியே நின்று கொண்டிருந்தனர். அவர்கள் துயரத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"இது என்ன கூத்து." இங்காயி கவலையுடன் டங்காயிடம் கேட்டது. டங்காயிற்கும் அழுகை வந்தது. சரவணன் கூட இவர்களை மறந்துவிட்டான். அவர்கள் மெதுவாகக் கட்டடத்தை நோக்கி நடந்தார்கள். உள்ளிருந்து ஓசைகள் கேட்கின்றன. ஆனால் அது, அவர்களின் நண்பர்களுடைய சப்தமல்ல. டங்காயியும் இங்காயியும் ஜன்னல் வழியே உள்ளே எட்டிப்பார்த்தனர். அது ஒரு விசாலமான அறை. அதில் ஒரு டெலிவிஷன் இயங்கிக்கொண்டிருந்தது. டெலிவிஷனில் இருந்து தான் சப்தங்கள் எழுகின்றன.

"டெலிவிஷனில் என்ன?" இங்காயி மெதுவாகக் கேட்டது.

அவர்களால் டெலிவிஷனின் பின்புறத்தைத் தான் பார்க்க முடிந்தது. டெலிவிஷனின் முன்னால் அவர்களது நண்பர்கள் அமர்ந்திருக்கின்றனர். வாய்திறந்தபடி, மூச்சுவிடக்கூட மறந்தவர்கள் போல உட்கார்ந்திருந்தனர்...!

அவர்களுக்கு முன்னால் உள்ள ஜன்னலுக்கு வெளியே நின்றுதான் டங்காயியும் இங்காயியும் எட்டிப்பார்க்கிறார்கள். என்றாலும், யாரும் அவர்களைப் பார்க்கவில்லை...!




"இப்போ எப்படி?" அறையில் ஒரு கனத்த குரல் கேட்டது. டங்காயியும் இங்காயியும் கால்களை உந்தி ஏந்தியபடி சப்தம் வந்த இடத்தைப் பார்த்தார்கள். அங்கே மைதானத்தில் காவல்காரன் சிரித்துக் கொண்டு நின்றான். அவன் முழங்கால்வரை காற்சட்டையும் புள்ளிகளையுடைய சட்டையும் அணிந்திருந்தான். ஒரு நீண்ட தொப்பியும் அணிந்திருந்த அவன் பார்ப்பதற்கு கோமாளியைப் போலவே இருந்தான்.

"வெயிலில் காய்ந்து கொண்டு மைதானத்தில் ஃபுட்போல் விளையாடினால் கிரிக்கெட் பார்க்க முடியுமா?" காவல்காரன் மீண்டும் சிரித்தான். "இப்போது உடலை அசைத்து வியர்த்து நனைய வேண்டாம். முன்னால் நடப்பது அருமையான கிரிக்கெட் அல்லவா...ஹா...ஹா...ஹா.... நான் ஃபுட்போல் கொண்டுவரவில்லை என்பதால், என்மீது ஏற்பட்ட கோபம் எல்லாம் இப்போது மறைந்திருக்கும் தானே?"

"சிக்ஸர்...சிக்ஸர்..."

டெலிவிஷன் முன்னிருந்து ஒரு பிள்ளை துள்ளி யெழுந்தான். அவன் மாறன். டங்காயியும் இங்காயியும் தெருவோரத்து மூலையடியிலிருந்து அழைத்துக் கொண்டு வந்த பிள்ளைகளில் ஒருவன்.

மாறனுடன் நண்பர்களெல்லாம் தாவியெழுந்தனர். அவர்கள் சந்தோஷத்துடன் நடனமாடினார்கள்.

"சிக்ஸர் என்றால் என்ன" இங்காயி கேட்டது.

"கிரிக்கெட் ஆட்டத்தில் ஆட்டக்காரன் அடைகின்ற பெரிய எண்"

"அதற்கு நமது நண்பர்கள் ஏன் இப்படி ஆர்ப்பரிக்கிறார்கள். இவர்களொன்றும் கிரிக்கெட் விளையாடவில்லையே"

"இவர்கள் மற்ற யாரோ விளையாடிப் பெற்ற ஸ்கோரைக் கண்டு சந்தோஷப்படுகின்றார்கள்"

"விளையாடுவதற்காக வந்த நண்பர்கள் மற்றவர்கள் விளையாடுவதைப் பார்த்து மகிழ்கிறார்களா!" இங்காயி கவலைப்பட்டது.

சட்டென்று காவல்காரன் ஓடிவந்து மாறனின் கழுத்தைப் பிடித்துத் தள்ளினான்.

"யாரைக் கேட்டு நீ உள்ளே வந்தாய்? தெருப் பொறுக்கி..."

அவன் அலறினான். காவல்காரன் மாறனையும் தெருவோரத்திலிருந்து வந்த மற்றப் பிள்ளைகளையும் பிடித்து வெளியே தள்ளிவிட்டு கதவைச் சாத்தினான். சரவணனும், கண்ணனும், ஆமினாக் குட்டியும் பயந்து நடுங்கினார்கள்.

"நீங்கள் பயப்படவேண்டாம்" என்றான் காவல்காரன்.

"கிரிக்கெட் பிச்சைக்காரப் பிள்ளைகள் பார்ப்பதற்கல்ல. அது கௌரவமானவர்களின் விளையாட்டு..."

"இங்காயீ..." டங்காயி அழைத்தது. "நீ மாறனையும் நண்பர்களையும் அழைத்துக் கொண்டு மரத்தடிக்குச் சென்று நில். நான் இப்போது வருகிறேன்"



டங்காயி பதுங்கி கட்டடத்தின் பின்புறத்தையடைந்தது. அதிர்ஷ்டவசமாகப் பின்புறக் கதவு சும்மாதான் சாத்தியிருந்தது. டங்காயி கதவைத் தள்ளித் திறந்தது. அதன் தலையில் அப்போதும் ஆமினாக்குட்டி அணிவித்த முக்காடு இருந்தது. அது அந்தத் துணியால் நன்றாகப் போர்த்திக்கொண்டது. பிறகு டெலிவிஷன் உள்ள அறையை நோக்கி நடந்தது.

டெலிவிஷனில் இப்போது ஒரு விளம்பரம் ஓடிக் கொண்டிருந்தது.

"பிள்ளைகளே, இதைப் பார்த்தீர்களா?" காவல்காரன் டெலிவிஷனைச் சுட்டிக்காட்டிச் சொன்னான்.

"உலகத்திலேயே விற்பனையில் முன்னணியில் உள்ள குளிர்பானம் அது. நமக்கு டி.வி.யில் கிரிக்கெட்டை வழங்குவது அவர்கள் தான். கௌரவமான நம்மைப் போன்றவர்கள் குடிக்கவேண்டிய பானம் அது"

சரவணனின் கவனம் டெலிவிஷனில் இல்லை. அடைக்கப்பட்ட வாயிலையே பார்த்துக்கொண்டிருந்தான். அதைக் கொஞ்சம் திறந்தால் வெளியே சென்று மாறனுடனும் மற்றவர்களுடனும் சேர்ந்து கொள்ளலாம்.

"மாறனை இந்த ஆள் என்ன செய்தான்?" அம்முக்குட்டி சிந்துவிடம் மெல்லக் கேட்டாள்.

"கழுத்தைப் பிடித்து உலுக்கினான்"

"படுபாவி மாறனுக்கு வலித்திருக்கும்"

"நமது டங்காயியும் இங்காயியும் நம்முடன் இருந்தார்கள் என்றால்....."

"அதோ...டங்காயி...டங்காயி...." உரக்கக் கத்திக் கொண்டு கண்ணன் தாவியெழுந்தான்.

காவல்காரன் திரும்பிப் பார்த்ததும், டங்காயி துணியை உடலிலிருந்து அகற்றியதும் ஒரே நேரத்தில் நடந்தது.

"அய்யோ அம்மா...!" காவல்காரன் அலறினான். அடுத்த நொடியே அவன் மயங்கித் தரையில் வீழ்ந்தான்.

பிள்ளைகள் ஓடிச்சென்று டங்காயியை அணைத்துக்கொண்டார்கள். கருதிக்கும் சிந்துவிற்கும் மகிழ்ச்சியினால் கண்கள் நிறைந்தன.

நண்பர்கள் டங்காயியைத் தோளில் சுமந்து நடனமாடினார்கள். அவர்கள் கதவைத் திறந்து சப்தமிட்டபடி வெளியே இறங்கினார்கள். அங்கே அதோ இங்காயியும் மாறனும் மற்ற நண்பர்களும் இருக்கின்றனர்.

"இங்காயீ...இந்தா பிடித்துக்கொள்...." அறையின் வாயிலிருந்து சரவணன் மைதானத்தை நோக்கி ஃபுட்போலை ஓங்கி உதைத்தான்.

மைதானத்தில் இப்போது சிறப்பான ஃபுட்போல் விளையாட்டு நடந்து கொண்டிருக்கிறது. முல்லைப் பூ அணிக்கும் பிச்சிப்பூ அணிக்கும் இடையில் போட்டி.

முல்லைப்பூ அணிக்குத் தலைமையேற்று நடத்துவது ஆமினாக்குட்டி. அந்த அணியின் முன்னணி ஆட்டக்காரர்கள் ஜோசப்பும் கண்ணனுமாவார்கள்.

பிச்சிப்பூ அணியின் தலைவனான சரவணன் முதல்தரமான ஆட்டக்காரன். தடுக்க வருகின்றவர்களையெல்லாம் ஏமாற்றி முன்னேறுகின்ற மாறனும் இவர்களுடன் உண்டு.

இரண்டு அணிகளும் சமமான சக்திகள்தான். ஆட்டம் தொடங்கி நேரமான பிறகு யாரும் கோல் அடிக்கவில்லை. முல்லைப்பூ அணி இப்போது முன்னேறி விளையாடிக்கொண்டிருக்கிறது. மைதானத்தின் வலது பகுதியில் ஆமினாக்குட்டி, பந்தை எதிர் அணியின் கோல்போஸ்டை நோக்கிப் பலமாக உதைத்தாள். கண்ணன் அந்தப் பந்தைக் கொண்டு செலுத்தினான். எதிர்கொள்ள வந்த அன்ஸாரிடமிருந்தும் சிந்துவிடமிருந்தும் பந்தை தப்புவித்தான் கண்ணன். பிறகு பெனால்டி பாக்ஸின் இடதுபாகத்தில் ஏறிவந்த ஜோசப்புக்கு நேராகப் பந்தை உதைத்தான்.

பந்து வருகின்ற திசை பார்த்து பிச்சிப்பூ அணியின் கோலி, கோல்போஸ்டிற்கு இடது பாகத்துக்கு வர நேர்ந்தது.

நொடிநேரம்.. ஜோசப் பந்தை கோல் போஸ்டின் வலது மூலையை நோக்கி ஓங்கி உதைத்தான். பந்து தோட்டாவைப்போல கோல் வளையத்திற்கு உள்ளே....

ஆனால்...

பிச்சிப்பூ அணியின் கோலி இடது மூலையிலிருந்து வலதுபாகத்திற்கு அடித்தக் குட்டிக்கரணம் அற்புதமாயிருந்தது. பிறகு கோலி காற்றில் பறந்து, சீறிவந்த பந்தை தலையில் முட்டி வெளியே எறிந்ததைக் கண்டு அனைவருமே வியந்து போனார்கள்.

விழ இருந்த கோல் மிகத்திறமையாகத் தடுக்கப் பட்டுவிட்டது.

யாரையும் அதிசயத்தில் ஆழ்த்துகின்ற சாகசம் அது!

பிச்சிப்பூ அணியைச் சேர்ந்தவர்கள் ஆரவாரத்துடன் கோலியைச் சூழ்ந்துகொண்டார்கள்.

மாறன் கோலிக்கொரு முத்தமும் கொடுத்தான்.

அந்தக் கோலி டங்காயிதான்.

முல்லைப்பூ அணியின் கோலி யார் தெரியுமா? இங்காயிதான் அது.

இப்போது பந்து முல்லைப்பூ அணியின் பகுதிக்கு வந்திருக்கின்றது. இங்காயி உஷாராக நின்றது. பிச்சிப்பூ அணியின் தலைவன் சரவணன்தான் பந்துடன் வந்துகொண்டிருக்கிறான். அவனைத் தடுப்பதற்கு ஆமினாக் குட்டியும் கண்ணனும் ஓடுகின்றனர். அவர்களையெல்லாம் தாண்டிக்கொண்டு முன்னேறுகிறான் சரவணன். இடது பாகத்தில் ஓடி வருகின்ற மாறனுக்கு வசமாக சரவணன் பந்தை அனுப்புகிறான். ஆனால் மாறனுக்குக் கிடைப்பதற்கு முன்பு பந்தைச் சுருதி பறித்துக் கொண்டாள். அவள் பந்தை எதிர் பாகத்தை நோக்கி மிக்க வலுவுடன் உதைத்தாள்.


பந்து மீண்டும் சரவணனுக்குக் கிடைத்து விட்டது. அவன் பந்துடன் அதிவேகமாக முன்னோக்கிப் பாய்ந்து வந்தான். முல்லைப்பூ அணியின் எல்லா ஆட்டக்காரர்களும் அவனுக்கு எதிரே வருகிறார்கள். முல்லைப்பூ அணியின் கோல் போஸ்டினருகே மிகக் கடுமையான போராட்டம் இப்போது. சட்டென்று மாறன் பந்தைக் கவர்ந்து கோல் வளையத்தை நோக்கி உச்ச வேகத்தில் உதைத்தான். அதிவேகமாக உயர்ந்து பறக்கின்றது பந்து.

இங்காயி நின்ற நிலையிலேயே குட்டிக் கரணமடித்து மேலே உயர்ந்தது. கோல் போஸ்டுகளுக்குக் குறுக்கேயுள்ள பாருக்கருகே வெளியே பாய்ந்தது. வேகமாக வந்த பந்தை தன் சிறிய வாலால் அடித்து வெளியே வீசியது.

நண்பர்கள் மகிழ்ச்சியுடன் கைதட்டினார்கள்.

கைதட்டியவர்களில் இரண்டு அணிகளைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள்.

"சரிபோதும்...விளையாட்டை நிறுத்திக் கொள்வோம்?" டங்காயி கேட்டது.



"அய்ய... ஒரு கோலும் அடிக்கவில்லையே" சிந்து சொன்னாள்.

"யாருமே ஜெயிக்கவில்லை" அன்ஸாருக்கு அது தான் கவலை.

"ஜெயித்தோம் அல்லவா" இங்காயி சொன்னது. "விளையாடிய நாம் அனைவரும் ஜெயித்தோம்"

"அன்ஸார், விளையாடுவது ஜெயிப்பதற்கு மட்டும் அல்ல. விளையாடுவது என்பதுதான் முக்கியம்" என்றது டங்காயி.

"சரிதான். டி.வி.யில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டு, இருந்திருந்தால் இவ்வளவு சந்தோஷம் கிடைத்திருக்காது" அம்முக்குட்டி சொன்னாள்.

"விளையாட்டைப் பார்ப்பது சுவையானதுதான்... ஆனால் விளையாடுவதுதான் அதைவிடச் சுவையானது" இங்காயி நினைவூட்டியது. "உங்கள் பூமியில் எவ்வளவு விளையாட்டுகள் இருக்கின்றன... நேரம் கிடைக்கும்போது அதையெல்லாம் விளையாடிப் பாருங்கள்.


"ஹாய்..அதைப்பாருங்கள், அழகான ஒரு நாய்க்குட்டி" அம்முக்குட்டி தொலைவே சுட்டிக் காட்டினாள்.

மைதானத்தின் ஓரத்தில் ஒரு வெள்ளை நாய்க்குட்டி வருகிறது. சிறிய காதுகள்... நீண்ட வால். உடல் முழுவதும் நீளமான முடிகள்....

"எவ்வளவு அழகாக இருக்கிறது! ஆமினாக் குட்டி சொன்னாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடிவுக்கு வராத வன்முறைகள்!

தி நேசன் பத்திரிகையில் கரோலின் அபேகோனிவர்ன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்
தமிழில் : அஸ்மின்

**சிறீலங்காவிலும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் எந்தவொரு வடிவத்திலாகிலும் சமூகபொருளாதாரத் தாக்கங்களைச் செலுத்திக் கொண்டிருப்பதை ஆழ்ந்த சிந்தனையாளர்கள் நோக்கலாம்**

நீண்டகாலமாகவே உலகம் பூராவும் பெண்சமூகத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்டுவரும் பாலியல் அடிப்படையிலான வன்செயல்களைப் பற்றியும் அவர்களின் உரிமைகள் குறித்து எழுதப்பட்டும் பேசப்பட்டும் வருகின்றன.

இவைகுறித்துப் பேசுவதன் மூலம் இவ்வகையான வன்செயல்களினால் பாதிப்புற்று வலுவிழந்த பெண்களும் சிறுமிகளும் இன்று இரண்டு குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். ஒரு பகுதியினர் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர். மறு பகுதியினர் ஏற்றுக்கொள்ளப்படாதோர்களாகவும் இருக்கின்ற நிலையினையே எங்கும் பரவலாகக் காணமுடிகிறது.

இன்னும் யுத்தங்களினால் பெண்களும் சிறுமிகளும் தஞ்சம் பெறுவதற்குத் தற்காலிக முகாம்களை நாடிச் செல்கின்றனர். பின்னர் உறவிழப்புகள் காரணமாகவும் வறுமையின் காரணமாகவும் வாழ்வாதாரத்திற்காகத் தன் உடலை வருத்தி வேலை செய்து உழைக்க வேண்டியவர்களாகின்றனர். அதன் நிமித்தமாக பெண்களில் அநேகமானோர் பாலுறவு வன்செயல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இது நாட்டில் தற்போது நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கவலைக்குரியதும் பெண்சமூகத்தின் எதிர்காலத்திற்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதொன்றாகவும் காணப்படுகின்றது. நாட்டிற்குப் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய கொடிய கொள்ளை நோய்த்தாக்கத்திற்குச் சமனாக பெண்கள் மீதான பாலுறவு வன்முறைகளை நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இந்நாட்டில் மட்டுமன்றி உலகம் பூராவும் எடுத்தல் அத்தியாவசியமாகின்றது.

சிறீலங்காவிலும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் எந்தவொரு வடிவத்திலாகிலும் சமூகப்பொருளாதாரத் தாக்கங்களைச் செலுத்திக் கொண்டிருப்பதை ஆழ்ந்த சிந்தனையாளர்கள் நோக்கலாம்.

சிறீலங்காவின் பெண்கள் சுகாதார அமைப்பினால் பெண்கள் மீது தீங்கு விளைவிக்கும் பாலுறவு அடிப்படையிலான வன்செயல்கள் குறித்த ஆதாரங்கள் பற்றிய ஆராய்ச்சியில் மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கையின் இரண்டாவது பதிப்பு வெளியிடப்பட்ட போது அதில் திடுக்கிடவைக்கும் சில உண்மைகள் வெளியாகின.

## துஷ்பிரயோகம்

சிறுவர் மீதான துஷ்பிரயோகம் குறித்து விரிவுரையளிக்கப்பட்டதன் பின்னர் பட்டப்படிப்பு மாணவிகளிடம் கேள்விக் கொத்துகளடங்கிய படிவங்கள் வழங்கப்பட்டு அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் கிடைத்த முடிவு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. 12.3 வீதமான பெண்கள் அவர்களின் பருவமடையாத சிறு பராயத்திலேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாகுகின்றனர் எனவும், அதுமட்டுமன்றி அவர்கள் மீது துஷ்பிரயோகம் செய்பவர்கள் அவர்களின் சகோதரராக, மாமனாக அல்லது தந்தையாராக இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (1998 இல்)

## தகாப்புணர்ச்சி ( முறையற்ற பாலுறவு )

மத்திய மாகாணத்தில் சேவையிலீடுபட்டுள்ள அமைப்புக்களின் மூலமாக முறையற்ற பாலுறவுகளினால் பாதிப்புக்குள்ளானவர்களிடையே 2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலமாக அவ்விதம் பாதிப்படைந்தவர்கள் 12 வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகளாகவே காணப்பட்டனர். அவர்களைத் துஷ்பிரயோகம் செய்தவர்கள் அவர்களின் குடும்பத்தில் ஓர் மூத்த அங்கத்தவராக மாமனாராக அல்லது தாயின் மறுதாரக் கணவராக அல்லது மூத்த சகோதரனாக அமைந்திருந்தமை புலனாகியது.

## பாலியல் துஷ்பிரயோகம்

2003 ஆம் ஆண்டின் பொலிஸ் பதிவுகள் நாட்டில் 16 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களே பெரும்பான்மையாக பாலியல் துஷ்பிரயோகங்களான, ஆசையூட்டிப் பாலியல் வன்முறையீடுபடல் அதனை மேற்கொள்ளல், போன்றவற்றினால் பாதிப்படைந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. (சுகாதார அமைச்சு 2008)

## தொல்லை கொடுத்தல்

இலங்கையின் சமூகத்தில் பெண்கள் மற்றும் இளம் சிறுமிகளுக்கு ஏற்படுத்தப்படும் தொல்லைகளின் தன்மை மற்றும் முக்கியத்துவம் குறித்து ( வீரக்கொடி மற்றும் குமார ஆகியோரின் 2007 ) செய்திக் கட்டுரைகள் உண்மையை வெளியிடுகின்றன. வயது குறைந்த பெண்கள் மத்தியில் பாலியல் வன்முறை என்பது 88 வீதமான அளவில் பொதுவாக இடம்பெறுகிறது எனும் அதிர்ச்சி தரும் தகவல் வெளிவருகின்றது.

## பாலின அடிப்படையிலான வன்முறைகளின் விளைவுகள்

சிறீலங்காவின் பெண்கள் ஆராய்ச்சி நிலையத்தின் 2001 ஆம் ஆண்டின் அறிக்கை 'சிறுவர் மீதான முறையற்ற பாலுறவு மற்றும் பாலியல் வன்முறைகள் என்பவற்றினால் பாதிப்புக்குள்ளானவர்கள் தேவையற்ற கர்ப்பத்தரிப்பு மற்றும் சட்டவிரோதமான கருக்கலைப்புக்கள் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.' எனத் தெரிவிக்கும் அதே வேளையில், மற்றுமொரு அறிக்கை சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் 84 பாலியல் ரீதியான வன்முறைக்குள்ளாக்கப்பட்டுப் பாதிப்படைந்தவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பாதிப்படைந்தவர்களின் உடல், உள, சமூக மற்றும் உணர்ச்சி வசப்படுதல், சுயமதிப்பு போன்றவற்றில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன எனும் உண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மத்திய மாகாணத்திலும் 2002 இல் இத்தகைய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்ட போது பாதிப்படைந்த இளம் பெண்கள் தமக்கு வயதில் மூப்பான பெண்களிடம் தமக்கு நேர்ந்தவற்றைத் தெரிவித்தும் கூட அவர்கள் அவற்றினைப் பொருட்படுத்தாது மூடி மறைத்துவிடுகின்றனர் என்று தெரிய வந்துள்ளது. எனினும், இவ்வகையான விடயங்களில் சில நிறுவனங்களுக்கு அநாமதேயக் கடிதங்களின் மூலம் தெரிவிக்கப்பட்டாலும் அவை பாதிப்படைந்தவர்கள் கர்ப்பமடைந்த நிலையிலும் வைத்திய உதவிகளை நாடவேண்டிய நிலையிலுமேயே மட்டும் வெளிவருகின்றன.

இதனால் மோசமான அதிர்ச்சியடைய வைக்கும் நிலை பாடசாலை செல்லாது வீட்டினுள் முடங்குதல் குடும்பங்களில் இருந்து பிரிதல் போன்ற பின்விளைவுகளுக்கு உள்ளாகுகின்றனர். அதன் நிமித்தமாக தேவையற்ற கர்ப்பத்தைச் சட்டவிரோத கருக்கலைப்புச் செய்வதனால் தமது இயல்பான வாழ்வை இழந்து வழமைக்குத் திரும்ப இயலாதுள்ளனர்.

## காரணங்கள்

பாலியல் வன்முறைகளுக்கான காரணிகள் பலவுண்டு. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக விளங்குகின்றன. 2001 இல் பெண்கள் அமைப்பு மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் மூலம் பெரும்பாலான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றமைக்கு அச்சிறுமிகள் அல்லது பெண்களின் தாய்மாரின் பாதுகாப்பு அல்லது அரவணைப்பு இல்லாமையே ஆகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதன் முக்கிய அடிப்படைக் காரணம் குடும்ப நிலைமைகளின் நிமித்தம் அநேகமான தாய்மார் தம்பிள்ளைகள் அதிலும் முக்கியமாகப் பெண்குழந்தைகளைக் கணவரின் அல்லது உறவினரின் பாதுகாப்பில் விட்டுவிட்டு வேலைவாய்ப்புத்தேடி வெளிநாடுகளுக்குச் செல்வதேயாகும் என்பது வெள்ளிடைமலை.

இலங்கையின் தென்பகுதிகளில் 13 - 17 வரையிலான வயதிற்குட்பட்டவர்களான வளரிளம் பருவத்தினரே இவ்வாறான வன்செயல்களுக்குள்ளாவதாக தெரியவருகின்றது.

## வீட்டு வன்முறைகள்

வீட்டு வன்முறைகளும் எமது நாட்டில் பரவலாகக் காணப்படும் ஒன்றாக விளங்குகின்றது. இது பெரும்பாலும் திருமணமான பெண்களின் மீதே திணிக்கப்படுகின்றன. வீடுகளுக்குள்ளேயே அடங்கிக் கிடக்கும் பெண்கள் முடிவில்லாத இம்மாதிரியான வன்முறைகளுக்குள்ளாகுகின்றனர். உடல் மீது தாக்குதல்கள், உதைக்கப்படுதல், எரிக்கப்படுதல் அத்துடன் கழுத்தை நெரித்து மூச்சுத் திணறலுக்குள்ளாக்குதல், தலைமுடியைக் கத்தரித்தல் போன்ற வன்முறைகளுக்கும் கணவன்மார்களினால் முகத்தில் அசிற் வீசப்பட்டு சேதமடையச் செய்தல் போன்ற வன்முறைகளுக்கும் உள்ளாகுகின்றனர்.

எனவே, நாட்டில் பெண்சமூகம் எதிர்காலத்தில் சிறப்புடனும் சீருடனும் வாழ இவ்வாறான வன்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் நிச்சயமாகத் தாமதமின்றி எடுக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பல் பரமசிவம்



## ரவுண்ட் அப்

"இந்த வீட்டில எனக்குத் துண்டா மதிப்பில்லை..... எத்தனை நாள் பாத்தாச்சு.... இனியும் பொறுக்க ஏலாது..." என்றவாறு வல்லிபுரத்தார் துள்ளிக் குதித்து வீட்டின் பின்புறம் சென்றார். கையில் மண்வெட்டி இருந்தது. வீட்டின் பின்புறம் ஏதோ கொத்திச் சத்தம் கேட்டது. 'டங்' என்ற ஒலி எழுந்தது. வீராவேசத்துடன் மீண்டும் வீட்டு முற்றத்திற்கு வந்தார் வல்லிபுரத்தார்.

சிவப்பு நிறத்தில் ஒரு போத்தல் பொலித்தீன் தாளால் சுற்றப்பட்டிருந்தது. வேகமாக பொலித்தீன் தாளை நீக்கிவிட்டு மூடியைத் திறந்தார். கட கடவென அதிலிருந்த பானம் அவர் வாய் வழியாக வயிற்றுள் சென்றது.

போத்தலைச் சுழற்றி எறிந்தார். புல்லுக்கு அடிக்கும் மருந்து 'ரவுண்ட் அப்' போத்தல் சுழன்று சென்று படலையடியில் வீழ்ந்தது. மனைவி தெய்வானை குய்யோ முறையோ என்று கத்தினாள். அடிக்கடி நடக்கும் சண்டை என்பதால் அயலவர் அக்கறை காட்டவில்லை. "இப்ப பார் குடிக்கிறன் ....." என்று சத்தம் போட்டுப் போய் எடுத்து வந்து குடித்தே விட்டார் வல்லிபுரத்தார்.

மூத்தவன் சித்தார்த்தன் தாயின் அழுகுரல் கேட்டு ஓடி வந்தான். "கொப்பர் புல்லுக்கு அடிக்கிற மருந்த எடுத்துக் குடிச்சிட்டார்... ஓடிப்போய் ஒரு கார் பிடிச்சுக் கொண்டுவா..." என்று தெய்வானை பதைபதைத்தாள். கஸ்தூரி மங்களாக சித்தார்த்தன் "சாகிறதுக்கு எண்டுதானை குடிச்சவர்.... என்னைக் கரைச்சல் படுத்தாதை..." என்று வீட்டுக்குள் தாயை இழுத்துக்கொண்டு சென்றான். தாயிடம் இரகசியமாகக் காதோடு காதாகச் சித்தார்த்தன் என்ன சொன்னான் தெரியுமே....?

"எணை அம்மா கத்தாதே.... அப்பா போன கிழமை எங்களோடை சண்டை பிடிச்சவர். அதுக்குப் பிறகு ஏதோ கொண்டுவந்து பின்னாலே வாழைப்பாத்தியில தாட்டு வைச்சார். இருண்டதுக்குப் பிறகு போய் செக் பண்ணிப் பார்த்தன், பார்த்தா 'ரவுண்ட் அப்' மருந்து.... அது பேய் மனுசன். அவசரப்புத்தி. ஏதும் செய்து போடுவார் எண்டிட்டு மருந்தைக் கொண்டு போய் தெருக் கானுக்கை ஊத்திப்போட்டன்... அஞ்சாறு தரம் சவுக்காரத் தண்ணி விட்டு ரெண்டு பேதிக் குளிசையும் போட்டு மூடிப்போட்டு பொலித்தீன் பாக்கில கத்தி அப்பா வைச்ச மாதிரியே வைச்சிட்டன்..... ஒரு ஐஞ்சாறு தரம் சத்திபோகும் .... ஆறேழு தரம் வயிற்றால போகும்... ஒன்றுக்கும் பயப்பிடாதை...... எல்லா வருத்தமும் சுகம் வரும். இனி வீட்டில அட்டகாசமே செய்ய மாட்டார்...."

என்று தனது ஐடியாவைப் புட்டு வைத்தான் சித்தார்த்தன்.

எப்பிடிப் பொடியனின்ரை மூளை. ஊத்திப் போட்டு அல்லது போத்தில எறிஞ்சிருந்தால் அந்தாள் இப்ப வேறை போத்தில வாங்கி வந்திருக்கும். பொடியன் சொன்னாப் பிறகுதான் தெய்வானைக்கு கையும் காலும் இயங்கத் தொடங்கிச்சு..... வெளியில் பெரிதாக ஓலம் எடுத்து கத்தத் தொடங்கினார் வல்லிபுரத்தார்..... "ஐயோ ரவுண்ட் அப் மருந்து குடிச்சிட்டன்" என்று முற்றத்தில் விழுந்து ரவுண்ட் அடித்தார் வல்லிபுரத்தார்.

அப்பதான் புல்லுக்கு அடிக்கும் மருந்து வாய்க்கால் வழியாக ஓடி வல்லிபுரத்தாருக்கும் போகியுமாம் அங்கே என்றவாறு இந்தப் பம்பல் பரமசிவமும் போய்ச் சேர்ந்தன். இதுக்குள்ளை வேற ஆட்களும் வந்திட்டினம். சாடைமாடையா தெய்வானை என்ரை தங்கச்சி விசயத்தை என்னட்டை சொல்லிப்போட்டு கந்தசாமியின்ரை காருக்குப் போனா காந்தன் திரும்பிவந்தான். அந்தக் கார் வல்லிபுரக் கோயிலுக்குப் போயிட்டுது என்று. இந்தக்காலம் மாதிரி அப்ப வீட்டுக்கு வீடு மோட்டார் சைக்கிளோ மூலைக்கு மூலை ஓட்டோவோ இல்லை.

ஒட்டமும் நடையுமா விதானையாற்றை காருக்கு ஒருத்தன் ஓடினான். வல்லிபுரத்தார் எடுத்த சத்தியில 'ரவுண்ட் அப்' நெடிவீசியதோ வீசவில்லையோ ஒருத்தருக்கும் தெரியாது. ஏனெண்டால், முந்தி ரவுண்ட் அப் குடிச்ச ஆக்கள் ஒருத்தரும் அதில இல்லை. வயிற்றுவலியால் தவிச்ச வல்லிபுரத்தாருக்கு மரணபயம் வந்து விட்டது. "என்னப்பா பார்த்துக் கொண்டு நிக்கிறாய் .... ஓடிப்போய் சாறியை மாற்றி அந்த தலைகணிக்கு ஒரு புது உறையும் போட்டுக் கொண்டு வாவன்" என்று தெய்வானையைத் துரிதப்படுத்தினார்.

கார் வருகின்ற சத்தம் வருகிறதா என ஓலத்தின் மத்தியிலும் காதைக் கொடுத்தபடி இருந்தார் வல்லிபுரத்தார்.

"நீ இன்னும் வெளிக்கிடேல்லையே" என்று மனைவியை அதட்டினார்.

"அம்மா.... அப்பா ரவுண்ட் அப் முழுக்கவும் குடிச்சிட்டார்.... போற வழியில ஏதும் நடக்கும்..... நடந்தால் ஆசுபத்திரியில் நீதான் அவருக்கு ஏதோ பருக்கினதெண்டு பொலிசில பிடிச்சு அடைச்சுப் போடுவாங்கள்.... யோசிச்சுச் செய்..." என சித்தார்த்தன் எச்சரித்தான்.

"ஐயோ அப்பா.... நான்தான் எடுத்துக் குடிச்சன் என்று வாக்குமூலம் குடுக்கிறன்.... நீ பயப்படாமல் வா..." எண்டார் வல்லிபுரத்தார்.

"செத்த ஆக்களின்ரை வாக்குமூலம் பதிய மாட்டாங்கள். நீ யோசிச்சுச் செய்" என்று மீண்டும் எச்சரித்தான் சித்தார்த்தான்.

"செத்த ஆக்கள் வாக்குமூலம் அளிக்க ஏலுமோ? சாகிறதுக்கு முன்னம்....." என்று என்ரை பங்குக்கு. நானும் தெய்வானைக்கும் புத்திமதி சொன்னன்.

"அம்மா நாளைக்குக் கட்டாயம் பேப்பரில வரும் .... கணவன் மரணம். சந்தேகத்தால் மனைவி கைது..... இது உனக்கு வேணுமே...? இங்கை ஏதும் நடந்தால் நான், நீ, பரமசிவம் மாமா எல்லாரும் தானாகத்தான அப்பா மருந்து எடுத்துக் குடிச்சார் எண்டு சொன்னால் பிரச்சினை இல்லை...."

தனது மோனித் தனத்தை வெளிப்படுத்தினான் சித்தார்த்தன்.

"தம்பி பேப்பரில படமும் வருமே...?" இவ்வளவுக்குள்ளேயும் ஆவலுடன் கேட்டார் வல்லிபுரம்.

'நாட்டு நன்மை கருதி ரவுண்ட் அப் அருந்திய நாட்டுக் கூச்சல் வல்லிபுரத்தாருக்கு எமது பாராட்டுக்கள்' என்று நாங்கள் விளம்பரம் கொடுத்தால் தான் படத்தோடு போடுவினம் என்று விளக்கினான் சித்தார்த்தன்.

"ரேடியோவில போட்டால் இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம் என்ற நாலு வார்த்தையையும் சேர்த்துக் கொள்ளுவாங்கள்" என்று நான் என்ரை பங்குக்கு எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னன்.

"அறுவாங்களே விளம்பரம் செய்து கொண்டு நிக்கிறியள் என்ரை உயிர் போகுது" என்று வயிற்றை எக்கி வயிற்று வலியால் துடிக்க, கண்டபாட்டிற்கு சாறத்தோடை வயிற்றாலை போயிற்று வல்லிபுரத்தாருக்கு.

காரும் வந்து வல்லிபரத்தாரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். நாலுநாள் குழுக்கோசும், அதுவும் இதுவும், ஒரு மாதிரித் தேறி நாலாம் நாள் துண்டு வெட்டி விட்டனர்.

தனக்கு வைத்தியம் பார்த்த டொக்டரைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டார் வல்லிபுரத்தார்.

"உண்மையில் சாகவேணுமெண்டு குடிச்சனீங்களோ? அல்லது முறைப்பாட்டில சொன்ன மாதிரி தவறுதலாகக் குடிச்சனீங்களோ?" என்று குறைவாகக் கேட்டார் டொக்டர்.

"ஐயோ... ஐயா சத்தியமாத் தவறுதலாக....." என்று தடுமாறினார் வல்லியர்.

"இல்லை.... இல்லை.... இப்ப எல்லாத்திலையும் கலப்படமாய்ப் போச்சுது. அதுதான் நீங்கள் குடிச்ச மருந்தும் கலப்படம் போலக் கிடக்கு...... சாகிறத்துக்குத்தான் குடிச்சதெண்டால் சொல்லுங்கோ..... கலப்படமில்லாத 'ரவுண்ட் அப்' விக்கிற கடை விலாசம் தரலாம்" என்றார் டொக்டர். அவருக்கு நடந்த விசயம் எல்லாத்தையும் சித்தார்த்தன் முன்னமே சொல்லிப்போட்டான்....

"ஐயோ..... ஐயா என்ரை தெய்வானையையும் என்ரை குஞ்சு சித்தார்த்தனையும் விட்டுட்டு நான் மருந்து குடிப்பனே.... இது தவறுதலாகத்தான் நடந்தது. இஞ்சை பரமசிவம் மச்சானைக் கேட்டுப்பாருங்கோ" என்றார் வல்லிபுரத்தார்.

நானும் ஓமோம் எண்டு தலையாட்டிப்போட்டு வந்திட்டன்.



## வரலாறு காணாத வெயில் சுட்டெரிக்கிறது பிரிட்டனை

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோக்சபா தேர்தலிலும் தனித்து போட்டியிட ஜெயலலிதா முடிவு



சமீபத்தில் நடந்து முடிந்த சங்கரன்கோவில் சட்டசபைத் தேர்தல் தொகுதி இடைத்தேர்தலில் ஆளும் அ.தி.மு.க. அமோக வெற்றியைக் குவித்ததை அடுத்து அடுத்துவரும் 2014 லோக்சபா தேர்தலில் தனித்துக் களமிறங்குவது என்ற தமிழக முதல்வர் ஜெயலலிதா எடுத்த முடிவு மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சியில் உள்ள கட்சிதான் இடைத்தேர்தலில் வெல்லும் என்பது சரிதான். ஆனால் இவ்வளவு பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெல்வது சரித்திரத்தை மாற்றி எழுதிவிட்டது எனலாம். வெற்றிபெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் தவிர்ந்த ஏனைய சகலரும் கட்டுப்பணம் இழந்தது இதுவரை நடவாத ஒன்று. உதாரணமாக தி.மு.க. ஆட்சியில் நடந்த இடைத்தேர்தல்கள் பதினொன்றிலும் இரண்டாவதாக வந்த அ.தி.மு.க.வோ பா.ம.க.வோ கட்டுப்பணம் இழக்காமல் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டன. ஆனால் இந்தத்தேர்தலில் இரண்டாவதாக வந்த தி.மு.க.வே கட்டுப்பணத்தை இழந்து நிற்க 3 வது, 4 வது இடம் வகித்த ம.தி.மு.க, தே.மு.தி.க. இரண்டின் நிலையோ இதைவிடப் பரிதாபம்.

இத்தனைக்கும் மின்வெட்டால் ஆளும்கட்சி மீது அவதூறை அள்ளி இறைக்க எதிர்க்கட்சிகள் தவறவில்லை. எனினும் எதிர்க்கட்சிகளை கட்டுப்பணம் இழக்கச் செய்யுங்கள் என தனது ஒருநாள் பிரசாரத்தில் கேட்டுக்கொண்டதை அச்சொட்டாக அமைச்சர்களும், கட்சியினரும், மக்களும் செய்து முடித்துள்ளனர். அமைச்சர்கள் இப்படி அமோக வெற்றி கிடையாவிடில் தங்கள் பதவி காலி என்பதையும் அறிந்தே இருந்தனர். ஜெயலலிதாவுக்கு எவ்வளவு தூரம் பயத்துடன் இவர்கள் இயங்குகின்றனர் என்பதும் தெளிவாகத் தெரிந்தது. "ஜனநாயக ரீதியில் தெரிவாகும் சர்வாதிகாரி சிறப்பான ஆட்சியை வழங்கக் கூடும் என்ற வரலாற்று எதிர்வு கூறலை ஜெயலலிதா மெய்ப்பித்து வருகிறார் எனலாம். ஊழல், ஏனைய குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர்களை கல்தா கொடுத்து அனுப்பி பெற்ற நற்பெயருடன் சசி கும்பலை விரட்டியதால் உண்டான பாராட்டும் சேர்ந்து கொண்டது. அதே போல கடந்த வாரங்களில் இலங்கை விவகாரத்தில் கருணாநிதியை முந்தி கோல் போடுவதிலும் தன் திறமையைக் காட்டி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. கருணாநிதி ஆட்சியில் இருந்தபோது ஒரு முறையும் அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஒருவர் அவரைச் சந்தித்தது கிடையாது. ஆனால் ஹிலாரி கிளின்டன் ஜெயலலிதாவுக்கு அளித்த மதிப்பு உலகம் முழுவதையும் திரும்பிப் பார்க்க வைத்ததை மறுக்க முடியாத உண்மையாகும். அதேபோல இலங்கை வரும்படி இலங்கை அதிபர் எவ்வளவோ அழைத்தும் ஜெயலலிதா வரமறுத்த போதிலும் தி.மு.க. தரப்பு விழுந்தடித்துக் கொண்டு அலரிமாளிகை வந்து விருந்து உட்கொண்டது நினைவிருக்கலாம். ஹிலாரி சென்னை வந்தது, ஜெயலலிதா கொழும்பு அழைப்பை நிராகரித்தது ஆகிய இவ்விரு விடயங்களிலும் தி.மு.க - அ.தி.மு.க. இடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் காணமுடியும். ஜெயலலிதா தான் என்ன செய்யவேண்டும் என்பதில் மிகத்தெளிவாகவே உள்ளார்.

ஜெனிவா பிரேரணை விடயத்தில் மன்மோகனை நாடாளுமன்றில் நெருக்கியதுடன் நில்லாது அவர் தந்த பதில் திருப்தியில்லை என தொடர்ந்து பேசிவந்தது குறிப்பிடத்தக்கது. புலிகளை ஆதரிக்கும் புலம்பெயர் இலங்கைத் தமிழர் சில "ஆஹா இந்தியா நம் பக்கம்" என வெற்றிக் கூச்சல் இட்டபோது "இல்லை இல்லை இது போதாது" என ஜெயலலிதா முழக்கமிட்டது பலருக்கு மறந்திருக்கலாம். அதாவது மன்மோகன் கடைசி நிமிடம் அந்தர் பல்டி அடித்து இலங்கை பக்கம் தாவலாம் என்ற நிஜமான அச்சம் ஜெயலலிதாவிடம் குடி கொண்டு இருந்தது. சோனியா இதற்கு இணங்கமாட்டார் என்றே நினைத்திருந்த ஜெயலலிதா கடைசிவரை போராட்டம் நிகழ்த்தினார் என்பதே உண்மை. ஜூலையில் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரசுக்கு உதவ ஜெயலலிதா இதன்மூலம் ஏது வாககளித்து சோனியாவிடம் பதில் வாக்குறுதி பெற்றார் என்றும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறுகின்றன.

கருணாநிதியால் எந்த ஆபத்துமில்லை, ஆனால் ஜெயலலிதா பயங்கரமானவர் என்ற உண்மை இலங்கை இனவாதிகளுக்கு மூன்று வருடத்துக்கு முன்பே தெரியவந்துவிட்ட உண்மையாகும். தமிழ்நாடு செல்லும் இலங்கை அரசின் சார்பான இராஜதந்திரிகளும் அவர்களது உறவினர்களும் பாதுகாக்கப்படவேண்டும் என இலங்கை அதிபர் ஜெயலலிதாவுக்கு மறைமுக அறிக்கை மூலம் அவரை செக்மேட் செய்யப் பார்த்தபோது அதற்கும் முதல்வர் கடும் பதிலடியை பகிரங்கமாக வழங்கினார். அதாவது இவ்வாறான இலங்கை பிரமுகர்கள் வருகை பற்றி முன் கூட்டி தனக்கு வெளியுறவு அமைச்சு மூலம் அறிவிக்க வேண்டும்; அதன் மூலம் அவர்கள் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தவும் சிக்கல்கள் இருப்பின் வருகையைத் தவிர்க்க அல்லது ஒத்திப்போட ஆலோசனை வழங்கவும் முடியும் என ஜெயலலிதா கூறி இலங்கையின் வாயை அடைத்துள்ளார். சில இலங்கை அரசியல்வாதிகள் தமிழ்நாட்டில் விடுமுறையில் போதையில் வரம்பு மீறி நடப்பது பற்றிய தகவல்களும் ஜெயலலிதாவை எட்டியிருந்தன. மொத்தத்தில் இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என சகல பிரிவிலும் குறிப்பிட்ட சிலருக்கு தமிழ்நாடு 'நுழைய முடியா எல்லை' என அறிவிக்க முதல்வர் தயாராவதும் மறுக்க முடியாத உண்மை. திருத்தல யாத்திரை செல்லும் இந்துக்களோ, வேளாங்கண்ணிக்குச் செல்லும் இலங்கை கிறிஸ்தவர்களோ, வடக்கே புத்தகாயா செல்லும் பௌத்த யாத்திரிகளோ வியாபாரம் செய்யும் மூவினத்தவருமோ சென்னை விமான நிலையம் இன்றேல் தவிக்க நேரிடும். ஏற்கனவே ஜெயலலிதா கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவையைத் தடுத்தும் முக்கியமான செய்தியை விடுத்தது. அதாவது இனப்பிரச்சினைத் தீர்வு முதலிய முக்கிய விடயங்கள் நிலுவையில் இருக்க கொழும்புக்குக் கப்பல் ஒரு கேடா என்ற மறைமுக கேள்வியை ஜெயலலிதா இதன் மூலம் கேட்டிருந்தார். அதாவது தன்னிடம் No.nonsense என்பதை இலங்கையின் இனவாதிகளுக்கு அவர் தெளிவாகவே கூறுகிறார் எனலாம்.

இந்நிலையில் முதல்வர் ஜெயலலிதாவின் உறுதியான நகர்வுகள் லோக்சபா தேர்தலில் தமிழகத்தில் ஜெயலலிதா பெறவுள்ள வெற்றியை இன்னும் பலமடங்கு அதிகரிக்கக் கூடும்.

**அபிஜித்**


## மருத்துவம்

நரைமுடியைக் கறுப்பாக்க, தலைமுடி மூன்று வாரத்தில் வளரச்செய்ய, உயரத்தை அதிகரிக்க, நிறை குறைக்க, வெண்குஷ்டம், தழும்பு, முகப்பரு நீக்க, முகம் வெண்மையாக, மதுபானம் புகைத்தலை கைவிட ஆங்கில மருந்து (ஊசிமூலம்)

0715175957







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரும் பிள்ளைகளும்



நம் குழந்தைகள்தான், என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று இருந்த காலம் போய்விட்டது. இடுப்பில் கயிறு கட்டி கிணற்றுக்குள் இறக்கி பயங்காட்டின நாட்கள் இப்போது இல்லை.

இன்றைய பெற்றோர்களின் பொறுப்பு மிக சிக்கலாக இருக்கிறது. குழந்தைகளுக்கு எது நல்லது, எதை எப்படி சொல்லிக்கொடுப்பது என்பது கஷ்டமான காரியமாக இருக்கிறது. குழந்தை வளர்ப்புக்கென்று சிறப்புக் கருத்தரங்குகள் நடக்கின்றன என்று கேள்விப்படுகிறோம். உண்மையில் அவை அவசியம் என்றே தோன்றுகிறது.

குழந்தைகளிடம் அன்பு காட்டவேண்டியது அவசியம். ஆனால் அதீத அன்பு கெடுதல் விளைவிக்கும் என்பதையும் உணரவேண்டியது அவசியம். கண்டிப்பு தேவைப்படும் சமயங்களில் கண்டிப்பாக இருப்பது குழந்தைகளுக்கு நல்லது. ஆனால் எப்பொழுது அன்பு காட்டவேண்டும், எப்பொழுது கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதை அனுபவத்தின் மூலமாகத்தான் கற்றுக்கொள்ள முடியும்.

குடும்பத்தின் பொருளாதார நிலையைக் குழந்தைகள் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் குடும்ப நிலைக்கு மீறி ஆசைப்படாமல் இருப்பார்கள். இளம் வயதில் கல்வி கற்பதுதான் ஒருவனின் நோக்கமாக இருக்க வேண்டும். உபரியாக ஏதாவது விளையாட்டு அல்லது நுண்கலையில் பரிச்சயம் இருந்தால் போதும். அதற்காக குழந்தைகளைப் பல்கலை நிபுணனாக வளர்க்கிறேன் என்று விரட்டுவது கூடாது.

தொலைக்காட்சிப் பெட்டியும் கணினியும் இல்லாத வீடே இல்லை என்று ஆகிப் போனது. இந்த இரண்டும் பொது அறிவை வளர்க்கக் கூடியவைதான். ஆனால் அதற்கும் ஒரு நியதி இருக்கவேண்டும். வீட்டிலுள்ள பெரியவர்கள் எப்போதும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு குழந்தைகளுக்கு மட்டும் கட்டுப்பாடு விதிப்பது சாத்தியமில்லை.

குழந்தைகளின் நடவடிக்கைகளின் மேல் பெற்றோர்களின் கண்காணிப்பு எப்போதும் அவசியம். அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை பெற்றோர்கள் தான் கொடுக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்திருக்கிறோமே என்று திருப்திப்பட்டுக்கொண்டு அவர்களை மனம்போல் நடந்து கொள்ள அனுமதிப்பது தவறு.

நம் குழந்தைகளின் எதிர்காலத்தை நல்ல முறையில் உருவாக்கிக் கொடுப்பது நம் பொறுப்பு. அதே சமயம் நம் அனைத்து செல்வங்களையும் அவர்களுக்காகவே தியாகம் செய்துவிட்டு நம்முடைய வயதான காலத்தில் அவர்களை எதிர்பார்த்து நிற்கும் நிலைக்கு ஆளாவதும் தவறானதாகும்.

# இல்லறம் இனிக்க வேண்டுமா

திருமணமான புதிதில், எல்லோருமே சந்தோஷமாகத்தான் இருப்பார்கள். ஓரிரு வருடம் கழித்துக் கேட்டால், திருமணம் செய்யாமலேயே இருந்திருக்கலாம். ஏன் தான் திருமணம் செய்து கொண்டேனோ? என்று புலம்புபவர்கள் தான் அதிகம். நீங்களும் அப்படி புலம்பித் தவிப்பவரா? கவலையை விடுங்கள். சின்ன சின்ன அட்ஜஸ்மென்ட் செய்து கொண்டாலே போதும் உங்கள் பிரச்சினை காணாமல் போய்விடும். இல்லறத்தை இனிதாக்க இதோ சில குறிப்புகள் உங்களுக்காக:

உங்கள் கணவரது விருப்பு வெறுப்புகளை அறிந்து, அதன்படி விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளுங்கள். அவருடைய விருப்பங்களை அலட்சியப்படுத்தாதீர்கள். உங்களுக்கு பிடிக்காததாக இருந்தாலும், அவருக்குப் பிடித்ததை நீங்கள் ரசிக்கப் பழகிக்கொள்ளுங்கள்.

உங்கள் கணவர் உங்களை விட அறிவிலோ, கல்வியிலோ, பொருளாதாரத்திலோ குறைவாக இருந்தால், அவரைக் குறைகூறாதீர்கள். மற்றவருடன் ஒப்பிட்டும் பேசவேண்டாம்.

உங்கள் கணவருக்குத் தேவையான சிறுசிறு உதவிகளைச் செய்ய மறக்காதீர்கள். கணவரை ஒரு போதும் விட்டுக் கொடுத்துப் பேசாதீர்கள்.


கடுமையான வார்த்தையைப் பேசிக் காயப்படுத்தாதீர்கள். அதுவும் மற்றவர்கள் முன்னால் கூடவே கூடாது; இனிமையான, அன்பான வார்த்தைகளை மட்டுமே பேசுங்கள். சந்தோஷமாக இருக்கும் போது மட்டுமல்லாமல், சங்கடமான சமயங்களிலும் பேச வேண்டும்

நிறைய பேசுங்கள், பேசவிடுங்கள், பேசுவதைக் கேளுங்கள். நீங்கள் மட்டும் பேசிப் பேசி சலிப்படையச் செய்யாமல், உங்கள் கணவர் பேசுவதையும் காது கொடுத்துக் கேளுங்கள்.

முடிந்தவரை இருவரும் சேர்ந்தே சாப்பிடுங்கள். தினமும் இரவு உணவை மட்டுமாவது சேர்ந்து சாப்பிடுங்கள்.

உங்க அன்பை, காதலை வெளிக்காட்ட அடிக்கடி பரிசுகள் கொடுங்கள் விசேட நாள்களில் மட்டுமல்ல; மற்ற நாட்களிலும் கொடுக்கலாம்.

தினமும் இரவில், குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி மனம் விட்டுப் பேசுங்கள். சினிமா, அரசியல் என, உங்களுக்குள் கருத்து வேறுபாடு வராதவரை எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசுங்கள்.



நீங்கள் தவறு செய்யும் போது, உங்கள் கணவரிடம் மன்னிப்பு கேட்கத் தயங்காதீர்கள்.

இப்படியெல்லாம் நீங்கள் இருந்தால் உங்கள் குடும்பத்திலாவது சண்டையாவது. வாழ்க்கையைச் சந்தோசமாக அனுபவியுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே!




# சமையலறைக் குறிப்புகள்:

★ தோசை மாவுடன், சிறிதளவு சோளமாவு சேர்த்து தோசை வார்த்தால், தோசையின் சுவை அபாரமாக இருக்கும்.

★ இட்லிப் பொடி தயாரிக்கும் போது, சிறிதளவு கருவேப்பிலையை வறுத்து சேர்த்து அரைத்தால், ருசியாக இருக்கும்.

★ தயிர் வடை செய்யும் போது வடையை பொரித்ததும், அதைச் சில நிமிடங்கள் தண்ணீரில் நனைத்து பின் தயிரில் போட்டால் நன்றாக ஊறும்.

★ சவ்வரிசி பாயசம் செய்யும் போது, இரண்டு தே.கரண்டி வறுத்த கோதுமை மாவைப் பாலில் கரைத்து ஊற்றிச் செய்தால், பாயசம் கெட்டியாகவும் ருசியாகவும் இருக்கும்.

★ இட்லிக்கான அரிசியை வெந்நீரில் ஊறவைத்து அரைத்தால், இட்லி பஞ்சுபோல இருக்கும்.

★ முள்ளங்கி சாம்பார் செய்யும் போது, சிறிதளவு எண்ணெயில் முள்ளங்கியை வதக்கிய பின் சாம்பார் செய்தால் ருசி கூடும்.

★ கட்லெட் செய்யும் போது, அவை எண்ணெயில் போட்டதும் உதிர்ந்து போகாமல் இருக்க, கலவையில் சிறிது முட்டையை ஊற்றி பிசைந்து செய்யலாம். முட்டை விரும்பாதவர்கள் அதற்கு பதில் பாண் துண்டுகளை தண்ணீரில் நனைத்துக் கட்லெட் கலவையுடன் சேர்த்துச் செய்யலாம்.

★ கட்லெட் செய்ய ரஸ்க் தூள் இல்லையென்றால், அரிசியைப் பொரித்துத் தூளாக்கி பயன்படுத்தலாம்.

★ உளுந்தம்பருப்பு வடைக்கு அரைக்கும் போது தண்ணீர் அதிகமாகி விட்டதா? அதில், சிறிது பச்சைஅரிசிமாவைத் தூவினால் தண்ணீரை அரிசி மாவு உறிஞ்சிவிடும்.

★ உருளைக்கிழங்கைச் சீவியதும் சிறிதளவு பயத்தம்பருப்பு மாவைத் தூவி, சிப்ஸ் செய்தால் மொறுமொறுவென்று இருக்கும்.

★ பருப்பில் சிறிதளவு நெய் விட்டு வேக வைத்தால், விரைவாக வேகும். அதோடு சுவையும் மணமும் அதிகரிக்கும்.

★ கொண்டைக்கடலை, பட்டாணி, போன்றவற்றில் சமையலுக்குத் தேவையானதை முதல் நாள் ஊறப் போட மறந்து விட்டால், அவற்றை எண்ணெய் விடாமல் நன்றாக வறுத்து பிறகு குக்கரில் வேக வைத்தால் நன்கு வெந்து விடும்.

★ தோசை மாவு அரைக்கும் போது சிறிதளவு கடலைப் பருப்பை சேர்த்து அரைத்தால், தோசை பொன்னிறமாக வரும்.

# காளான் பிரியாணி

**தேவையான பொருட்கள்:**
பச்சரிசி /பாசுமதி அரிசி - 1/4 கிலோ
பெரிய வெங்காயம் - 2
தக்காளி - 3
காளான் - 200 கிராம்
புதினா - 1 கட்டு (சிறியது)
பச்சை மிளகாய் - 5
உப்பு - தேவையான அளவு

**அரைக்க தேவையானவை:**
இஞ்சி - 2 இஞ்ச் அளவு
பூண்டு - 12 பல்லு
முந்திரி - 3
பாதாம் - 2
பிஸ்தா - 2

**தாளிக்க தேவையானவை:**
நெய் - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு
பட்டை - 6
கிராம்பு - 6
ஏலக்காய் - 4 (தட்டிக் கொள்ளவும்)
சோம்பு பொடி - 1 தேக்கரண்டி
அன்னாசி பூ - 2 இதழ்
மராட்டி மொக்கு - 3
பிரியாணி இலை - 1
மல்லித் தூள் - 1/2 தேக்கரண்டி
பிரியாணி மசாலா - 1/2 தேக்கரண்டி

**செய்முறை:**
அரிசியை 1/2 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து, பின்னர் நீரை வடிகட்டிக் காய வைக்கவும். புதினாவை சுத்தம் செய்து நறுக்கி வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தை நீள வாக்கிலும், தக்காளியை பொடியாகவும் நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயை நடுவில் கீறிக் கொள்ளவும்.

காளானை அரிந்து இரண்டு முறை நன்றாகக் கழுவி வெதுவெதுப்பான நீரில் போட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும். குக்கரில் 2 தேக்கரண்டி நெய், 2 தேக் கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், பட்டை, கிராம்பு, ஏலக்காய், அன்னாசி பூ, பிரியாணி இலை போட்டுத் தாளிக்கவும்.

அனைத்தும் பொரிந்ததும், அரைக்கக் கூறப்பட்ட பொருள்களை அரைத்து, இதனுடன் சேர்த்துச் சிவக்க வதக்கவும். பிறகு சோம்பு சேர்த்து வதக்கவும். அதனுடன் நறுக்கிய பெரியவெங்காயம், புதினாத் தழை சேர்த்து வதக்கவும்.

அடுத்து பச்சைமிளகாய், தக்காளியைப் போட்டு நன்றாக வதக்கவும். பின்பு நறுக்கிய காளானைச் சேர்த்து வதக்கவும். அதனுடன் மஞ்சள்தூள், பிரியாணி மசாலா, கரம் மசாலா சேர்த்து வதக்கவும்.

அடுத்து ஊறவைத்து வடிகட்டிய அரிசியைப் போட்டு (பாசுமதி அரிசி 1 பங்கு : தண்ணீர் 2 பங்கு)-(பச்சரிசி 1 பங்கு : தண்ணீர் 2 1/2 பங்கு) சேர்த்துக் கிளறி, சுடுதண்ணீர் சேர்த்து தேவையான அளவு உப்பு சேர்த்து நன்கு கிளறிய பின் குக்கரை மூடி 2 விசில் வரும் வரை வேகவைத்து அடுப்பிலிருந்து இறக்கவும்.

குக்கர் ஆவி அடங்கியதும், கொத்தமல்லித்தழை சேர்த்து லேசாக கிளறி பரிமாறவும்.

**குறிப்பு:**
தேவைப்பட்டால் குக்கரை மூடி வேகவைப்பதற்கு முன், அரை எலுமிச்சம்பழத்தை சாறு பிழிந்து சேர்த்து வேகவைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மலையகம் யாருடைய வீட்டுச் சொத்தும் அல்ல

இரா.புஷ்பராசிகாமணி







மலையகம் எவருடைய பாட்டன் வீட்டு சொத்தும் அல்ல. அது மலையக மக்களின் அழியாத அழிக்க முடியாத சொத்து. யார் யாரோ, எவர் எவரோ தாம் விரும்பியபடி எல்லைக் கோடிட்டு கோட்டை கட்டிக் கொண்டு ஆள முயன்றால் அது அடிமுட்டாள்த்தனம் மட்டுமல்ல அருவருக்கத்தக்க காரியமாகிவிடும்.

ஒவ்வொரு தோட்டங்களிலும் தொழிற்சங்கங்கள் என்ற பெயரில் மக்களைத் தான் ஒன்று சேரவிடாமல் துண்டு துண்டாகப் பிரித்து நாசமாக்கிவிட்டீர்கள்.

இப்பொழுது மலையகத்தையும் வேலிபோட்டு எல்லை பிரித்துத் துண்டாடப் பார்க்கிறீர்களே இது நியாயமா?

மத்திய மாகாணம் என்றால் என்ன, ஊவா மாகாணம் என்றால் என்ன, இல்லை சப்பிரகமுவ மாகாணம் என்றால்தான் என்ன மலையகம் மலையகம் தானே.

மலையக மக்களுக்குச் சேவை செய்யவே வந்தேன் என்று கூறிக் கொண்டு ஏன் இந்த அப்பாவி மக்களைப் பலிக்கடாவாக்குகின்றீர்கள்?

தொழிற் சங்கம் என்ற பெயரில் அரசியல் வியாபாரம் நடத்தும் நீங்கள், உங்களுடைய வியாபாரப் போட்டியைத் தனித்தனியே வைத்துக் கொள்ளுங்கள். வேண்டுமானால், தனியான மேடை அமைத்துக் கொண்டு முஷ்டியை முறுக்கிக்கொண்டு மோதுங்கள். யார் பலசாலி என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

தொழிற்சங்கம் அரசியல் என்ற பின்புலத்தை வைத்துக் கொண்டு சண்டித்தனம் காட்டக் கூடாது.

ஐயா சௌமிய மூர்த்தி தொண்டமான் இருக்கும் வரை அவரது காரியாலயங்களுக்குச் செல்லும் போது பயபக்தியுடன் கால் செருப்பைக் கூட வெளியே கழற்றி வைத்துவிட்டுச் செல்வார்கள். மாற்று சங்கத்தவர்களாக இருந்தாலும் ஐயாவைக் கைகூப்பி வணங்குவார்கள். இந்தப் பக்தியும் மதிப்பும் மரியாதையும் ஐயாவுக்குத் தானாக மக்களின் அடி மனதில் இருந்து கிடைத்தவை. அடிதடிக்கோ ஏச்சுப் பேச்சுக்கோ பயந்து செய்யும் மரியாதை இல்லை.

ஐயாவின் தன்னலமற்ற சேவை, தட்டிக் கொடுக்கும் தனிப்பண்பு, தைரியமூட்டும் பெருந்தன்மை "நல்லா பண்ணியிருக்கியே" என்று பாராட்டும் மாமனித குணம் இவை எல்லாம் தான் ஐயாவை மனித தெய்வமாக மலையக மக்கள் போற்றுகின்றனர். இன்று இந்தப் பேனையைப் பிடித்து துணிச்சலாக எழுதும் தைரியம் அவர் தந்தது, முன்னேற்றத்திற்குத் தூண்டு கோலாக அமைந்தது.

இன்று அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மலையகத்தில் எங்கு சென்றாலும் மதித்து வரவேற்கின்றனர். அவர் அமைச்சர் என்பதால் அல்ல அந்த மாமனிதனின் பேரன், மாபெரும் அமைப்பின் தலைவன் என்பதால். நிர்வாக அளவில் அவர் செயலாளராக இருக்கலாம். ஆனால், மக்களைப் பொறுத்தவரை அவர்தான் தலைவர்.

இதுவரை ஆறுமுகன் என்றாவது இது என்னுடைய கோட்டை, இங்கே வேறும் வரக் கூடாது என்று கூறியது இல்லை. பாட்டனின் தோட்டமான வெவண்டனிலும் மாற்றுச் சங்கப் பிரதிநிதிகள் சாதாரணமாக நடமாடினர். ஆள் சேர்த்தனர்.

இதை ஏன் இங்கு சுட்டிக் காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால், அண்மையில் பண்டாரவளையில் இடம்பெற்ற கேவலமான சம்பவம் அதன்பின் ஊடகங்கள் மூலம் அசிங்கத்தனமான அறிக்கைப் போர்.

இதை எல்லாம் பார்த்து வெளியில் இருப்பவர்களும் மாற்று இனத்தவர்களும் கேவலமாகப் பேசுகின்றனர். கீழ்த்தரமாக விமர்சிக்கின்றனர்.

ஒருவர் போதைப்பொருள் வியாபாரி என்கின்றார். மற்றவர் போதைப்பொருள் பாவித்தவரே அவர்கள் தான் என்று திருப்பி அடிக்கின்றார். இதுதான் நீங்கள் மலையக மக்களுக்குச் செய்யும் சேவையா?

போதைப்பொருள் வைத்திருப்பதோ, பாவிப்பதோ அல்லது விற்பனை செய்வதோ மரண தண்டனைக்கான குற்றம். இது உங்களுக்குத் தெரியாதா?

பாடசாலைப் பைகளில் போதைப்பொருள் கொண்டு செல்கிறார். கடத்துகின்றார் என்பதை மக்கள் தெரிந்து கொண்டுதான் திகாம்பரத்தை தாக்கினார்கள். ஐநூறு முட்டைகளால் தாக்கினர். காலிலிருந்த செருப்பால் தாக்கினர். என்று சரியாகக் கண்டு கூறுகின்றார் செந்தில் தொண்டமான்.

இன்னும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

உடனடியாக திகாம்பரத்தை ஹோட்டலில் இருந்து வெளியேற்றும்படி பொலிசாருக்கும் கூறினாராம். ஏன் ஐயா இந்த பொலிஸ்காரர்களைக் கொண்டு பாடசாலை பைகளை சோதனையிட்டு போதைப்பொருட்களை கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொடுத்திருக்கலாம் தானே.

அன்று பிடித்துக் கொடுத்திருந்தால் இன்று நீங்கள் போதைப்பொருள் பாவிப்பதை அவர் சொல்லமுடியாதல்லவா?

ஆத்திரம் அடைந்த மக்கள் தாக்கினர் என்று கூறுகின்றீர்கள். அன்று இந்தியாவில் பிறந்து தவழ்ந்து விளையாடிய சொந்த ஊரில் உங்களுக்கு கறுப்புக் கொடி காட்டவில்லையா?.

இதுமட்டுமா ஜனாதிபதியின் மைத்துனர் என்றும் பாராமல் அடித்து விரட்டினார்களே நீங்கள் கேள்விப்படவில்லையோ? அது இலங்கை மீது கொண்ட வெறுப்பால் ஆத்திரம் அடைந்த மக்கள் தாக்கினார்கள் என்று ஏற்றுக் கொள்ளலாம்.

இவை உங்களுடைய கோட்டை என்றும் அங்கே மீண்டும் வந்தால் ஐயாயிரம் முட்டைகளை அடித்து விரட்டுவோம் என்று பகிரங்கமாகக் கூறுகின்றீர்கள். இப்பொழுதே முட்டைகளுக்கு ஆர்டர் கட்டிவிட்டீர்களா? அந்த முட்டைகளை பாவம் பட்டினியால் வாடும் ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பெற்றுக் கொடுங்கள் அது பெரிய புண்ணியமாகிவிடும்.

ஊவாவில் உங்களுக்கு முன்பே கோட்டை போட்டு நாடாளுமன்றம் வரை சென்று பிரதி அமைச்சராகவும் இருந்த சச்சிதானந்தனும் வேலாயுதமும் உங்களைப் பார்த்து இப்படிக் கூறவில்லையே.

இவர்களை விடுங்கள். நாவலப்பிட்டியில் இன்று சுரேகம் இராகலையில் இருந்து சென்னனும் ஊவாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டனர். அவர்களும் நாடாளுமன்றம் வரை சென்று கொடிகட்டிப் பறந்தனர். இவர்கள் கூறவில்லையே ஊவா எங்களுடைய கோட்டை என்று.

பதுளைக்குப் போகும் திகாம்பரம் ஏன் பண்டாரவளையில் தங்கினார். பதுளை செல்லும் வழியில் தானே பண்டாரவளை இருக்கின்றது. இதுவெல்லாம் விவேகம் அற்ற விதண்டாவாதம்.

உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ ஐயா தொண்டமான் நுவரெலியாவிலிருந்து கொழும்புக்கோ அல்லது கொழும்பில் இருந்து வெவண்டனுக்கோ செல்லும்போது கம்பளையில் சிறிது இளைப்பாறிவிட்டுத்தான் செல்வார். இது மனித இயல்பு.

பண்டாரவளையில் போதைப் பொருள் வியாபாரிகளுடன் இருந்தார் என்று திட்டவட்டமாகக் கூறும் நீங்கள் ஏன் அவர்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வர முயற்சிக்கவில்லை. இது உங்கள் மனதை உறுத்தவில்லையா?

இங்கு எவரையும் நியாயப்படுத்தியோ, அல்லது குற்றம் சுமத்தியோ கூறவில்லை. மலையகம் என்ற ஒரே வீட்டிற்குள் இருந்து கொண்டு இப்படி ஏன் முட்டி மோதிக் கொள்கின்றீர்கள். கண்ணாடி வீட்டிற்குள் இருந்து ஏன் உங்கள் காற்சட்டைகளைக் கழட்டுகின்றீர்கள்.

ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசுவது ஆகாயத்தைப் பார்த்து படுத்துக் கொண்டு நீங்களே உங்கள் முகத்தில் துப்பிக் கொள்வது போல் இல்லையா?

அமைச்சர் ஆறுமுகனைப் பாருங்கள் அவர் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு என்று செல்லவில்லையா அங்கு வாழும் மலையக மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகேட்டு உதவவில்லையா. அமைச்சரைப் பார்த்து கூட்டமைப்பு உறுப்பினர்கள் இது எங்களுடைய கோட்டை இங்கே வரவேண்டாம் என்று யோர்க் கொடி தூக்கவில்லையே.

திகாம்பரம் யார் மலையகத்தில் வட்டகொடை தோட்டத்தில் ஒரு சாதாரண தொழிலாளியின் மகனாகப் பிறந்து பல சோதனைகளைக் கடந்து இன்று அவரும் ஒரு தலைவராக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்.

சட்டத்தையும் அதிகாரத்தையும் நாம் கையில் எடுத்துக் கொண்டு செயல்படக் கூடாது. போதைப்பொருள் கடத்தலை முறியடிக்க ஒரு தனிப்படையே இருக்கின்றது. உங்களுக்கு ஏன் வீண் வம்பு. அன்று பொலிசாரிடம் சிக்க வைத்திருந்தால் நீங்கள் கதாநாயகனாகி இருப்பீர்கள். ஆனால் இன்று இருவரும் அடித்துக்கொண்டு மலையகத்தின் மானத்தை விற்கின்றீர்கள்.

மலையகத்தில் இன்று எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தூக்கி எறிந்த ஒருவரை ஜனாதிபதி மீண்டும் தூக்கி தலையில் வைத்துவிட்டார். ஆறுமுகனை அந்த மனிதன் இனி மதிப்பானா. இது ஒரு தன்மானக் கௌரவப் பிரச்சினை.

தனி ஒரு ஆறுமுகன் தொண்டமானை அல்ல பல லட்சம் மலையக மக்களின் தலைவனை அவமானப்படுத்தி உள்ளார் ஜனாதிபதி. இது உங்களுக்கு ஒரு பிரச்சினையாகத் தெரியவில்லையா?

அரச தரப்பிடம் கேட்டால் ஆறுமுகன் 'ஸ்டண்ட்' அடிக்கின்றார். இராஜினாமா என்பது அவருக்கு ஒரு விளையாட்டு வார்த்தை. இதற்கு முன்பும் பலமுறை இராஜினாமா எனப் பூச்சாண்டி காட்டியவர்தானே. எல்லாம் சரியாகிவிடும் என்கின்றனர்.

பார்த்தீர்களா? மலையகத் தலைமைகளிடம் ஒற்றுமை இல்லை. ஒருத்தன் காலை அடுத்தவன் வாரிவிடுவான். ஒருவன் போனால் அடுத்தவன் நுழைந்துவிடுவான் என்ற பயம் அவர்களுக்குள் இருக்கும் வரை நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்கின்றனர்.

இக்கட்டுரை வெளிவரும் போது ஒருவேளை இராஜினாமாவை வாபஸ் பெற்றுக் கொண்டாலும் அது புதிதல்ல. அப்படி பல தட்வை நடந்தது தானே. காலையில் இராஜினாமா மாலையில் வாபஸ் அப்படித்தானே.

மலையகத் தலைமைகளிடம் ஒற்றுமை என்பது மருந்துக்குக் கூட இல்லை. ஒரு பொதுப்பிரச்சினை என்றால் சமூக ரீதியாக ஒன்றுபட்டு செயல்படும் வகையில் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு கிட்டவும் வராது.

சென்றதை மறந்து நல்லதை நினைத்து புதிய சிந்தனையுடன் செயல்பட முன்வருவோம். வெற்றி நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையிட்டுத் தடுக்கும் இதயநோய் சிகிச்சை யாழ்ப்பாணத்தில்

இடையிட்டுத் தடுக்கும் இதய நோய் சிகிச்சையானது முக்கியமாக கதீட்டர் குழாய்கள் மூலம் இதய நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதை அடிப்படையாகக் கொண்டது. இடையிட்டுத் தடுக்கும் இதயநோய் சிகிச்சை நிபுணர்கள் மருத்துவபட்டப்பின் படிப்பு சபையின் அங்கீகாரம் பெற்ற இதயநோய் சிகிச்சை நிபுணர்கள் என்பதுடன் இடையிட்டுத் தடுக்கும் இதயநோய் சிகிச்சைகளை வைத்தியசாலை ஒன்றின் இதய கதீட்டர் குழாய் சிகிச்சைக் கூடத்தில் வழங்குபவர்களாவர்.

பெரும்பாலான இடையிட்டுத் தடுக்கும் இதய நோய் சிகிச்சை முறைகள் இதயம் மற்றும் குருதிக் குழாய்களின் தொகுதியில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சிகிச்சை முறைகள் எளிமையானவையும் உடலில் ஆகக்குறைந்த காயங்களை ஏற்படுத்துபவையும் ஆகும். ஏனெனில் இச்சிகிச்சை முறைகள் பெரிய சத்திரசிகிச்சைக் காயங்களை உண்டாக்காது உடலை அறுவைக்குட்படுத்தும் உபகரணங்களையும் பாவிக்காது செய்யப்படக் கூடியவையாகும். பெரும் பாலான காயங்கள் ஒரு அங்குலமளவு மிகச் சிறியவையே. காலின் மேற்பகுதியில் இருக்கும் தொடை நாடியினூடாக கதீட்டரை (உட்புறம் கோறையாக உள்ள குழாய்) செலுத்தி இச்சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

இத்தகைய ஆகக்குறைந்த காயமுண்டாக்கும் சிகிச்சையின் அனுகூலங்களாக குறைந்த வலி, கிருமித் தொற்று, ஆபத்து குறைதல், பாரிய சத்திர சிகிச்சை தழும்புகளைத் தவிர்த்தல், சத்திர சிகிச்சையின் பின் சாதாரண நிலைக்கு மீள்வதற்கு குறைந்த காலமே தேவைப்படல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நோயாளிகள் சுயநினைவுடன் இருந்து வெறுமனே அந்தப் பகுதியை மட்டும் மரத்துப் போகச்செய்யும் ஊசிமருந்து மூலம் இச்சிகிச்சையைப் பெறலாம். அத்துடன் பெரும்பாலும் வெளிநோயாளர் பிரிவு சிகிச்சையை ஒத்ததாக சிகிச்சைக்குப் பின் சில மணி நேரத்தில் நோயாளிகள் வீடு திரும்பக் கூடியதாகவும் இருக்கும்.

இடையிட்டுத் தடுக்கும் இதயச்சிகிச்சை முறைகளாவன. பலூன் அஞ்சியோ பிளாஸ்ரி இது குருதிச் சுற்றோட்டம் தடைப்பட்ட நாடியில் செலுத்தப்பட்டு சிறிய அந்த பலூனை ஊதச் செய்வது. இதன் மூலம் தடை ஏற்படுத்திய கொழுப்புப் படிவை நாடியின் சுவருடன் அழுத்தி நாடியின் உள்ளாக இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும். இந்த பலூன் உடலில் நிரந்தரமாகத் தங்கவிடப்படுவதில்லை.

Carotid Stent மற்றும் பக்கவாத இடையிட்டுச் சிகிச்சையானது இதயத்தின் பெருநாடியிலிருந்து கழுத்தின் இருபக்கமும் மூளைக்கு குருதியை எடுத்துச் செல்லும் சிரசு நாடி (Carotid artery) யினுள் stent எனும் இட விரிவு ஏற்படுத்தும் உபகரணத்தினை அந்த சிரசுநாடிகளினுள் செலுத்துவதைக் குறிக்கிறது.


பிறப்பில் ஏற்படும் இதயத்துவாரம் திறந்தே இருக்கும் நாடிகான், பெரும் குருதிக்குழாய்களின் சீர்திருத்தம் (Angeoplasty) என்பவற்றுக்கும் இச்சிகிச்சை முறைகள் பயன்படும். இதயத்துக்கு குருதி வழங்கும் முடியுரு நாடிக்குள் stent ஐ நுழைப்பதானது கறைபடா உருக்கினால் ஆன வலைபோன்ற அமைப்பிலான குழாயைப் பொருத்தி பலூன் மூலமாக குருதிக் குழாய் சீர்திருத்துகையின் பின் தொடர்ந்து அந்த நாடியை அடைபடாமல் காக்க முடியும். இதில் வெறுமனே உலோகம் மட்டும் கொண்ட மற்றும் மருந்தை வெளிவிடும் stent வகைகள் உள்ளன.

குருதிக்குழாய்கள் ஊடான அல்ட்ராசவுண்ட் முறை முடியுருநாடியில் சிறிய கதீட்டர் குழாயைச் செலுத்தி அது ஒலி அலைகளை எழுப்புவதைக் கொண்டு அடைப்பின் வடிவத்தையும் விதத்தையும் அறிந்து அடைப்பிற்கு சிகிச்சையளிக்க இதயநோய் சிகிச்சை நிபுணருக்கு உதவுகிறது.

திடீரென இதயம் நின்று போகக்கூடிய இதய நோயாளிகளுக்கு உள்ளே பதித்து விடக்கூடிய ICD எனும் Implantable cardiac Defibrillator கள் உதவுகின்றன. தோள்பகுதியில் ஒரு சிறு வெட்டுக்காயத்தினூடாகப் பதிக்கப்படும் ICD கருவிகள் மின்சாரத் துடிப்புகள் அல்லது அதிர்வு மூலம் உயிராபத்தான மற்றும் ஒழுங்கற்ற இதயத் துடிப்புகளைக் கட்டுப்படுத்த உதவும்.

இதயத்துடிப்பு ஒழுங்காக்கிகள் ஆனவை இதயத் துடிப்பு வேகம் மிக மந்தமாக உள்ளவர்கள், இதயச் செயற்பாடு குறைந்தவர்கள் மற்றும் திடீர் உயிர் ஆபத்துக்கு உள்ளாகக் கூடியவர்களில் பதிக்கப்படுபவையாகும். இவை மின்சார சமிக்ஞைகளை வழங்கி இதயத்தின் பம்புகைத்தொழிலை ஒருங்கிணைக்க உதவுவதன் மூலம் இதயம் செயற்திறன் மிக்க ஒரு பம்பியாகத் தொழிற்பட வழிவகுக்கின்றன.


சுற்றயல் நாடி வியாதி (Peripheral Arterial Disease) சிகிச்சை இதயத்திலிருந்து தூரத்திலுள்ள இரத்த குழாய்களில் உள்ள இவ்வகை வியாதியின் தன்மையைக் கணிப்பிட உதவும். இதயத்திலிருந்து தூர உள்ள குருதிக் குழாய்களில் உள்ள அடைப்பு படிவுகளை உடைக்க Peaipheral Athexectomy உதவும். இதனால் படிவுகள் மிக மிக நுண்ணியதுகள்களாகக் குருதியின் சிவப்பு அணுக்களைகளை விட நுண்ணியதாக உடைக்கப்பட்டு இரத்தக் குழாய்களின் உட்பகுதி அழுத்தமானதாக மாற்றப்பட உதவி இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.




■ டொக்டர். எஸ். சுகிர்தராஜ்

இடையிட்டுத் தடுக்கும் இதயநோய் சிகிச்சையானது இலங்கையில் 1990களில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அறிமுக காலத்தில் இதய முடியுருநாடியை சீர்படுத்தும் விதத்தில் பயன்படுத்தப்பட்டு பின்பு ஏனைய முடியுருநாடி நோய்கள், வால்பு அடைப்புகள், இதயத்தில் துவாரங்களை அடைத்தல் என்பவற்றிலும் பிரயோகிக்கப்பட்டது. அவ்வப்போது சுற்றயல் குருதிக்குழாய் நோய்சிகிச்சையிலும் பயன்படுத்தப்பட்டன.

இதயமுடியுரு நாடி கதீட்டர் சிகிச்சைக்கூடம் யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு வருடங்களாக டாக்டர் லக்ஷ்மன், டாக்டர் குருபரன் ஆகிய இதயநோய் சிகிச்சை நிபுணர்களின் இடைவிடா முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் இதயநோய் சிகிச்சைப்பிரிவு இன்று



Coronary Angiogram என்ற வசதியை வழங்கக் கூடிய நிலையிலுள்ளது. இலங்கை இதய சங்கத்தின் தலைவர் டொக்டர்.வஜிர சேனாரத்ன அவர்களது முன் முயற்சியால் இடையிட்டுத் தடுக்கும் இதயநோய் சிகிச்சை சேவை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சாத்தியமாகியுள்ளது.

இந்த சிகிச்சை யாழ். போதனா வைத்தியசாலையில் இதயநோய் சிகிச்சையை நாடும் நோயாளிகளுக்கு தரமான சேவையை வழங்க உதவும். மேலும் இச்சிகிச்சைகளைப் பெற பெரும் செலவு செய்து கொழும்பு செல்வதைத் தவிர்த்து யாழ்ப்பாணத்திலேயே தேவையான பராமரிப்பைப் பெறவும் வழிவகுக்கும்.

இலங்கை இதயசங்கம் சுகாதார அமைச்சுடன் யாழ்ப்பாணத்தில் இதயநோய் சிகிச்சையை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

தொடர்ச்சியாக பின்புல உதவிகளை வழங்கி பயிற்சியளித்தல் மற்றும் நோயாளிகளின் அவசரவின் பயணம் என்பவற்றுக்கு உதவ சுகாதார அமைச்சினூடாக ஒழுங்குகள் செய்ய இதய சங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

இலங்கை இதயசங்கம் முதல் முறையாக இடையிட்டுத்தடுக்கும் இதயநோய் சிகிச்சை தொடர்பான தனது பயிற்சி அமர்வை மார்ச் 10,11 ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தியது. இதன் தொடர்ச்சியாக சர்வதேச புகழ்பெற்ற இதயநோய் சிகிச்சை நிபுணர் டொக்டர்.மத்திய சாமுவேல் அவர்களின் பங்களிப்புடனான பாரிய பயிற்சி அமர்வை வருட இறுதியில் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

டொக்டர் லக்ஷ்மன் மற்றும் டொக்டர் குருபரன் ஆகியோர் இருவரும் இதயசத்திரசிகிச்சை வசதிகளை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இது சாத்தியமாக சில காலம் செல்லும். எனினும், இடையிட்டுத்தடுக்கும் இதயநோய் சிகிச்சையானது தற்போதைக்கு யாழ்ப்பாணத்தில் இதயநோய் சிகிச்சையின் தரத்தைப் பெரிதும் மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

# எலும்பு தேய்மானம்

வயதானவர்களுக்கு எலும்புத் தேய்மானம் வருவது இயற்கை. ஆனால் உடற்பயிற்சியின்மை, உட்கார்ந்த நிலையிலேயே வேலை பார்த்தல், கல்சியச் சத்துக் குறைபாடான உணவுப் பழக்கம், துரித உணவுகள் சாப்பிடும் பழக்கம் என எலும்புத் தேய்வுக்கு மேலும் பல காரணங்கள் உள்ளன.

மனித உடலில் 206 எலும்புகள் உள்ளன. இந்த எலும்புகளில் மாற்றங்கள் தொடர்ச்சியாக இருக்கும். எலும்புகளுக்கான அடிக்கட்டமைப்பை புரதங்கள் வலுவாக்குகின்றன. கல்சியம், பொஸ்பேட் போன்ற மினரல்கள் எலும்புகளுக்கு இடையில் பரவி மேலும் வலுச் சேர்க்கிறது. இந்த இயக்கம் உடலில் தொடர்ந்து இருப்பதால் உணவில் அதிக கல்சியம் தேவைப்படுகிறது.


இதற்கு சிறு வயது முதல் பால் மற்றும் பச்சைக் காய்கறிகள் போதுமான அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் உண்ணும் உணவில் உள்ள சத்துக்களை உடல் உட்கிரகித்துக் கொள்வதற்கான உணவு மற்றும் உடற்பயிற்சிகளை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். எலும்பைப் பொறுத்த வரை அளவுக்கு மீறி அழுத்தம் கொடுப்பது மற்றும் விபத்துக்களினால் எலும்பு முறிவு ஏற்படும்.

காயங்களினால் ரத்தக்கட்டு உண்டாகும். மினரல்கள் இழப்பு காரணமாக எலும்புத் தேய்வு ஏற்படும். எலும்புத் தேய்வின் அறிகுறியாக உடலில் வலி ஏற்படுகிறது. எலும்பு வலுவிழக்கும் போது உடல் எடை முழுவதையும் தசைப் பகுதி தாங்குகிறது. இதனால் தசையும் பலவீனம் அடையும். உடல் சோர்வு, வலி, வீக்கம் ஏற்படலாம். மூட்டுப்பகுதியில் வீக்கம் உண்டாகும்.

உடலை அசைப்பதே கடினமாக இருக்கும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் துவங்கும். எலும்புத் தேய்மானம் ஏற்படுவதை தடுக்க கல்சியம் உள்ள உணவுகள் எடுத்து கொள்ள வேண்டும். மேலும் உடற்பயிற்சி செய்யும் போது எலும்புக்குத் தேவையான தாதுக்கள் தசைப்பகுதியில் இருந்து உட்கிர கிக்கப்படும். இதனால் சத்தான உணவு சாப்பிட்டாலும் உடற்பயிற்சி கட்டாயம் அவசியம்.

இதில் எலும்பின் வலிமைக்கு தேவையான ஊட்டச்சத்துகள் கிடைத்து விடுகிறது. இதனால் எளிமையான நடைப்பயிற்சி, வீட்டு வேலைகள் மற்றும் தோட்ட வேலைகளும் இதற்குக் கைகொடுக்கும். எலும்பு மற்றும் மூட்டுக்களில் வலி காணப்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி எலும்பு உறுதித் தன்மை குறித்த பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் எலும்பில் தாதுக்களின் குறைபாடு அளவு அறிந்து அதற்குத் தகுந்த சிகிச்சை செய்து கொள்ளலாம்.

## வேப்பம் பட்டையின் மருத்துவப்பயன்



முதிர்ந்த வேம்பின் வேர்ப்பட்டைப் பொடியுடன் முதிர்ந்த ஆவாரம்பட்டைப் பொடி கலந்து 2 கிராம் அளவாகச் சிறிது சர்க்கரை கூட்டி காலை மாலை வேளைகளில் நீண்ட நாட்கள் சாப்பிட்டுவரத் தொழுநோய் முதலான அனைத்துத் தோல் நோய்களும் குணமாகும். வேப்பெண்ணெய்யில் தலை முழுகிவரச் சன்னி, பிடரி இசிவு, வாத நோய்கள் தீரும்.

வேப்பம்பட்டை 5 பலம், கஸ்தூரி மஞ்சள், பூண்டு, மிளகு, சீரகம் இவை வகைக்கு 50கிராம் எடுத்து இவற்றை இடித்துத் தூளாக்கி ஒரே மாட்டின் பசும்பால் ஒரு படி நல்லெண்ணெய் மூன்றரைப்படி எடுத்து இவையனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். உரிய பதம் வந்ததும் இறக்கி, ஆறியவுடன் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த எண்ணெய்யைத் தேய்த்துக் குளித்து வந்தால் மண்டையிடி, பீனிசம், பாரிசவாதம், சீதளரோகம் சம்பந்தமுடையவர்கள் தோல் சம்பந்தப்பட்ட நோயுடையவர்கள் விரைவில் குணம் பெறுவார்கள்.

நூறு ஆண்டு கடந்த வேப்பமரத்தின் இலை, பூ, பட்டை, வேர்ப்பட்டை, காய் ஆகியவற்றைச் சம அளவில் எடுத்து உலர்த்தி பொடியாக்கி 2-5கிராம் அளவு தேனில் காலை சாப்பிட்டு வந்தால், உடல் வலிமையும் வனப்பும் பெறும். உடலில் எந்த நோயும் போகும். நீரிழிவு, சர்க்கரை குட்டம் முதலான எல்லா வகைத் தோல் நோயும் குணமாகும்.

வேப்பம்பட்டையுடன் நீர் எண்ணெய் மற்றும் பிற மருந்துப் பொருட்களைச் சேர்த்து காய்ச்சி தைலங்களாக தோல் புண், சொறி, சிரங்குகளின் மீது பூசி வந்தால் அவை குணமாகும் என்று மூலிகை மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தான் விரும்பும் குதிரையை விட தன்னை விரும்பும் கழுதையே மேல்



ரேவதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு.

**கேள்வி:** காதலா, நட்பா சிறந்தது பித்தரே. இரண்டுக்கும் உள்ள வேறுபாடு தான் என்ன?

**பதில் :** இரண்டுமே சிறப்பானவை தான். இரண்டுக்கும் அடிப்படை அன்பும் தியாகமுமே. இரு பாலார் மத்தியில் உருவாகும் காதல் திருமணத்தில் முடிந்தால் உடற் சேர்க்கை நட்பில் அது இல்லை. இதுவே வேறுபாடு.



வே. இளங்கோ,
வவுனியா.

**கேள்வி:** திருமணவிடயத்தில் தான் விரும்பும் குதிரையை விட தன்னை விரும்பும் கழுதை மேல் என்கிறார்களே?

**பதில்:** நல்ல உதாரணம் கண்டு பிடித்தீரய்யா. எப்படி என்றாலும் காலால் உதை கிடைப்பது நிச்சயம் என்று பயமுறுத்தப் பார்க்கிறீரா?

பா. பிரசாந்தி,
முல்லைத்தீவு.

**கேள்வி:** ஆறறிவு படைத்த மனிதர்கள் சின்னச் சின்ன விடயத்துக்கே தமக்குள் அடிபட்டுக் கொள்கிறார்களே. அது ஏன் பித்தரே.

**பதில்:** ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள். படிப்பறிவு உள்ள அளவுக்கு பண்பு குறித்துத் தெரிந்து கொள்ளாததன் விளைவு இது.

எம். உலகநாதன்,
கல்முனை.

**கேள்வி:** திட்ட வட்டமாகப் பதில் கூறுங்கள். காணாமல் போனோர் கதி என்ன?

**பதில்:** விசாரித்து வருகிறோம் என்கிறார்கள். எப்போ விசாரித்து முடித்து எப்போ பதில் சொல்வார்கள் என்ற அங்கலாய்ப்பில் காணாமல் போனோரின் உறவினர்கள். இந்த லட்சணத்தில் திட்டவட்டமாய் என்னால் என்ன பதிலைக் கூற முடியும்?

மா. பரந்தாமன்,
மன்னார்.

**கேள்வி:** தாரம் வந்தபின் பெற்ற தாயை மறந்து விடுகிறார்களே சில ஆண்கள். இதைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

**பதில்:** தன் தாயை விட தன் பிள்ளைகளின் தாயை அதிகம் நேசிக்கிறார்கள் என்று மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டியது தான்.

கே. ராதேயன்,
ஆநகரி.

**கேள்வி:** சீதனம் எதுவும் வாங்காமலேயே துணிச்சலாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்யும் ஆண்களைப் பற்றி.

**பதில்:** அவனை மணந்து கொள்ளும் பெண்ணைப் பொறுத்தவரை அவன் தியாகி. அவனது பெற்றோரைப் பொறுத்தவரை துரோகி. மாமன், மாமி, அயலவர்களைப் பொறுத்தவரை அவன் ஒரு ஏமாந்த சோணகிரி.



மு. தேவதாசன்,
பருத்தித்துறை.

**கேள்வி:** அழகு, அறிவு, அன்பு இம்மூன்றையும் கொண்டுள்ள ஒரு பெண்ணை மணமுடிக்க விரும்புகிறேன் கிடைப்பாளா?

**பதில்:** இதே கேள்வியை அவளும் திருப்பிக் கேட்டால் உமது கதி என்ன? இம் மூன்று தகுதிகளையும் நீர் ஒரு சேரக் கொண்டிருக்கிறீரா! என்று முதலில் சிந்தித்துப்பாரும்.




த. பிரவிந்தன்,
பரந்தன்.

**கேள்வி:** அரசுக்கும் தமிழர் தரப்புக்குமிடையேயான பேச்சுவார்த்தை மீண்டும் இடம்பெற வாய்ப்புண்டா?

**பதில்:** பேச்சு என்ற பேச்சே ஒரு பேச்சுக்குத் தான் என்று இப்போதைக்கு ஒரு பேச்சுக்குச் சொல்லி வைக்கிறேன். நடக்கலாம். உலகத்தில் என்னென்னமோ எல்லாம் நடக்கும் போது பேச்சுக்கு இனி வாய்ப்பில்லை என்று எப்படி அறுதியிட்டுக் கூறமுடியும்?

## சொற்சிலம்பம் போட்டி இல: 515



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### மேலிருந்து கீழ்

01. உடற்பயிற்சி
02. மறைவில் தீட்டுவது
03. கீறப்படுவது
04. திடல்
05. உட்புற
06. மனப்பிணி
09. சிறுவர் விளையாடுவது
11. பிடித்தல்
13. பற்றுக் கொண்டவன்
15. வாழ்
17. பழுத்தல்
20. கால அளவீடு
21. ஆண் யானை
23. கச்சேரி

### இடமிருந்து வலம்

01. வடபகுதியில் மட்டும் கைக்கொள்ளப்படும் சட்டம் இது தான்
05. ஆறாம் வேற்றுமை ஒருமையுருபு
07. நாற்காலி
08. நிறுவியவன்
10. உலகம்
12. தந்தை
14. நிகழ்வு
16. இரத்தல்
18. மன்றன் மனம் கவர்ந்தவள்
19. ஒரு வகைக் காய்ச்சல்
20. தன்மை பன்மைச் சொல்
22. அகல்
23. தடிமன் பிடித்தால் வரும்
24. தடி
25. பிரதியுபகாரம்

### சொற்சிலம்பம் போட்டி இல. 515

[illegible] 2012 [illegible] 1000 [illegible]

[illegible]

சுடர் ஒளி [illegible] அலுவலகம்,
361, [illegible] வீதி,
[illegible].

### சொற்சிலம்பம் போட்டி இல: 512 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.விவகாரம், 02.சாட்டும், 03.கடி, 04.அற்புதம், 05.திற, 06.கல்லாதவன், 08.ஆம், 10.தும்பி, 12.பகல், 15.லட்டு, 16.இல்லை, 17.பொறுகு, 18.பாவி, 19.சசி, 20.குவி

**இடமிருந்து வலம்**

01.விசாகம், 04.அதிக, 07.வட்டி, 08.ஆற்றல், 09.கபடு, 10.தும்பு, 11.ரம்பா, 13.தகாத, 14.கவிலம், 16.இல், 17.பொன், 18.பால், 19.சுறுகுடு, 21.விவைவாசி, 22.விகுதி

### போட்டி இல. 512 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — வேல் ஹரிதாஸ், இல.2/10, திருச்செந்தூர் வீதி, புதிய கல்லடி, மட்டக்களப்பு.

**2 ஆம் பரிசு** — எஸ். ஜெயச்சந்திரராசா, இராசேந்திரன் குளம், வவுனியா.

**3 ஆம் பரிசு** — ஸ்ரீ. அனோஜா, கிளி/உருத்திரபுரம் ம.வி.உருத்திரபுரம், கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) எம்.எஸ்.T. பசுபதி,
இல.36, பாலிநகர்,
வவுனிக்குளம்.

(2) சோ.சுவேதா,
பகுதி I-, விசுவமடு மேற்கு,
விசுவமடு.

(3) கோ.பிரேமாவதி,
சுருவில் றோட், உப்புக் குளத்தடி,
ஊர்காவற்றுறை.

(4) மு.அருந்ததி,
சிவன் கோவில் வீதி,
புத்தூர்.

(5) செ.மகிஷா,
5C,சின்ன உப்போடை, வீதி,
மட்டக்களப்பு.

(6) செல்வி. V.இந்துமதி,
மட்/ ஏறா/ தமிழ் மகாவித்தியாலயம்,
ஏறாவூர் -04 செங்கலடி.

(7) வி.புவிராஜ்,
ஈச்சந்தீவு,
கிண்ணியா.

(8) இ.வீரசிங்கம்,
இல.9/2 இராசதுரை வீதி,
வைரவபுளியங்குளம்,வவுனியா.

(9) R.சிவஞானம்,
இல. 29/2, கல்யாணி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

(10) செல்வி. இ.அர்த்தனா,
மே/பா.இ.இரத்தினவேல்,
பெரியகல்லாறு-03,
கல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் போட்டிகளுக்கு தடை விதிக்கவேண்டும்

## தவ்ஹீத் ஜமாத் கோரிக்கை

IPL 5
INDIAN PREMIER LEAGUE

தமிழகத்தில் பொதுத் தேர்வு எழுத உள்ள மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, ஏப்ரல் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐபிஎல் டுவென்டி 20 கிரிக்கெட் தொடருக்கு தடை விதிக்கவேண்டும் என்று தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் பொதுச் செயலாளர் ஆர்.ரஹ்மத்துல்லாஹ் கோரிக்கை விடுத்துள்ளார்.

**ஆபாசத்தின் உச்சக்கட்டத்தை விளையாட்டு போட்டிகளின் வாயிலாக கடை விரிக்கும் கலாச்சாரத்தை இந்தியாவில் ஆரம்பித்து வைத்த ஐபிஎல் டுவென்டி20 கிரிக்கெட் தொடரை உடனடியாக தடுத்து நிறுத்தி, மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் 10ஆம் வகுப்புத் தேர்வுகள் ஏப்ரல் 4ஆம் திகதி முதல் நடைபெற உள்ளது. ஆனால் அதே நாளில் ஐபிஎல் டுவென்டி20 கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகவுள்ளது என்ற செய்தியும், அதற்காக செய்யப்படும் பிரமாண்ட விளம்பரங்களும் கவலை அளிப்பதாக உள்ளது.

கிரிக்கெட் மோகம் கொழுந்து விட்டு எரியும் நம் நாட்டில் கல்வி என்பது 2ஆம் பட்சமாக கருதப்படுகிறது. வாழ்கையின் முக்கியமான தருணத்தில் உள்ள மாணவர்கள் கிரிக்கெட் போதையில் தங்கள் வாழ்கையைத் தடுமாற்றத்திற்கு உள்ளாக்கி விடுவார்களோ என்ற பயம் பெற்றோர்களுக்கும், மாணவர்களின் வாழ்கையில் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது.

ஒரு கிரிக்கெட் போட்டியை பார்க்காவிட்டால் எதையோ பறிகொடுத்த போக்கில் பல மாணவர்கள் அலைவதும், கிரிக்கெட் போட்டிகளை குறித்து பல மணிநேரம் அரட்டை அடித்து நேரத்தை வீணாக்குவதும், ஒவ்வொரு நொடியையும் பயன்படுத்த வேண்டிய பொதுத்தேர்வு நேரத்தில் சிந்திக்க வேண்டியதாக உள்ளது.

ஆபாசத்தின் உச்சக்கட்டத்தை விளையாட்டுப் போட்டிகளின் வாயிலாகக் கடை விரிக்கும் கலாச்சாரத்தை இந்தியாவில் ஆரம்பித்து வைத்த ஐபிஎல் டுவென்டி 20 கிரிக்கெட் தொடரை உடனடியாக தடுத்து நிறுத்தி, மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும். ஐபிஎல் எனும் குழுவை வைத்து கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் உலகின் பணக்கார மாணவர்களின் வாழ்க்கையை குறித்து யோசிக்காமல் முடிவெடுத்ததில் வியப்பில்லை.

பணம் சம்பாதிப்பதற்காக யாரைக் குறித்தும் கவலைப்படாத சாராய வியாபாரிகளும், சமுதாயத்திற்கு மோசமான காரியங்களை கற்று தரும் நடிகர்களும் முதலாளிகளாக இருக்கக் கூடிய ஐபிஎல் குழு, மாணவர்களின் வாழ்கையை காவு வாங்க காத்துக் கொண்டிருப்பதை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஒரு பொறுப்புள்ள அரசு மாணவர்களின் எதிர்காலம் குறித்து கண்டிப்பாகச் சிந்திக்கும். எனவே தமிழகத்தை 2023ல் ஆசியாவின் முதல் இடத்தில் வைக்க நினைக்கும் தமிழக அரசு அதற்கு அச்சாணிகளான மாணவ சமுதாயத்தையும் அவர்கள் பொதுத்தேர்வில் பெரும் மதிப்பெண்ணையும் காக்கும் வகையிலும், பெற்றோர்களின் மனக்கவலைகளை போக்கும் வகையிலும் ஐபிஎல் டுவென்டி20 போட்டிகளை பொதுத் தேர்வுகள் முடிவடையும் வரை (ஏப்ரல் 23 ஆம் தேதி) நடத்த அனுமதிக்கக் கூடாது.

ஐபிஎல் போட்டிகளை நேரடி ஒளிபரப்பு செய்ய உள்ள சோனி மாக்ஸ் தொலைகாட்சியின் ஒளிபரப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் கோரிக்கை வைக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.



# சச்சின் கொகோக்கோலா வருகிறது

இந்திய வீரர் சச்சினின் 100ஆவது சதம் சாதனையைப் பாராட்டி குளிர்பானத்தை 7.2 லட்சம் தங்க நிறத்திலான கான்களில் வெளியிட கோகா கோலா நிறுவனம் முடிவு செய்துள்ளது. இது குறித்து கொகா கோலா இந்தியா நிறுவனம் இயக்குனர் வாசிம் பசீர் கூறியதாவது,

கொகா கோலா நிறுவனத்தின் வரலாற்றிலேயே முதல் முறையாக தனி நபரின் சாதனையை பாராட்டி அவரது முகத்தை தயாரிப்பு பொருளின் கான்களில் அச்சிடப்பட்டுள்ளது. 7.2 லட்சம் தங்க நிறத்திலான கான்கள் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது. இவை அனைத்து குளிர்பானக் கடைகளிலும் கிடைக்கும் என்றார்.

கொகா கோலாவின் தங்க நிறத்திலான புதிய கான்களை அருண் நாராயண் என்பவர் வடிவமைத்துள்ளார்.

## விளையாட்டுத் துளிகள்

★ ஐபிஎல் டி20 தொடரில் புனே வாரியர்ஸ் அணிக்காக விளையாட அழைப்பு வந்துள்ளதாக ஆஸி. டெஸ்ட் அணி தலைவர் மைக்கேல் கிளார்க் கூறுகிறார்

★ ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கி போட்டி, இந்த ஆண்டு இறுதியில் கத்தாரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, தென் கொரியா, சீனா மற்றும் ஜப்பான் அணிகள் பங்கேற்க உள்ளன.

★ மலேசியாவில் நடைபெற்ற கிராண்ட்பரிக்ஸ் பார்முலா -1 கார் பந்தயப் போட்டியில் ஃபெராரி அணியின் ஃபெர்னாண்டோ அலோன்ஸா முதலிடம் பிடித்தார்.

## கிரிக்கெட் + சினிமா கிசுகிசு

இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னாவும், பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலிப்பதாக பாலிவுட்டிலும், இந்திய கிரிக்கெட் வட்டாரத்திலும் கிசுகிசுக்கப்படுகிறது. பாலிவுட்டின் வளர்ந்து வரும் நடிகைகளில் அனுஷ்கா சர்மாவும் ஒருவர். யாஷ் சோப்ராவின், ரப் நே பனாதி ஜோடி என்ற படம் மூலம் அறிமுகமான அவர் தொடர்ந்து பல்வேறு படங்களில் நடித்து இப்போது முன்னணி நடிகையாக உயர்ந்து வருகிறார்.

கடந்த சில மாதங்களாக இவருவரும் ஒன்றாக சுற்றித் திரிவதாகவும் கூறப்படுகிறது. மேலும் கடந்த ஆண்டு இந்திய அணி ஆஸ்திரேலிய சுற்று பயணம் சென்ற போது, அனுஷ்கா தன்னுடைய சூட்டிங்கை ரத்து செய்துவிட்டு ரெய்னாவுடன் ஆஸ்திரேலியே பறந்ததாகக் கூறப்படுகிறது.



# நோ... நோ...



நடிகை அனுஷ்கா சர்மாவுக்கும் தனக்கும் காதல் என்றும், விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் வந்த செய்திகளை மறுத்துள்ளார் கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா.

அனுஷ்கா சர்மாவை லண்டனில் சந்தித்தேன். அங்கு கிரிக்கெட் போட்டியை காண வந்திருந்தார். ஒரு பிரபலம் என்ற முறையில் அறிமுகமாகி ஹாய் சொல்லிக் கொண்டோம். அவ்வளவுதான். அவருடன் எந்த தொடர்பும் இல்லை.

இந்த வதந்திகள் எங்கிருந்து, எப்படி கிளம்பின என்று தெரியவில்லை. எனக்கு இன்னும் ஒரு வருடத்திலோ அல்லது இரண்டு வருடங்களிலோ திருமணம் நடக்கும். ஆனால் உறுதியாக ஒரு விஷயத்தை என்னால் சொல்ல முடியும். அனுஷ்கா சர்மா போன்ற நடிகையை நிச்சயம் திருமணம் செய்து கொள்ளமாட்டேன்.

என்னுடையது நடுத்தர குடும்பம். என்னையும் எங்கள் குடும்பத்தையும் புரிந்து கொண்ட [illegible] வருங்கால மனைவி புத்தி கூர்மை உள்ளவராகவும் எனக்கு நல்ல [illegible] வேண்டும். எனது கிரிக்கெட் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களில் என்னுடன் இருந்து ஆத்மார்த்தமாக அன்பு செலுத்துபவராகவும் விளங்க வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## டைடானிக் இயக்குனரின் சாதனை!

பூமியின்மிக ஆழமான கடல் பகுதியில் 11 கி.மீ தூரம் பயணித்து மூன்று மணி நேரம் தங்கியிருந்து சாதனைப் படைத்துள்ளார் ஹாலிவுட்டின் நம்பர் ஒன் இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன்.

டெர்மினேட்டர், டைடானிக், அவதார் என மெகா வெற்றிப் படங்களின் இயக்குநர் கேமரூன்.

தற்போது இவர் அமெரிக்காவில் பசிபிக் கடலில் உள்ள குலாம் தீவில் மரியானா டிரெஞ்ச் என்ற இடத்தில் படப்பிடிப்பை நடத்தி வருகிறார். இங்கிருந்து 200 கிமீ தூரத்திலுள்ள குவாம்தீவுப் பகுதியில்தான் அவர் இந்த சாகஸத்தை நிகழ்த்தினார்.

57 வயதான கேமரூன், ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நீர்மூழ்கி கப்பல் மூலம் ஆழ்கடலில் 35,756 அடி ஆழத்தில் அதாவது 11 கி.மீற்றர் ஆழத்தில் பயணம் செய்து சாதனை படைத்தார். அங்கு அவர் 3 மணி நேரம் தங்கியிருந்தார். ஆனால் முதலில் 6 மணி நேரம் தங்க முடிவு செய்து இருந்தாராம்.

ஆழ்கடலில் மூழ்கி பயணம் செய்த இவர் கடல்வாழ் படிப்புக்குப் பயன்படும் உயிரினங்களின் சாம்பிள்களை சேகரித்தார். இவர் ஆழ்கடலில் பயணம் செய்வதற்கு வசதியாக விசேஷமான நீர் மூழ்கி கப்பல் வடிவமைக்கப்பட்டது. அதில் அவர் பயணம் செய்தார்.

35,756 அடி ஆழத்துக்கு செல்ல இவர் 2 மணி நேரம் 36 நிமிடங்கள் எடுத்துக்கொண்டார். ஜேம்ஸ் கேமரூன் இந்தியாவின் புராதனமான யோகா கலை பயின்றவர். அதன் மூலம் மூச்சுப்பயிற்சி பெற்றுள்ளார். அதுவே இவர் ஆழ்கடலில் நீண்ட நேரம் தங்கியிருக்க உதவியது.

முன்னதாக இவர் பயணம் செய்த சிறிய நீர்மூழ்கி கப்பல் எடுத்து வரப்பட்டது. பின்னர் ஹெலிகொப்டர் மூலம் கடலில் இறக்கப்பட்டது. இந்த சாதனை நிகழ்த்தியதன் மூலம், ஆழ்கடலில் தனியாக பயணம் செய்த முதல் நபர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

கடந்த 7 ஆண்டுகளாக இந்தக் கடல் பயணத்துக்கு முயற்சி செய்து வந்தார் கேமரூன் என்பது குறிப்பிடத்தக்கது. தான் பயணித்த பகுதியின் அரிய புகைப்படங்களை இரு பரிமாணப் படங்களாக எடுத்துள்ளாராம் கேமரூன்.

கேமரூன் பயணித்த இடம் அமெரிக்காவின் கிராண்ட் கேன்யனை விட 120 மடங்கு பெரியதாகும். எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தை விட ஒரு மைல் அதிக ஆழமானதாகும்.

## 101 வயதில் சாகசம்

அமெரிக்காவில் உள்ள யதா மாநிலத்தை சேர்ந்த 101 வயதான மேரி ஹார்டிசன், தனது பிறந்த நாளையொட்டி பாரா கிளைடர் விமானத்தில் பறந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இந்த சாதனை பற்றி இவர் கூறும்போது, எனது 75 வயது மகள் பாராகிளைடர் விமானத்தில் பறந்ததை நான் பார்த்தேன். அது முதல் நானும் அவ்வாறு பறக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதை நிறைவேற்றி விட்டேன் என்றார். மேலும் இவரை இவரது 4 தலைமுறை குடும்பத்தினர் வாழ்த்தியது குறிப்பிடத்தக்கது.



## வினோத பூ

பொதுவாக பூக்கள் என்றால் மணமானது என்று தான் அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் இங்கு காணப்படும் பூவின் மணம் இறந்த உயிரினத்தின் உடல் அழுகும் பொழுது ஏற்படும் துர்நாற்றத்தைப் போன்று காணப்படும்.

Corpse flower, Amorphophallus titanium என்றழைக்கப்படும் இப்பூவின் விசேட அம்சம் என்னவென்றால் வருடத்திற்கு மூன்று முறை மட்டுமே பூக்கின்றது என்பதுதான்.





## நண்பர்கள் அதிகம் என்றால் பெரிய மூளையா?

உங்களுக்கு எத்தனை நண்பர்கள் இருக்கின்றார் கள் என்பதனை உங்களின் மூளையின் அளவு தான் தீர்மானிக்கின்றது என்று சுவாரஷ்யமான ஆய்வு ஒன்று கூறுகின்றது.

பிரித்தானியாவின் புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் பல் கலைக்கழகத்தின் பேராசிரியர்களில் ஒருவரான Robin Dunbar என்ப வரின் தலைமையிலான குழுவினரே மேற்படி சுவாரஷ்யமான செய்தியைக் கண்டறிந்துள் ளனர்.

மூளையின் அளவு பெரிதாக இருந் தால் அவருக்கு ஏராளமான நண்பர்கள் இருப்பார்களாம். இந்த ஆய்வு முடிவுகள் பல்வேறு தரப்பினரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளன. ஏராளமான நண்பர்கள் உள்ளவர் களைப் பார்த்து இனிமேல் நீங்களும் தயங்காமல் கேட்கலாம். உங்களுக்கு என்ன பெரிய மூளையா என்று? உண்மைதானே.

## 2,488 மீற்றர் திருமண ஆடை

பெண்களுக்கான திருமண ஆடையின் பின்னால் தொங்கும் பகுதியை மிகவும் நீளமுள்ளதாக அமைத்து அணிவதிலும் கின்னஸ் சாதனை நடந்து இருக்கிறது.

இதில் முந்திய சாதனை 2,488 மீற்றர் நீளமுள்ளதாக இருந்தது. இந்த சாதனையை ருமேனியா நாட் டில் புசாரெஸ்ட் நகரில் நடந்த நிகழ்ச்சியில், எப்பா என்ற 17 வயது மாடல் பெண் முறியடித்தார்.

மேலும் அவர் 2,750 மீற்றர் நீளமுள்ள திருமண ஆடையை அணிந்து சாதனை புரிந்தார். இந்த ஆடை அமைக்க 100 நாட்கள் ஆனது. இதற்கு 4,700 மீற்றர் துணியும் 1,857 ஊசிகளும் பயன்படுத்தப்பட்டன



## கனடாவில் 67வயதில் ஓய்வு

கனடாவில்விரைவில் சமர்ப்பிக்கப்படும் மத்திய நிதிநிலை அறிக்கையில் ஓய்வு கிட்டத்தட்ட சில மாற்றங் கள் நடைபெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இதில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றமாக ஓய்வுபெறும் வயது 65 இல் இருந்து 67 ஆக [illegible]

## போச்சியில் பால்குடிக்கும் பெண்நாய்

Beyonce என்ற இந்த நாயின் நீளம் நான்கு இஞ்சிகள் மட்டுமே ஆகும்.

இந்த நாய் பிறந்தபோது அத்தனை ஒரு கரண்டியில் வைத்து தூக்கக் கூடியதாக இருந்ததாக இதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.



தற்போது 19 நாள் ஆன இந்த நாயை ஒரு ஐபோனில் வைக்கக் கூடியதாக உள்ளது. இந்த நாய் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள El Dorado Hills என்ற இடத்தில் உள்ளது.

குறித்த பொம்பிளை நாயின் வாய் சிறிதாக உள்ளதால் மணித்தியாலத்துக்கு ஒரு தடவை போச்சியில் பாலூட்ட சிரமமாக உள்ளதாக அதன் உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UTHAYAN

Guest House - I



Spend your Holidays with homely hospitality in Jaffna. Located 1 KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.



No. 392/6, Navalar Road, Jaffna.

021 - 2225660, 021 - 5677608, 071 - 5 36 36 36



UTHAYAN

Guest House - II

No. 12, Sivagurunathar Lane,
Off Kasthuriyar Road, Jaffna.

T.P: 021 – 2222330,
021 – 5677603, 071 - 5 36 36 36

Spend your Holidays with homely hospitality in Jaffna. Located ½ KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.






## 50 இற்கும் மேற்பட்ட மொழியில் பகவத் கீதை

ரஷ்யாவில் சர்ச்சைக்கு உள்ளாகி வெற்றி பெற்ற பகவத்கீதையை போலந்து பெண் ஒருவர் போலிஷ் மொழியில் மொழிபெயர்க்கிறார்.

போலந்து நாட்டை சேர்ந்த அன்னா ரசின்ஸ்கா (வயது 60). இவர் வாரணாசியில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தங்கியிருந்து சமஸ்கிருத மொழியில் முனைவர் பட்டம் பெற்றவர்.

நான்கு குழந்தைகளுக்கு தாயான இவர், தனது கணவரையும் குழந்தைகளையும் சமஸ்கிருத மொழியில் பேசவும் எழுதவும் ஆர்வத்தை உருவாக்கினார்.

தற்போது அவர்கள் வீட்டில் சமஸ்கிருத மொழி சரளமாக பேசப்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாது இவரது சகோதரரும் தன்னுடைய பெயரை யோகானந் என்று மாற்றி வாரணாசியில் வசித்து வருகிறார்.

இந்நிலையில் அன்னா ரசின்ஸ்கா, பகவத் கீதையை போலிஷ் மொழியில் மொழிபெயர்க்க உள்ளார்.

இதுகுறித்து போலந்து கலாசாரத்துறை தலைவர் ஜானுஸ்கிரிஸ் ஜோவ்ஸ்கி, அன்னாவின் சேவைகளை வெறும் வார்த்தைகளால் புகழமுடியாது என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து போலாந்திற்கான இந்திய தூதர் மோனிகா கபலா மோஹதா, சுயநலமில்லாத இவரது சேவையால் வளரும் தலைமுறைக்கு ஒரு சிறந்த புத்தகம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

வாழ்க்கைத் தத்துவங்களை உள்ளடக்கிய பகவத்கீதை 50க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறியவர் அழகிப்போட்டியில் இருந்து நீக்கப்பட்டார்



ஆணாக பிறந்து பெண்ணாக மாறியவர் என்கிற காரணத்தால் கனேடிய பிரபஞ்ச அழகிப் போட்டி 2012 இல் இருந்து நீக்கப்பட்டு உள்ளார் ஒரு போட்டியாளர்.

வாங்கூவரைச் சேர்ந்த Jenna Talackova என்பவரே இவர். இறுதிப் போட்டி ரோரன்ரோவில் எதிர்வரும் மே மாதம் இடம்பெற உள்ளது. இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இருந்த 65 பேரில் ஒருவர் என இவர் முன்பு அறிவிக்கப்பட்டு இருந்தார்.

ஆனால் இவர் இறுதிப் போட்டியில் பங்கேற்கின்றமையில் சிக்கல் இருக்கின்றது என ஏற்பாட்டாளர்களால் சில நாள்களுக்கு முன் இவருக்கு தெரிவிக்கப்பட்டது.

ஆணாக பிறந்தவர் என்கிற காரணத்தால் இப்போட்டியில் பங்கேற்கின்றமைக்கு தகுதி அற்றவர் என ஏற்பாட்டாளர்கள் தற்போது அறிவித்து விட்டார்கள். இவரது புகைப்படங்களை உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்தும் தூக்கி விட்டார்கள்.

இப்போட்டியில் பங்கேற்கின்றமைக்கு கனேடிய பிரஜையாக இருக்கவேண்டும், 18 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும், திருமணமானவராகவோ, கர்ப்பிணியாகவே இருக்கக் கூடாது ஆகியனவே அடிப்படை தகைமைகளாக சொல்லப்பட்டு இருந்தன என்றும் பால் மாற்றம் குறித்து அல்லது பால் மாற்ற சிகிச்சை குறித்து எதுவும் சொல்லப்பட்டு இருக்கவில்லை என்று கூறுகின்றார். இவர் 2010 ஆம் ஆண்டு பால் மாற்ற சிகிச்சை மேற்கொண்டவர்.

ஆனால் நான்காவது வயதில் இருந்து பெண்ணாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றார். பதினான்காவது வயதில் ஹோர்மோன் சிகிச்சையை ஆரம்பித்தார். தாய்லாந்தில் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற திருநங்கைகளுக்கான அழகுப் போட்டியில் பங்கேற்று இருந்தார். பெண் என்றே ஊடகங்களுக்கு சுய பிரகடனம் செய்து பெருமைப்பட்டுக் கொண்டார்

## மைக்கேல் ஜாக்சனின் வீடு ஏலத்தில்... 23.9 மில்லியன் அமெரிக்க டொலர்



உலகப்புகழ் பெற்ற மறைந்த பிரபல பொப் இசை பாடகர் மைக்கேல் ஜாக்சனின் வீடு விற்பனைக்கு வர உள்ளது. அமெரிக்க பொப் இசை பாடகர் மைக்கேல் ஜாக்சன் 2009ஆம் ஆண்டு அதிக போதை மருந்தை உட்கொண்டதன் காரணமாக மரணமடைந்தார். லொஸ் ஏஞ்சல்சில் உள்ள பிவேர்லி ஹில்ஸ் பகுதியில் உள்ள வீட்டில் தான், இவர் கடைசியாக வசித்தார்.

ஏழு படுக்கை அறைகளும், 13 கழிப்பறைகளும், ஏழு கார் நிறுத்தும் இடங்களும் கொண்ட இந்த வீடு தற்போது விற்பனை செய்யப்பட உள்ளது. கடந்த 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17,000 சதுர அடி கொண்ட இதே வீடு விற்பனைக்கு வந்தது. ஆனால் சில காரணங்களால் இந்த வீடு விற்பனை செய்வது தள்ளிப் போடப்பட்டது.

ஆனால் வீட்டிலிருந்த ஓவியங்கள், விளக்குகள், வெள்ளிப் பொருள்கள் ஆகியவை கடந்தாண்டு விற்பனை செய்யப்பட்டன. தற்போது இந்த வீடு மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளது. 23.9 மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு இந்த வீடு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, ஏப்ரல் 01 ஆம் திகதி வெளியிடப்பட்டது.